# அரங்கம்
செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் வெள்ளி, ஆவணி (ஆகஸ்ட்) 17, 2018. இதழ் - 26




இலஞ்சம் , ஊழல் மற்றும் மோசடி தொடர்பிலான
இலவச சட்ட ஆலோசனைக்கு
அழையுங்கள்
011 2 501 503
மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76
TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
நேர்மையின் புகலிடம்
இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு - 05




## உள்ளூரில் உதவ வந்து, நொந்துபோன சில புலம்பெயர் தமிழர்!

பக்கம் - 03



## உறவுச் சிக்கல் : வாழ்வின் நோக்கத்தை தரம் தாழ்த்தாதீர்கள்

கணவன் இரண்டு ஆண்டுகளாக மனைவியைத் தொட்டுத் தழுவ வில்லை,

பக்கம் - 20



## சிங்கள சினிமாவை வளர்த்து தேசிய பொருளாதாரத்தையும் ஊக்குவித்த சினிமாஸ் குணரத்தினம்

பக்கம் - 08



## பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு!

கல்முனையில் நடுத்தெருவில் அநாதரவாக 90வயது தாயை தவிக்கவிட்டுச்சென்ற

பக்கம் - 17





# ‘உன்னிச்சை வரை தற்காலிக ஏற்பாட்டில் விரைவில் குடிநீர்’

--குடிநீர் விநியோக அதிகாரி தகவல்--

மட்டக்களப்பு மாவட்டத்தின் முக்கிய நீராதாரமான உன்னிச்சை குளத்தை தன்வசம் கொண்டிருந்தும், குடிநீர் விநியோகம் இதுவரை கிடைக்காத உன்னிச்சை உட்பட படுவான்கரையின் பெரும்பாலான பகுதிகளுக்கு இவ்வருட இறுதியளவில், தற்காலிக ஏற்பாட்டின் அடிப்படையில், குடிநீர் விநியோகம் வழங்கப்படும் என்று குடிநீர் விநியோகத்துறையின் பிராந்திய முகாமையாளர் டி. ஏ. பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்தப் பகுதிகளுக்கு குடிநீரை வழங்குவதற்கான நிரந்தர ஏற்பாட்டுக்காக இந்திய அரசாங்கத்தின் உதவியுடனான 700 மில்லியன் ரூபாய் திட்டம் ஒன்றை தாம் அரசாங்கத்துக்கு சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பிந்தங்கிய படுவான்கரையில் இருக்கும் உன்னிச்சை குளத்தில் இருந்து மட்டக்களப்பு நகர் உட்பட எழுவான்கரையில் உள்ள பல இடங்களுக்கும் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. ஆனாலும், இந்த திட்டத்தின் கீழ் படுவான்கரை மக்களுக்கு குடிநீர் விநியோகம் வழங்க ஏற்பாடு செய்யப்படவில்லை.

தற்போது கடுமையான வெயில் காரணமாக படுவான்கரை பகுதியில் கிணறுகள் எல்லாம் வற்றிவிட, அப்பகுதி மக்கள் நீருக்கு கடுமையான சிரமங்களை எதிர்கொள்கிறார்கள்.

இந்த நிலையில், தமது பகுதியில் உள்ள நீரேந்து ஆதாரத்தில் இருந்து ஏனைய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட, தமது பகுதிக்கு மாத்திரம் குடிநீர் விநியோகம் ஏன் இல்லை என்று அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக கேட்ட பொழுதே, குடிநீர் விநியோகத்துறையின் பிராந்திய முகாமையாளர் இந்த தற்காலிக ஏற்பாட்டு உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

உன்னிச்சையில் இருந்து வவுணதீவு வரை நீரைக் கொண்டுவந்து அங்கு சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்து, அங்கிருந்து எழுவான்கரைப் பகுதிக்கு நீர் விநியோகம் செய்யப்படுகின்றது. ஆனால், வவுணதீவில் இருந்து மேட்டுப்பாங்கான படுவான்கரைக்கு திரும்பவும் நீரைக் கொண்டு சென்று விநியோகிக்க ஏற்பாடு இல்லை. உன்னிச்சையிலேயே சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்திருந்தால், இந்தப் பிரச்சினை வந்திருக்காதே என்று கேட்டதற்கு பதிலளித்த பிரகாஷ் அவர்கள், உண்மையில் சுத்திகரிப்பு நிலையத்தை உன்னிச்சையிலேயே அமைக்க திட்டமிட்டிருந்தாலும், இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2008ஆம் ஆண்டுப்

தொடர்ச்சி... (பக்கம் -11 )

## கேரளாவில் பெருத்த வெள் ளம்



இந்தியாவின் கேரள மாநிலம், 94 ஆண்டுகளுக்கு பிறகு கோரமான வெள்ள பேரிடரைச் சந்தித்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் கேரளாவின் 14 மாவட்டங்களும் முழுவதும் பாதிக்கப்பட்டு, 67 பேர் பலியாகியுள்ளனர். குறிப்பாக புதன்கிழமை (15ஆகஸ்ட்) அன்று

தொடர்ச்சி... (பக்கம் -03 )




கென்றிச்
பொற் கடன்
அடகுச் சேவை
ஒரு பவுனுக்கு
50,000/- முதல்
செயற்திறன் மிக்க சிநேகபூர்வ சேவை
எந்தவொரு கிளையிலும் பணத்தைச் செலுத்த முடியும்.
தங்க நகை கடன் முதிர்ச்சியின் போது SMS மூலம் அறிவித்தல்
சகல தங்க ஆபரணங்களுக்கும் முழுமையான இலவசக் காப்புறுதி
0703 666 620
KANRICH FINANCE
Relationships without borders
இல. 439/441. திருமலை வீதி, மட்டக்களப்பு. 011 5 111 521

## கூடைப்பந்து சுற்றுப்போட்டி : புனித மிக்கல் கல்லூரி முதலிடம்



தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் அணிகளை தேர்வு செய்யும் பொருட்டு யாழ் நகரில் நடைபெற்ற தகுதிகாண் கூடைப்பந்து சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரி முதலிடத்தை பெற்று தேசிய போட்டியில் பங்குபற்றுவதற்கான தகுதியை பெற்றுள்ளது.


15 வயதிற்குட்பட்ட பாடசாலைகளுக் கிடையிலான தகுதிகாண் கூடைப்பந்து சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரி யாழ் மத்திய கல்லூரிக்கு எதிராக இறுதிப்போட்டியில் மோதி, 64-36 என்கின்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி வெற்று தகுதிச்சுற்றில் முதலிடத்தை பெற்றுக் கொண்டது.

இப்போட்டியில் அணித்தலைவர் தயான் சிறப்பான பெறுபேறுகளை பெற்றுக் கொடுத்து, தனது அணியை வெற்றி பெறச்செய்ததுடன் அணியை சிறப்பாக வழி நடத்தியுள்ளதாக புனித மிக்கல் கல்லூரியின் கூடைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர் ஆ. சந்துரு தெரிவித்தார்.

9 பாடசாலைகள் கலந்துகொண்ட இச்சுற்றுப்போட்டியில், முதல் மூன்று இடங்களை முறையே மட்டக்களப்பு மிக்கல் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியன பெற்று, தேசியமட்ட போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளனர்.

(ஜெயா)

## ஆடி அமாவாசை கன்னியா, திருக்கரைசையம்பதி...



ஆடி அமாவாசை விரதத்தினை இந்துக்கள் அகிலமெங்கும் சனிக்கிழமை 2018.08.11 அனுஸ்டித்தனர். வரலாற்று பெருமை மிக்க கன்னியா வெந்நீரூற்றில் முதல் முறையாக இறந்த ஆத்மாக்களுக்கு பிதர்கடன் செய்யப்பட்டது. இராவணனால் இறந்த தனது தாயருக்கு இங்கு பிதர்கடன் செய்யப்பட்டதாக இதிகாசம் கூறுகிறது. தென்கைலை ஆதீனமும், இராவணன் சேனை அமைப்பும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன. பெருமளவிலானோர் இதில் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டு பிதர்கடன் செய்தனர்.

மூதூர் பிரதேச மக்கள் அகத்திய முனிவர் தீர்த்தமாடிய மகாவலி கங்கை கரை திருக்கரைசையம்பதியிலும், , தம்பலகாமம் பிரதேச அடியவர்கள் சோலை வெட்டுவான் கங்கை கரையிலும் தீர்த்தமாடினர்.

(கதிரவன் திருகோணமலை)

## 25வது ஆண்டு நிறைவு




திருகோணமலை முபீதாஸ் நிறுவனம் 25வது வருட நிறைவை ஒட்டி வாடிக்கையாளர்களுக்கு அதிர்ஸ்ட பரிசுகளை வழங்கி உள்ளது.

சித்திரை வைகாசி மாதங்களில் 5,000.00 மேல் பொருட்களை கொள்வனவு செய்தவர்களுக்கு அதிர்ஸ்ட சீட்டு ஒன்று வழங்கப்பட்டது.

இவ்வாறு 1700 சீட்டுகளில் இருந்து முதல் பரிசு பெற்றவருக்கு 249,990.00 பெறுமதியான டியோ உந்துருளி பரிசாக வழங்கப்பட்டது.


இதனை உவர்மலை மத்திய வீதியில் வசிக்கும் ஆத்திமேடு தமிழ் மகா வித்தியாலய ஆசிரியை தீருமதி பி.ஜீவகலா பெற்றுக் கொண்டார்.

மேலும் 10 அதிர்ஸ்டசாலி வாடிக்கையாளர்களுக்கு 5,000.00 பெறுமதியான பணவரவுத்துண்டுகள் வழங்கி வைக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை 2018.08.12 காலை வியாரநிலையத்தில் நடைபெற்ற 25வருட நிறைவு நிகழ்வில் வைத்து திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் தும்மிந்த ராஜபக்ஸ, ஆசிரியை பி.ஜீவகலாவுக்கு பரிசினை (அதன் மாதிரி சாவியினை) வழங்கி வைத்ததுடன் உந்துருளியையும் கையளித்தார்.

(கதிரவன் திருகோணமலை)

## விளாவட்டவான் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய உற்சவ பாற்குடபவனி



மட்டக்களப்பு - மண்முனை மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட விளாவட்டவான் அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த திருச்சடங்கு பெருவிழான் பாற்குடபவனி 11.08.2018 அன்று இடம்பெற்றது.

விளாவட்டவான் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி ஆரம்பமாகி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தை வந்தடைந்ததும் உற்சவகால குரு சிவஸ்ரீ .ச.கோபாலப்பிள்ளை அவர்களினால் பாலாபிசேகம் இடம்பெற்றது.

(விளாவூர் நிருபர்)

## 'மாநகர அபிவிருத்திக்காகவே நாமும் வந்திருக்கிறோம்'



எமது மாநகரசபை அபிவிருத்திப் பாதையை நோக்கிச் செல்லவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதற்காகவே நாங்கள் இந்தச் சபைக்கு வந்திருக்கின்றோம். எனவே எங்களை

தொடர்ச்சி... (பக்கம் -23 )

## கொத்தியாபுலை ஸ்ரீகிருஸ்ணா வி. கழகத்தின் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி



மட்டக்களப்பு - மண்முனை மேற்கு கொத்தியாபுலை ஸ்ரீகிருஸ்ணா விளையாட்டுக் கழகம் தனது 23வது ஆண்டு நிறைவை முன்னிட்டும் கிராமத்தில் உயிர் நீர்த்த உறவுகளின் ஞாபகார்த்தமாகவும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியினை 11ம்,12ம்,13ம் திகதிகளில் ஸ்ரீகிருஸ்ணா விளையாட்டு மைதானத்தில் நடாத்தி இருந்தார்கள். இந்தச் சுற்றுப் போட்டிக்கு 42 அணிகள் பங்குபற்றியிருந்தன.

இறுதிப் போட்டிக்கு மண்முனை மேற்கு பிரதேசத்தில் இருந்து விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகமும் நடராஜானந்தபுரம் சக்தி விநாயகர் விளையாட்டுக் கழகமும் தெரிவாகியிருந்தன.

இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று, முதலாம் இடத்தினை நடராஜானந்தபுரம் சக்தி விநாயகர் விளையாட்டுக் கழகமும், இரண்டாம் இடத்தினை விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகமும், மூன்றாம் இடத்தினை காஞ்சிரங்குடா ஜெகன் விளையாட்டுக் கழகமும், நான்காம் இடத்தினை களுமுந்தன்வெளி விநாயகர் விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன.

இறுதி நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியச்சகர், மண்முனை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் செ.சண்முகராஜா, உப தவிசாளர் பொ. செல்லத்துரை, கொத்தியாபுலை சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

(விளாவூர் நிருபர்)

## சமுர்த்தி சமூக பாதுபாப்பு நிதியில் 57 இலட்சம் ரூபா மோசடி

**சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் 6 பெண்கள் உட்பட 8 பேர் கைது,**

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்திலுள்ள உள்ள தலைமை சமுர்த்தி திணைக்கள சமூகப் பாதுகாப்பு நிதியின் 57 இலட்சம் ரூபாவை காசோலை மூலம் மோசடி செய்த குற்றச்சாட்டில், அங்கு கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் புல்லுமலை பிரதேசத்தைச் சேர்ந்த 6 பெண்கள் உட்பட 8 பேரை

தொடர்ச்சி... (பக்கம் -23 )

## இலங்கை கல்வி நிருவாகசேவை தரம்1ற்கு 79பேர் பதவியுயர்வு!

இலங்கை கல்வி நிருவாக சேவை முதலாம் தரத்திற்கு நாடளாவியரீதியில் 79 கல்வி அதிகாரிகள் முதற்கட்டமாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இலங்கை கல்வி நிருவாகசேவையின் இரண்டாந்தர அதிகாரிகளான இவர்கள் நாடாளாவிய ரீதியில் மாகாண வலய கல்விப்பணிமனைகளில் கடமையாற்றி வந்தனர்.

பதவியுயர்த்தப்பட்ட 79 பேரில்; 51 சிங்கள, 20 தமிழ், 08 முஸ்லிம் கல்வி அதிகாரிகள் அடங்குகின்றனர்.

பதவியுயர்த்தப்பட்ட 20 தமிழ் அதிகாரிகளின் பெயர் வருமாறு:

எஸ்.மனோகரன், என்.விஜேந்திரன், வீ.மயில்வாகனம், கே.சத்தியநாதன்; எம். உலகேஸ்பரம், என்.தெய்வேந்திரராஜா, எம்.இராதாகிருஸ்ணன், வை.ரவீந்திரன், எஸ்.புஸ்பலிங்கம், எஸ்.சுந்தரசிவம், எஸ்.நந்தகுமார், ஏ.ஸ்ரீஸ்காந்தராஜா, கே.வரதராஜமூர்த்தி, ஏ.இளங்கோ, ரிஜே. குயின்ரஸ், திருமதி எல்.எம்.வினிற்றன், திருமதி எஸ்.எஸ்.செபஸ்ரியான், திருமதி பி.கணேசலிங்கம், ஏ.நளினி திருமதி பி.இராமநாதன்.

பதவியுயர்த்தப்பட்ட 08முஸ்லிம் அதிகாரிகளின் பெயர்வருமாறு:

எம்.எஸ்.அப்துல் ஜலீல், எம்.எம்.சியான், எம். ஜ.எ.முத்தலிப், எ.எல்.எம்.காசிம், பி.எம்.நசீர், எம்.ஜ.சேகுஅலி, திருமதி எம்.எம்.மன்சூர், திருமதி எம்.ரி.எஸ்.பாஸியா.

பதவியுயர்வு பெற்றவர்களில் 11பேர் ஓய்வுபெற்றவர்களாவர். அறுவர் இவ்வாண்டுக்குள் ஓய்வுபெறவிருப்பவர்களாவர்.

இவர்கள் அனைவரும் 4.1.1999இல் இ.க.நி. சேவை தரம் 3இல் நியமனம் பெற்று பத்து வருடங்களின் பின்னர் 4.1.2009 இல் இ.க.நி.சேவை தரம் 2இல் நியமனம் பெற்றவர்களாவர்.

இது முதற்கட்டமாக வழங்கப்படுகின்ற பதவியுயர்வாகும். தேவையான தகைமையைப் பூர்த்தி செய்த பிற்பாடு இன்னும் சிலருக்கு பின்னர் வழங்கப்படவிருக்கின்றதாகத் தெரியவருகின்றது.

(காரைதீவு நிருபர் சகா)

# உள்ளூரில் உதவ வந்து, நொந்துபோன சில புலம்பெயர் தமிழர்!

*“இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு வெளிநாட்டில் புலம்பெயர்ந்த தமிழர்கள் உதவுவதில்லை.”*

கடந்த காலத்தில் நான் உட்பட, பலரும் பேசிய விவகாரந்தான் இது. போருக்காக சேர்க்கப்பட்ட பணத்தை தம்வசம் வைத்திருக்கும் தமிழர்கள், அந்தப் பணத்தை இங்கு, போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வர வேண்டும் என்பது உட்பட வெளிநாட்டுத் தமிழர்கள் பல வழிகளில் இங்கு உதவ வேண்டும் என்பதை நான் உட்பட பலரும் எழுதியும் உள்ளோம்.

ஆனால், இங்கு நான் பேசவிளைவது இன்னுமொரு விடயம். இதனோடு சம்பந்தப்பட்டது.

இங்கு நாட்டில் உள்ள மக்களைப் பொறுத்தவரை புலம்பெயர்ந்த தமிழர் உதவவில்லை என்ற குற்றச்சாட்டு ஒரு பகையுணர்வுடனான குற்றச்சாட்டின் அளவுக்கு பரந்து காணப்படுகின்றது.

ஆனால், இப்போது நிலைமையில் மாற்றம் இருக்கிறது, பிரச்சினை வேறுபுறம் திரும்பியிருக்கிறது.

போர்ப் பணத்தை பதுக்கியவர்கள் எப்படி என்பது எனக்கு சரியாகத் தெரியாது, ஆனால், புலம்பெயர் உறவுகள் பெரும்பாலானோர் இலங்கையில் உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவத் தொடங்கியுள்ளார்கள். அவர்கள் அதனை ஒரு ஒருங்கிணைந்த வகையில் செய்யவில்லை, அல்லது இங்கு தேவையுள்ள அளவுக்குச் செய்யவில்லை என்று கூறலாமே அன்றி, அவர்கள் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை தொடர்ச்சியாகக் கூறமுடியாது. அவர்கள் செய்யத் தொடங்கியுள்ளனர். பல வழிகளிலும் நிதியீட்டி இங்கு செய்யத் தொடங்கியுள்ளனர்.

ஆனால், அந்த நிதியைப் பெற்று, இங்கு அதனை உரியவகையில் செயற்படுத்த என்ன ஏற்பாடு உள்ளூரில் இருக்கிறது? அதுதான் இப்போது கேள்வி.

அதற்கான ஏற்பாடு அரசாங்கத்தில் போதுமான அளவுக்கு கிடையாது. அவர்களை வரவேற்று உதவியை பெற்று, உரியவகையில் அதன் மூலம் நீடித்த பலனை பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கச் செய்ய போதுமான ஏற்பாடுகள் இங்கு கிடையாது. அதனை இலகுவாக செய்வதற்கு ஏதுவான அலகு எதுவும் இங்கு கிடையாது. ஓரளவு இருப்பவையும் ஊழல் போன்ற காரணங்களால் இலகுவில் அணுகப்பட முடியாதவையாக இருப்பதாக உதவ வந்த பலர் கவலைப்பட்டுள்ளனர்.

சிலர் தாமே தமது முயற்சியில் சில உதவித் திட்டங்களை ஆரம்பித்தாலும் அவற்றை சமூகமாக உள்வாங்கி மக்களுக்கு சென்றடையச் செய்வதில் ஒரு மெத்தனப் போக்கே உள்ளூர் சமூகத்தில் காணப்படுகின்றது.

இங்கு உதவ வந்த பலர் மனவிரக்தியுடன் தமது புலம்பெயர் நாடுகளுக்கு திரும்பியுள்ளதை நான் அறிவேன். வேறு சிலர் இங்கு வந்து சமூக அபிவிருத்திக்காக கோடிக்கணக்கில் பணத்தை கொட்டியும், உரிய விளைவை காணமுடியாமல், நொந்துபோனதையும் நாம் அறிவோம்.

உண்மையில் வரும் பணத்தை உரிய வகையில் ஏற்று, அதனை உள்ளூர் மக்களின் நலனுக்கு பயன்படுத்துவதற்கான நேரடி ஏற்பாடுகள் இங்கு இல்லாத வரை, எவ்வளவு பணம் புலம்பெயர் உறவுகளிடம் இருந்து வந்தாலும் அது கடலில் இறைத்த ஒன்றாகவே போய் முடியும்.

பணம் வருவதற்கு முன்பாகவே திட்டமிட்ட அளவிலான ஏற்பாடுகள் தேவை. வரும் பணம் ஒன்றும் சும்மா வருவதில்லை. அவற்றின் ஒவ்வொரு ரூபாவும், உரிய வழியில் மாத்திரமே செலவு செய்யப்பட வேண்டியவை. தேன் எடுத்த கையின் புறப்பக்கத்தை நாக்கில் தடவினேன் என்ற கதையெல்லாம் பொதுப்பணத்துக்கு உதவாது.

வெளிநாடுகளில் உதவிப்பணமாக வரும் அனைத்து பணத்துக்கும் கணக்கு இல்லாவிட்டால், புலம்பெயர் நாட்டில் உதவிப் பணத்தை அனுப்பியவரே குற்றவாளியாக்கப்படுவார். அதனை இங்குள்ளவர்கள் உணர வேண்டும்.

அதனை விடுத்து வெளிநாட்டுக் காசுதானே என்ற பாணியில் இங்கிருப்பவர்கள் நடக்க முயலுகிறார்கள். அதன் தாற்பரியம் இங்கு புரியவில்லை. எல்லாவற்றிலும் ஓர் பொறுப்பற்ற தன்மையை காணக்கூடியதாக இருக்கிறது. வெளிநாட்டுப் பணமா, கொண்டு வா, கொடுத்துவிட்டு போ, நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்ற போக்கே இங்கு எல்லோர் மத்தியிலும் காணப்படுகின்றது.

“புலம்பெயர் தமிழர் பணம் கொடுக்க வேண்டும்” என்று பிரச்சாரம் செய்தவர்கள், குற்றஞ்சாட்டியவர்கள் எல்லாம், இங்கு உதவ

பூபாலரட்ணம் சீவகன்

புலம்பெயர் தமிழர் வந்த போது, இங்கு அவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளைப் பற்றி இதுவரை வாய் திறக்கவில்லை.

‘காசு கேட்பது மாத்திரந்தான் எங்கள் வேலை. முடிந்தால் எங்கள் அரசியலுக்கு அதனை ஏதாவது பயன்படுத்த முடியுமா?’ என்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வாய்ப்பேச்சில் வீரர்களாக மாத்திரம் இருக்கிறார்கள்.

உதவ வந்தவர்களோ, அனைத்தையும் இழந்து, கண்ணீர் விட்டு தமது கதையை கூறியதை நேற்று முந்தினமும் கேட்டேன்.

இன்னுமொருவர், மிக நெருக்கமான நண்பர், இங்கு உதவித்திட்டம் ஒன்றை ஆரம்பித்துவிட்டு, அந்த திட்டத்தால் பயன்பெறுவோரின் பொறுப்பற்ற தன்மை, அறியாமை என்பவற்றால் பாதிக்கப்பட்டு மனம் நொந்துபோய் இருக்கிறார்.

இந்த நிலைமை தொடர்வதற்கு முற்று முழுவதும் இங்குள்ள உள்ளூர் சமூகமே பொறுப்பு. ஒருவரிடம் உதவி கேட்கும்போது, அவர்கள் வழங்கும் உதவி உங்களுக்கு நிச்சயம் தேவையானதா என்பதை முடிவு செய்து, அதனை வாங்க வேண்டும். இறுதிவரை அதில் வெளிப்படைத்தன்மையை பேண முயலவேண்டும். இதற்கான ஏற்பாடு இல்லாமல் உதவி கேட்பதே தவறு. கிட்டத்தட்ட ஒரு ஏமாற்று வேலை.

இந்த விடயத்தில் இங்குள்ள அரசாங்க நிறுவனங்களும், அதிகாரிகளும், பொது அமைப்புக்களும் மிகுந்த எச்சரிக்கையுணர்வுடன் இருக்க வேண்டும். ஒருங்கிணைக்கப்பட்ட உதவிச் செயற்பாடுகளும் இதற்கு உதவும்.

---

### அரங்கம் வாசகர்களுக்கு

## நாமும் செய்யலாமா? - ஒரு தோட்டப் போட்டி..

கிழக்கின் வனப்பு மிகு பூமியில் எத்தனையோ வனப்புமிகு இளைஞர்கள், நடுத்தர வயதினர் ஏன் எங்கள் ஆணி வேரான முதியவர்கள் கூட இருக்கின்றார்கள்.

அவர்களில் பலர் பொழுதை எப்படி கழிப்பது என்று தெரியாமல் TV பார்ப்பது, நண்பர்களுடன் பொழுதை கழிப்பது என்று இருக்கிறார்கள். இவையும் நமக்கு தேவைதான். எனினும் மீதமிருக்கும் பொன்னான நேரத்தை வீணாக மண்ணாக்கி கொண்டிருப்பார்கள்.

“மண்” என்றவுடன்தான் ஞாபகம் வருகின்றது. நமது மீதமான பொன்னான நேரத்தை மண்ணுடன் செலவு செய்தால், நம் மட்டக்களப்பு மண்ணை மட்டுமன்றி நம் வாழ்வாதாரத்தையும் உயர்த்துவதற்கு ஒரு வழிகாட்டலாகத்தான் உங்களுக்கு இந்த பக்கம்.

இதை நீங்கள் தனியாக உங்கள் வீட்டிலோ அல்லது உங்கள் நண்பர், நண்பிகளுடன் சேர்ந்து அவர்கள் வீட்டிலோ செய்யலாம். ஒரு இலகுவான “நம் பயிரை நாமே வளர்ப்போம்”. இது ஒன்றும் விண்வெளியை தொடச் செய்யும் விஞ்ஞானம் அல்ல. நம் படிக்காத அம்மம்மா, அப்பப்பா சொல்லிச் சென்ற “தோட்டக்கலை”. அவ்வளவுதான்.

இதில் என்ன “புதிர்” என்றால், நம் மட்டக்களப்பில் முன்பைவிட நம் முற்றங்களின் அளவு குறைந்து கொண்டே வருகின்றது. அதனால்தான் இதையொரு போட்டியாக உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். போட்டிக்கு என்று விதிமுறைகள் இல்லை, முற்றுமுழுவதும் உங்கள் எண்ணங்களை புதுவிதமான ஆக்கங்களாக எதிர்பார்க்கிறேன்.

அதாவது இந்த தோட்டம் வளர்க்கும் போட்டிக்கான கால அவகாசம் 6 மாதங்கள், இதில் வெற்றிபெறும் நபருக்கு அரங்கம் வார இதழ் 10,000 ரூபாய் ரொக்க தொகை வழங்கி கௌரவிக்கும். உங்கள் தோட்டத்தை ஆரம்பிக்க முதல் ஒரு படம் (Photo/Vedio). 5 மாத கால அளவில் இன்னுமொரு படம் (Photo/Vedio) எடுத்து எங்கள் அரங்கம் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கவும். அந்த தோட்டத்தின் வனப்புக்கு ஏற்ப உங்களுக்கு பரிசுத்தொகை கிடைக்கும்.

---

### மீளக்குடியமர்ந்தோருக்கு உதவி



வடக்கு கிழக்கில் மீளக்குடியமரும் சுமார் 2500 பேருக்கு வாழ்வுக்கான வசதிகளை செய்ய பிரிட்டிஷ் அரசாங்கம் ஐநா அபிவிருத்தித் திட்டத்துடன் சேர்ந்து 13 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மீளக்குடியேறிய மக்களுக்கே இத உதவிகளை அவை வழங்கவுள்ளன.

அவர்கள் மீளக்குடியமர்ந்து நீடித்து வாழவும், குடியமர்ந்த மக்களுடன் ஒருங்கிணைந்து வாழவும், அமைதியை கட்டியெழுப்பவுமான நோக்கத்தில் இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

---

தொடர்ச்சி...

### கேரளாவில் பெருத்த வெள்ளம்

25பேர் பலியாகியுள்ளதாக கேரள அரசு அறிவித்துள்ளது.

எல்லா மாவட்டங்களிலும் நிவாரண முகாம்கள் செயல்படத்தொடங்கியுள்ளன. மாநிலத்தில் உள்ள அனைத்து (14) மாவட்டங்களிலும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



சாலைகளில் சேதாரம், பல இடங்களில் போக்குவரத்து, மின்சாரம் துடிக்கப்பட்டு, கேரளாவின் பல பகுதிகள் தீவுகள் போல தோன்றுகின்றன. இதுவரை கடுமையான வெள்ளத்தைச் சந்திக்காத கொச்சின்,பாலக்காடு,வயநாடு போன்ற இடங்களில் முதல்முறையாக வெள்ளம் கரைபுரண்டு நகரம் மற்றும் கிராமங்களை சூழ்ந்துள்ளது.

கொச்சின் பகுதியில் உள்ள கம்பெனிபாடி பகுதியில் இதுவரை வெள்ளத்தை சந்திக்காத மக்கள் சிலர், தங்கள் வீடுகளுக்குள் இடுப்பளவு தண்ணீர் புகுந்தாலும் வெளியேற மனமில்லாமல் இருப்பதாக கூறப்படுகின்றது.

# கேள்வி அறிவித்தல்
# மட்டக்களப்பு மாநகர சபை

1. தவிசாளர், மட்டக்களப்பு மாநகரசபை பெறுகைக் குழு சார்பாக மட்டக்களப்பு மாநகர சபை முதல்வரினால் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்காக தகைமை பெற்ற கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்விதாரர்கள் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு செய்யப்பட்டு இருப்பதுடன் வீதி.ஃகட்டடநிர்மாண வேலைக்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் பதிவு செய்யப்பட்டவராகவும், கறுப்பு பட்டியலில் பெயர் இடம் பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.
4. உரிய கேள்வி ஆவணங்களை மாநகரசபை பொறியியல் பிரிவிலிருந்து 20.08.2018ஆம் திகதி முதல் 04.09.2018ஆம் திகதி வரை மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை வேலை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்விதாரர்கள், மாநகர முதல்வர்.ஃமாநகர ஆணையாளரை தொடர்பு கொள்வதன் மூலம் (தொலைபேசி இல: 065 2227066, 0652222666, 065 2222275 தொலை நகல் இல: 065 2224783, மின்னஞ்சல் : battimc@gmail.com) மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அவ்முகவரியில் மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப. 03.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. விலைக் கேள்விகள் இரு பிரதிகளில் 05.09.2018ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர், மாநகரசபை பெறுகைக்குழு, மாநகர சபை, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "வீதி/கட்டட நிர்மாண வேலை" என குறிப்பிடுதல் வேண்டும். விலைக் கேள்விகள் சமூகமளித்திருக்கும் விலைக் கேள்விதாரர்களின் அல்லது பிரதிநிதிகளது முன்னிலையில் 05.09.2018 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு திறக்கப்படும்.
7. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் மாநகர முதல்வர் தலைமையில் மாநகர சபை, மட்டக்களப்பு என்னும் முகவரியில் 28.08.2018 ஆம் திகதி அன்று மு.ப. 10.10 மணிக்கு நடைபெறும்.
8. கீழே அட்டவணையில் குறிப்பிட்டவாறான தொகைக்குரிய கேள்விப் பிணை சமர்ப்பிக்கப்படும் கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையானது மத்திய வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் வங்கி, காப்புறுதி நிறுவனம், மற்றும் ஒப்பந்தக்காரர்பிணை நிதியம் (CGF) என்பவற்றில் இருந்து பெறப்படல் வேண்டும். உரிய பிணையானது கேள்வி பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய இருத்தல் வேண்டும்.

| ஒப்பந்த இல | வேலை விபரம் | மதிப்பிட்டுத் தொகை (மில்லியன்) VAT நீங்கலாக | ஒப்பந்த காலம் | தேவையான (CIDA) பதிவுத் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை (ரூபா) | தேவைப்படும் காலம் |
| BMC/ENG/W/COUNCIL FUND- 1/2018 | மாரியம்மன் கோயில் 2ம் குறுக்கு வீதி கல்லடி கொங்கிறீட் இடல். | 01.31 | 90 நாட்கள | C9 (வீதி அல்லது கட்டட நிர்மாணம்) | 24/10/2018 | 14,000/= | 21/11/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 2/2018 | காளி கோயில் 1ம் குறுக்கு வீதி தாரிடல் பெரிய ஊறணி. | 01.21 | | | 24/10/2018 | 13,000/= | 21/11/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 3/2018 | 1ம் குறுக்கு வீதி தாரிடல் சின்ன உப்போடை. | 01.07 | | | 24/10/2018 | 11,000/= | 21/11/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 4/2018 | திரௌபதையம்மன் கோயில் லேக் வீதி 02 கொங்கிறீட் வடிகாண் அமைத்தல். | 01.41 | | | 24/10/2018 | 15,000/= | 21/11/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 5/2018 | 1ம் குறுக்கு மாணிக்கம் வீதி கொங்கிறீட் இடல் புளியந்தீவு | 01.71 | | | 24/10/2018 | 18,000/= | 21/11/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 6/2018 | சோதி லேன் கொங்கிறீட் இடல் நாவற்குடா | 01.90 | | | 24/10/2018 | 19,000/= | 21/11/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 7/2018 | எல்லை வீதி 2ம் குறுக்கு கொங்கிறீட் இடல் புதூர். | 01.52 | | | 24/10/2018 | 16,000/= | 21/11/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 8/2018 | 12ம் குறுக்கு கண்ணகியம்மன் கோயில் வீதி கொங்கிறீட் இடல் தாண்டவன்வெளி. | 01.39 | | | 24/10/2018 | 14,000/= | 21/11/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 9/2018 | 7ம் குறுக்கு வீதி கொங்கிறீட் இடல் திருப்பெருந்துறை. | 01.58 | | | 24/10/2018 | 16,000/= | 21/11/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 10/2018 | 1ம் குறுக்கு கிளுறியா வீதி கொங்கிறீட் இடல் மஞ்சந்தொடுவாய். | 01.35 | | | 24/10/2018 | 14,000/= | 21/11/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 11/2018 | பாடசாலை வீதி தாரிடல் அமிர்தகழி. | 00.86 | | | 24/10/2018 | 9,000/= | 21/11/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 12/2018 | 5ம் குறுக்கு வீதி தாரிடல் சத்துருக்கொண்டான் | 01.50 | | | 24/10/2018 | 15,000/= | 21/11/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 13/2018 | 20ம் குறுக்கு வீதி தாரிடல் திராய்மடு. | 01.57 | | | 24/10/2018 | 16,000/= | 21/11/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 14/2018 | லேக் வீதி - 01 பூங்கா அமைத்தல் புளியந்தீவு. | 05.12 | | C7 (வீதி அல்லது கட்டட நிர்மாணம். | 21/11/2018 | 52,000/= | 19/12/2018 |
| BMC/ENG/W/COUNCIL FUND- 15/2018 | மாநகர ஆணையாளர் விடுதி நிர்மாணித்தல். முனை வீதி புளியந்தீவு. | 12.97 | 150 நாட்கள் | C6 or C5 கட்டட நிர்மாணம். | 21/11/2018 | 130,000/= | 19/12/2018 |

**மாநகர முதல்வர்/ பெறுகைக்குழு தலைவர்,**
**மாநகர சபை,**
**மட்டக்களப்பு.**

# முதலைக்குடா, மகிழடித்தீவு பகுதியில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு பண்ணையா?

## படுவான் திசையில்

## ஒருசாரர் எதிர்ப்பு! மற்றொருசாரர் நிபந்தனையுடன் ஆதரவு!



முதலைக்குடா, மகிழடித்தீவு பகுதியில் அமைந்துள்ள இறால் பண்ணையில், மீண்டும் நீர்வாழ் உயிரினங்கள் வளர்க்கப்படவுள்ளதாக கூறுகின்றனர், உண்மையா? என கந்தசாமி, சீனித்தம்பியுடன் மகிழடித்தீவு சந்தியில் நின்று வினவினான். அதற்கு பதிலளித்து பேசிய சீனித்தம்பி, 'மீண்டும் இறால் வகையும், மீன் வகைகளும் வளர்க்க போகின்றனராம். அதற்காக நம்மட முதலைக்குடா, மகிழடித்தீவு கிராமத்தில் உள்ள மக்கள் சிலபேரிடம் கருத்துக்களும் எடுத்துச் சென்றனராம். அதற்குப் பிறகு மண்முனை தென்மேற்கு பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்திலும், இதுபற்றி பேசியதாகவும் ஊடகங்களிலெல்லாம் தகவல்கள் வெளிவந்தன. இதனைக் கேள்விப்படவில்லையா?' என வினவ, 'கேள்விப்பட்டேன், பூரணமான விளக்கமும், தெளிவும் கிடைக்கவில்லை' என்றான் கந்தசாமி.

இப்போதுதான், ஒரு காலைபொழுதில் நடந்த சம்பவம் போன்று இருக்கின்றது. ஆனால், வருடங்கள் 31ஆகிவிட்டன. அதனை நினைக்கையில், சிந்திக்கையில் உடல் நடுக்கமும், மனப்பயமும் இப்போதும் ஏற்படுகின்றன. தற்போது, இறால் பண்ணை ஆரம்பிக்கப்போவதாக சொல்லுகின்ற, அதே இறால் பண்ணையில் வேலை செய்த பொதுமக்களே 1987ம் ஆண்டு கொல்லப்பட்டனர். அதனால், இறால் பண்ணையென்றாலே எப்போதும் கொக்கட்டிச்சோலை படுகொலையே யாவருக்கும் நினைவில் வருமென்றான் சீனித்தம்பி.

படுகொலையின் பின்பு இறால் வளர்ப்பு கைவிடப்பட்ட நிலையில், யுத்தம் நிறைவுபெற்ற 2009ம் ஆண்டிற்குப் பின்னரான, 2011, 2012, 2013, 2014ம் ஆண்டுகளில் சிறியளவிலான பகுதியில் இறால் வளர்க்கப்பட்டது. இவ்வாறான இறால் வளர்ப்பு பண்ணைகள் உருவாக்கப்படுவதினால், தமது சூழலுக்கு பாதிப்பேற்படுவதாகவும், இறால் வளர்ப்பு பண்ணையின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கக்கூடாது என்றும் வலியுறுத்தி, 2015 யூன் 17ம் திகதி, மகிழடித்தீவு சந்தியிலிருந்து பட்டிப்பளை பிரதேச செயலகம் வரை கண்டனப்பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

இறால் வளர்ப்பு பண்ணையின் செயற்பாடுகள் காரணமாக மகிழடித்தீவு, முதலைக்குடா, தாழையடித்தெரு, படையாண்டவெளி, பண்டாரியாவெளி கிராமங்களின் குடிநீர் உவர்த்தன்மையடையும் என இதன்போது மக்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அத்துடன், விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதோடு, சூழலுக்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்படக்கூடும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர், என்ற கருத்தையும் கந்தசாமி கூறினார்.

மக்களும் இறால் வளர்ப்பு ஆரம்பிக்கப்படாது, என்ற எண்ணத்திலே இருந்தாலும், 2018ல் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆரம்பிக்கப்படவுள்ளதாக கூறிவருகின்றனர். இவ்விடயம் இப்போது, புதிதாக ஆரம்பிக்கப்பட்டதல்ல. 2016ல் இருந்து, மீண்டும் இறால், மீன் வளர்ப்பு பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன. குறிப்பாக 2016ம் ஆண்டு அரசாங்க அதிபருடனான ஆரம்ப கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது. 2017.11.31ல், 30வருட நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான அமைச்சரை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. 2018.02.14ல் அமைச்சரவை அங்கீகாரம் தொடர்பான ஆவணங்கள் நக்டா பணிப்பாளர் நாயகத்தினால் மட்டு அரச அதிபருக்கு கையளிக்கப்பட்டிருக்கின்றன. 2018.02.20ல் அமைச்சின் செயலாளர் அமைச்சரவை அங்கீகாரம் தொடர்பாக பிரதேச செயலாளர், மாவட்ட செயலக உயர்பிரதிநிதி நக்டா, முதலீட்டுச்சபை ஆகியவற்றினூடான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளன. 2018.02.26ல் அமைச்சரவை அங்கீகாரம், கருத்திட்ட சுருக்கம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 11.04.2018ல் சமூக மட்டத்தில் சூழவுள்ள கிராமமக்களின் ஆலோசனை பெறப்பட்டுள்ளது. 25.04.2018ல் சூழவுள்ள கிராமமக்கள், பிரதேச செயலக ஊழியர்களுக்கான வெளிக்கள விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 25.06.2018ல் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் சிபார்சு பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. 2012, 2013, 2014ம் ஆண்டுகளில் 102 ஏக்கரில் இறால் வளர்ப்பு நடைபெற்றதாகவும் இதில் 50ஆண், 15பெண் வேலைகளில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகின்றது. வாவிக்கும் பண்ணைக்குமுள்ள தூரம் 150மீற்றராகவும், வயல்களுக்கும் பண்ணைக்குமான தூரம் 300 – 400மீற்றராகவும், குடியிருப்புக்கும்,



பண்ணைக்குமான தூரம் 400 – 600மீற்றராகவும் இருப்பதாகவும் கருத்திட்ட சுருக்கத்தில் சொல்லப்படுகின்றது.

நீர்வாழ் உயிரின வளர்ப்பு பண்ணையை முதலைக்குடா, மகிழடித்தீவு பகுதியில் அமைப்பது பற்றிய கிராம மக்களின் ஆலோசனையில், முதலைக்குடா மக்கள், காலத்திற்கு காலம் ஏற்பட்ட விளைவுகள் பற்றி ஆராயப்படல் வேண்டும், பிரதேச மக்களுக்கான தொழில்வாய்ப்பிற்கான உத்தரவாதத்தினை வழங்க வேண்டும், தடுப்பணைகள், தொழில்வாய்ப்பு பாதுகாப்பு வலயம் அமைத்தல் தொடர்பான உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டும், சமூக பங்குபற்றல் முறையிலான திட்ட வடிவமைப்பு வேண்டும் போன்ற நிபந்தனைகளுடன் உடனடியாக ஆரம்பிக்குமாறு கூறியுள்ளதாக நக்டா ஆலோசனை அறிக்கை கூறுகின்றது.



அதேவேளை முதலைக்குடா மக்களின் கருத்துக்குமாறாக, மகிழடித்தீவு மக்களின் கருத்துக்கள் அமைந்துள்ளன. குறிப்பாக, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய அமைச்சர்கள் பற்றி தெரியப்படுத்தவும், பண்ணை ஏற்படுத்த அனுமதியில்லை, மட்டக்களப்பு மாவட்ட முதலீட்டாளர்களுக்கு அனுமதியில்லை, இத்திட்டம்

**படுவான் பாலகன்**

இக்கிராமத்திற்கு தேவையில்லை போன்ற கருத்துக்களை முன்வைத்து திட்டத்தினை மறுத்துள்ளனர்.

இந்நிலையில்தான், மண்முனை தென்மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதியை பெறுவதற்காக கடந்த 14ம் திகதி, கருத்திட்ட சுருக்கம் குழுக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. இதன்போது, பல்வேறு கருத்துக்கள் எழுந்தன. மண்முனை தென்மேற்கு பிரதேசசபை தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் மீண்டும் பண்ணை ஆரம்பிக்க கூடாது என்ற கருத்தினையும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் ஆரம்பிக்க கூடாது என்ற கருத்தினை வலியுறுத்தியிருந்தமையுடன், மக்களது நூறு வீத அனுமதியை பெறவேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் கூறுகின்ற போது, கண்ணைமூடி முற்றாக எதிர்ப்பதும், ஆதரிப்பதும் ஆரோக்கியமில்லை. ஆய்வு செய்து, ஆய்வறிக்கையின் அடிப்படையில் தீர்மானத்தினை நிறைவேற்றுவோம் என்று கூறியதாகவும் கந்தசாமி குறிப்பிட்டார்.

திட்டத்திற்கான அனுமதியை மண்முனை தென்மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழு வழங்காத நிலையில், மீண்டும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திற்கு எடுத்துச்செல்லப்படவிருக்கின்றதென்பதை கேள்விப்பட்டதாக கூறும் கந்தசாமி, "மக்களது ஆலோசனை பெறப்பட்டதாக கூறுகின்றார்களே, எத்தனைபேரிடம் கேட்டனர்?.

யாரிடம் கேட்டனர்? தெரிந்தவர்களிடம் வினவினரா? என்பதனை அறிய வேண்டும் அப்போதுதான் உண்மை புரியும்' என்று கூறிய சீனித்தம்பி சரியான தீர்மானத்தினை மக்கள்தான் எடுக்க வேண்டுமென்ற கருத்தினை கூறிவிட்டு இருவரும் அவ்விடத்தினை விட்டு அகன்றனர்.

பக்கத்துக்கான அனுசரணையாளர்

--------------------------------

அலையப்போடியார் நல்லரத்தினம்
ஸ்தாபகர் : அறிவாலயம் கல்வி மையம்
வாழ்நாள் நன்கொடையாளர்:
சக்தி மகளிர் இல்லம்

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 14

தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்

முன்னாள் பொது நிர்வாக மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் காலஞ்சென்ற யூ.பி.விஜயகோன் தலைமையில் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகம் காலஞ்சென்ற அ.அமிர்தலிங்கத்தின் பங்குபற்றுதலுடனும் 29.03.1989 அன்று நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தின் தீர்மானத்தின் படி கல்முனைத் தமிழ்ப் பிரிவுக்கென தனியான சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகம் ஒன்று 12.04.1989ல் திறக்கப்பெற்று, மேலதிக அரசாங்க அதிபர் ஒருவரும் நியமிக்கப்பெற்றார். ஆனால் மேற்படி கூட்டத்தீர்மானத்தின் மற்றைய சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் பிரிவு அதாவது சம்மாந்துறை தமிழ்ப்பிரிவுக்கானது திறக்கப்பெறாமல் சற்று இழுத்தடிக்கப்பெற்றது. இதற்கு காரணம் சம்மாந்துறையை சேர்ந்தவரும் அமைச்சருமான அப்துல் மஜீத் காட்டிய மறைமுகமான எதிர்வினையாகும். இதனையிட்டு அம்பாறை மாவட்டத்தின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரான ஜெ.திவ்வியநாதனோ அல்லது மேற்படி 29.03.1989 கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம் அவர்களோ தொடர் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. இது தமிழ் அரசியல்வாதிகளது வழமையான பாணிதான். மக்கள் ஆர்ப்பாட்டங்களின் போது ஆஜராகி வாக்குறுதி வழங்குவதும், பின்னர் தங்களை பிரபல்யப்படுத்தும் வகையில் பத்திரிகைகளில் புகைப்படங்களுடன் அறிக்கைகள் விடுவதும், ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுக்கு கடிதங்கள் எழுதுவதும், ஆக மிஞ்சிப்போனால் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதும்தான் தமிழ் அரசியல்வாதிகள் இன்றுவரை மேற்கொள்ளப்பெறும். "வாக்குப்பெட்டி" அரசியலே தவிர மக்கள் தேவைகளை நிறைவேற்றும் வகையில் அரசாங்க உயர் அதிகாரிகளை சந்தித்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதில்லை. அதற்காக தயார்படுத்தல்கள் தந்திரோபாயமான அணுகுமுறைகள் எதுவும் தமிழ் அரசியல் வாதிகளிடம் இருந்ததும் இல்லை. இதற்குக் காரணம் ஒரு குறிப்பிட்ட தமிழ் கட்சி தும்புக்கட்டையை தேர்தலில் வேட்பாளராக நிறுத்தினாலும் தமிழ்



மக்கள் அந்த தும்புக்கட்டையை நிறுத்திய கட்சியின் சின்னத்துக்கே வாக்களிப்பார்கள் எனவும் அக்கட்சியின் அரசியல் வாதிகளின் உளவியலும் அவ்வாறே தமிழ் மக்களும் வாக்களிக்கும் அவர்களின் அரசியல் அறியாமையும் ஆகும். இப்போக்கு தமிழ் அரசியலில் இன்னும் தொடர்கிறது. இதனால் அதிகம் பாதிக்கப்பெற்றவர்கள் அம்பாறை மாவட்டத் தமிழர்கள்.

1988இன் இறுதி பகுதியில் இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்ற காலஞ்சென்ற ஆர்.பிரேமதாச அவர்களும் தமிழ் விடுதலை புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையிலே ஏற்பட்ட உறவு தமிழ் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம் அவர்களின் படுகொலையை அறுவடையாக தந்துவிட்டு, 1990 ஜுன் மாதம் வெடித்துச் சிதறியது. விளைவு வடக்கு கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் அதிலும் மோசமாக அம்பாறை மாவட்டத்தில் பாரிய உயிரழிவுகளையும் சொத்தழிவுகளையும் ஏற்படுத்தியது. புலிகளின் வன்முறை நடவடிக்கைகளால் அவ்வப்போது பாதிப்புற்றிருந்த முஸ்லிம்கள் 1990 ஜுன் மாதக் கலவர காலத்தில் அரச படைகளுடன் சேர்ந்து தமிழர்கள் மீது பழிதீர்த்துக்கொண்டார்கள். முஸ்லிம் "ஊர்காவல் படை" இதில் பெரும் பங்காற்றியது. விரிவஞ்சி இப் பத்திரிகையாளர் இதனை விபரிக்க முற்படவில்லை. இக்கலவரத்தினால் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் கிராமத்திலிருந்து முழுத்தமிழர்களுமே 10மைல்களுக்கு இப்பால் உள்ள கோமாரிக் கிராமத்துக்கு இடம்பெயர்ந்தார்கள். அதேபோல் சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட தமிழ் கிராமங்களில் இருந்தும் தமிழர்கள் இடம்பெயர்ந்தனர். அட்டாளைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட திராய்க்கேணி கிராமத்திலும் சம்மாந்துறை வீரமுனை சிந்தாமணிப்பிள்ளையார் கோயிலில் தஞ்சம் அடைந்த தமிழ் மக்கள் மீதும் நிகழ்த்தப் பெற்ற படுகொலைகள் பாரதூரமானவை. இப்படுகொலைகள் அம்பாறை மாவட்டத்தின் சகல தமிழ் கிராமங்களிலும் நிகழ்த்தப்பெற்றன.

1990 வன்முறை செயலின் போது அம்பாறை மாவட்டத்தமிழர்கள் மகா சங்கத்தின் முன்னனி செயற்பாட்டாளர் பலர் இடம்பெயர்ந்தனர். அதுமட்டுமல்ல உபதலைவர் கவிஞர் பாண்டியூரான் காணாமல் போனவரில் ஒருவரானார். இந்த நிலையிலே அம்பாறை மாவட்ட தமிழர்கள் மகா சங்கத்திற்கு புதிய நிர்வாகம் தேவைப்பட்டது. காலஞ்சென்ற எஸ்.குனரெட்ணம்(ஓய்வு பெற்ற அதிபர் - நற்பிட்டிமுனையை சேர்ந்தவர். அவர்களைத் தலைவராகவும் து.இராமகிருஸ்ணனைச் (பட்டிருப்பைச் சேர்ந்தவர்) செயலாளராகவும் காலஞ்சென்ற திரு.ரி.ஆர்.அம்பலவானரை (நீர்ப்பாசன திணைக்கள பட வரைஞர்) இணைப்புச் செயலாளராகவும் காலஞ்சென்ற கல்முனை ஏ.நடேசனை பொருளாளராகவும் கொண்ட புதிய நிர்வாகம் அச்சங்கத்தின் பணிகளை பொறுபேற்று கொண்டது.

காரைதீவுக்கு என தனியான பிரதேச சபையை உருவாக்குவதற்காக பூர்வாங்க முயற்சிகளை காலஞ்சென்ற மகாலிங்கம் தலைமையிலான காரைதீவு பிரஜைகள் குழு மேற்கொண்டிருந்தது. கல்முனை தமிழ் பிரிவுக்கென திறக்கப்பெற்ற உதவி அரசாங்க பிரிவும் எல்லைகள் வகுக்கப்படாமல், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பெறாமல் அதிகாரம் அற்ற அமைப்பாக பேரளவில்தான் செயலபட்டு வந்தது. தவிர பொத்துவில், சம்மாந்துறை தமிழ்ப் பெரும்பான்மை உதவி அரசாங்க பிரிவுகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் 1990 வன்செயல் அனுபவங்கள் கற்றுத்தந்த பாடங்களை தொடர்ந்து தீவிரமடைந்தது. எனவே மேற்படி விடயங்களையிட்டு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்க உயர் மட்டத்தில் முடுக்கி விடுவதாக அப்போது கொழும்பில் வசித்துக்கொண்டிருந்த இப்பத்தி எழுத்தாளரின் ஏற்பாட்டில் 29.11.1991 ல் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் தூதுக்குழு அதன் செயலாளர் து.இராமக்கிருஸ்ணன் தலைமையில் இணைப்புச் செயலாளர் அம்பலவாணர் சகிதம் வடக்கு, கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழர் விடுதலை கூட்டணி பட்டியலிலிருந்து தெரிவான அனைத்து தமிழ் கட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் அப்போதைய பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரான காலஞ்சென்ற பெஸ்டஸ் பெரேராவை பாராளுமன்ற அலுவலக கட்டிடத்தில் சந்தித்து பேசியதுடன் கோரிக்கைகளின் விபரங்கள் அடங்கிய மகஜரையும் சமர்ப்பித்தது. இதனைத் தொர்ந்து ஜனாதிபதிக்கு பல கடிதங்களும் மகஜர்களும் அனுப்பியும் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உயர் அதிகாரிகளை நேரில் சந்தித்தும் அம்றை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புனர்நிர்மாண புனர்வாழ்வு சமூக சேவைகள் அமைச்சர் பி.தயாரெட்னவையும் பலதடவைகள் நேரிலே சந்தித்தும் எடுத்துக்கொண்ட தொடர்ச்சியான நடவடிக்கைகள் காரணமாக சம்மாந்துறை அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தமிழ் பிரதேசத்தில் சொறிக்கல்முனையில் ஓர் சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகம் திறக்கப்பெற்றும் பின் அது சவளக்கடைக்கு இடம்மாறியது.

இந்த இடத்தில் ஒரு விடயத்தை அழுத்தமாக கூறி வைக்க வேண்டியது அவசியமாகிறது. அது என்னவெனில் அம்பாறை மாவட்ட தமிழர்களை பொறுத்தவரையில் அவர்களது சமூக பொருளாதார அரசியல் இருப்பை தக்க வைத்து, பேணி பாதுகாத்து வளர்த்தெடுப்பதற்கு முதலில் பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, காரைதீவு, சம்மாந்துறை, கல்முனை ஆகிய ஆறு இடங்களிலும் மையப்படுத்தியதாக தனியான தமிழ் பெரும்பான்மை நிருவாக அலகுகள் முன்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தற்போது பிரதேச செயலாளர் பிரிவுகள் தேவை. ஆனால் இதுவரையில் திருக்கோவில், ஆலையடிவேம்பு மற்றும் காரைதீவு ஆகிய இடங்களிலேயே அவை நிறைவேறியுள்ளன. பொத்துவிலில் அது நிறைவேறவில்லை. கல்முனையில் அது பேரளவிலும் அரைகுறையாகவும்தான் நிறைவேறியுள்ளன. மேற்கூறப்பெற்ற 6 நிர்வாக அலகுகள் பற்றிய விடையங்களை தனித்தனியாக தொகுத்துக் கூறுவது கடந்த கால வரலாற்றை இன்றைய தலைமுறையினர் தெரிந்து கொள்வதற்தும் எதிர்காலத்தில் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பெற வேண்டும் என்பதை சமூக ஆர்வலர்கள் அறிந்து கொள்வதற்கும் உதவும் என்பது இப்பத்தி எழுத்தாளரின் எண்ணமாகும். அதனைப் பின்னர் பிறிதொரு பகுதியில் பார்க்கலாம்.

அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கம் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகள் காரணமாக கல்முனை(தமிழ்), காரைதீவு பிரிவுகள் 28.07.1993 அமைச்சரவைத் தீர்மானத்தின் படி பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பெற்றன. இந்த அமைச்சரவைத் தீர்மானத்தின் படி நாடளாவிய ரீதியில் 28 உப அலுவலகங்கள் இவ்வாறு தரமுயர்த்தப்பெற்றன. அதில் கல்முனை(தமிழ்) பிரிவும், காரைதீவும் அடங்கியிருந்தன. இந்த அமைச்சரவை தீர்மானத்தின் படி இப்பிரதேச செயலகங்களுக்காக 1994 மதிப்பீடுகளில் தேவையான பண ஒதுக்கீடுகள் செய்யப்பெற வேண்டும் என்றும் இவ்வலுவலகங்களுக்குத் தேவையான ஊழியர் தொகையை பெற்றுக் கொள்வதற்கு சம்பள மற்றும் ஆளணிக் குழுவுடனும் திறைசேரியுடனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன என்றும் இவற்றை தரமுயர்த்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உள்நாட்டு அலுவல்கள், மாகாண அமைச்சு இராஜாங்கச் செயலாளரினால் உரிய அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பெற்றது. ஆனால் இந்த தீர்மானம் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் தலையீடுகள் காரணமாக அமுல் செய்யப்பெறாமல் இழுத்தடிக்கப்பெற்றன. அமைச்சரவை தீர்மானத்தைக் கூட அமுல் செய்யப்படுவதைத் தடுக்கும் அளவுக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் செல்வாக்கு பெற்றிருந்த அதேவேளை தமிழர்களுடைய அரசியல் தலைமை அதனைக் கூட தட்டிக் கேட்க முடியாதபடி கையாலாகத் தனமாக இருந்தது. தமிழர்களுடைய அரசியல் தலைமை இவ்வாறு இருந்தது ஒருபுறமிருக்க அம்பாறை மாவட்டத்தின் ஒரேயொரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரான ஜெ.திவ்வியநாதனும் இதில் அக்கறையற்றவராக இருந்தார். இதனை யாரிடம் முறையிடுவது இதற்குப்போய்



முஸ்லிம் அரசியல்வாதிகளை குறை கூற முடியுமா? ஒட்டுமொத்த தமிழர்களும் இந்நிலையை இட்டுச் சிந்திக்க வேண்டும்.

தமிழர் அரசியலில் மாற்றம் ஏற்படாதவரை எதுவும் மாறப்போவதில்லை. 1989ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஈ.பி.ஆர்.எல்.எவ், டெலோ, ஈ.என்.டி.எல்.எவ் ஆகிய கட்சிகள் இணைந்து தமிழர் விடுதலை கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தின் கீழ் ஒரே பட்டியலில் போட்டியிட்ட காரணத்தினாலேயே விகிதாசார தேர்தல் முறையின் கீழும் அம்பாறை மாவட்டத்தமிழர்களின் ஒரேயொரு பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பெற்றது. அதாவது அம்பாறை மாவட்டத் தமிழர்கள் சார்பில் ஒரே ஒரு அணியே போட்டியிட வேண்டும். அப்போதுதான் தமிழர் பிரதிநிதித்துவம் எதிர்காலத்திலும் காப்பாற்றப்பெறும். ஆனால் 1989ன் பின்னர் தமிழ்க் கட்சிகள் யாவும் தங்கள் தங்கள் கட்சிகளை வளர்ப்பதிலும் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுவதிலேயுமே முனைப்புக் காட்டின. இந்நிலையில்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# மட்டுநகரின் அபிவிருத்தி!
# விமானம் வந்து அழியும் மீன் குஞ்சுகளாக நிலைமை மாறக்கூடாது



மட்டக்களப்பு நகரை அபிவிருத்தி செய்வதற்கான பூர்வாங்க வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், தனியார் முதலீடுகளூடாக மட்டுநகரின் வளங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் செய்திகளைப் பார்க்கக் கிடைக்கின்றது.

உண்மையில் மட்டக்களப்பு நகரம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமானதே. இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளில் மட்டுநகரின் சுயசார்புமிக்க பொருளாதார வாழ்வியல் பாதிக்கப்படாத வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமான விடயமாக உணரப்படுகின்றது.

புதிய அபிவிருத்தித் திட்டங்களால் மட்டுநகரின் சுயசார்பான பொருளியல் பண்பாடு மேலும் வலுவூட்டப்படுவதாக இருக்க வேண்டுமே தவிர மாறாக புதிய அபிவிருத்தியால் நமது பிரதேசத்தின் வளங்களை வெளியிலிருக்கும் வியாபாரிகள் சுரண்டிக் கொண்டு போவதற்கும், இதன் விளைவாக உள்ளூர் சமூகங்கள் கையேந்தி வாழும் மனிதர்களாக ஆக்கப்படுவதற்கும் இடமளிக்கப்படாத வகையிலான திட்டமிடல்கள் மிகவும் அவசியமாகும்.



ஏனெனில் நவீன நகர அபிவிருத்தி நடைமுறைகளில் மிகப்பெரும்பாலும் அபிவிருத்திக்கு இலக்காகும் பிரதேசத்தின் சுயசார்பான பொருளாதாரப் பண்பாடு இல்லாமலாக்கப்படுவதும், இப்பிரதேசங்களில் காலங் காலமாக மரபுரிமைகளுடன் வாழ்ந்து வந்த மனித சமூகங்கள் நுகர்வுப் பொருளாதார முறைமைகளுக்குள் உள்ளீர்க்கப்பட்டு இறுதியில் பிறரிடம் கையேந்தி வாழும் பொருளாதார அடிமை வாழ்விற்குள் அகப்படும் நிலைமைகளே வலுவாக்கம் பெற்று வந்துள்ளமையினையும் நவீன அபிவிருத்தி செயற்றிட்டங்கள் பற்றிய ஆய்வறிவு முடிவுகள் ஊடாக நாம் அறிந்து வருகின்றோம்.



இந்த இடத்தில் மட்டுநகரின் வாவியில் மீன் பிடித்து சுயாதீனமாக வாழ்ந்த குடும்பத்தின் கதையொன்றைப் பதிவது பொருத்தமாக இருக்கும். கதை இதுதான் கடந்த ஆண்டு மாமாங்கத் திருவிழாவின் போது கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை ஒழுங்கமைத்து நடத்தி வரும் கூத்து ஒன்றினை இரவு வேளையில் பார்த்துக் கொண்டிருந்த நாம் இரவு உணவு சாப்பிடுவதற்காக மாமாங்கத்தில் விசேடமான பிட்டு சாப்பிடுவதற்காக பிட்டு வியாபாரம் செய்த இடத்தை நோக்கி நகர்ந்தோம். அப்போது ஐம்பது வயதைத் தாண்டிய ஆண் நபர் ஒருவர் “வாங்க பிட்டுச் சாப்பிடலாம்“ என எம்மை அழைத்தார். அவருடைய வரவேற்பை ஏற்று நாமும் சென்றோம், நிலத்தில் விரிக்கப்பட்டிருந்த படங்கைக் காட்டி அதில் அமரச் சொன்னார் அவர் சொன்னபடி நாமும் அமர்ந்தோம், கை கழுவத் தண்ணீர், பாத்திரம் கொணர்ந்தார், பின்னர் பிட்டு, கறி எல்லாம் தந்து நன்றாகப் பரிமாறினார், உபசரித்தார். அருகில் அவருடைய மனைவி பிட்டு அவித்துக் கொண்டிருந்தார், பிட்டுடன் அப்பமும் தயாரித்துக் கொண்டிருந்தார் நாம் அப்பமும் கேட்டு சீனியுடன் சாப்பிட்டோம்.

நாம் நள்ளிரவைத் தாண்டிய வேளையில் சாப்பிட்டதன் காரணத்தால் பிட்டு வியாபாரம் செய்த அந்தத் தம்பதியினருடன் சற்று உரையாடக் கூடியதாக இருந்தது. “எவ்வளவு காலமாக இந்தத் தொழிலைச் செய்கிறீர்கள்?“ என்று கேட்டோம். அதற்கு அவர் கூறிய பதில் எம்மைச் சிந்திக்க வைத்தது. அவர் கூறினார்

“நான் ஒரு மீனவன் மட்டக்களப்புத்தான் என்ர சொந்த ஊர், பிறந்தது வளர்ந்தது எல்லாம் மட்டக்களப்புத்தான். நான் கல்லடிப் பாலத்தை அண்டியுள்ள ஆத்துல மீன் பிடித்தே நம்மட வாழ்க்கையை நடத்தி வந்தேன். யாரிடமும் கடன் படாமல் வாழ்ந்தோம். நிம்மதியான வாழ்வு, ஆனால் இப்ப நம்மட ஆத்தில மீன் பெருகிற வீதம் கடுமையாக் குறைஞ்சி போச்சுது, அடிக்கடி பிளேன் வந்து பெரும் சத்தத்தோட ஆத்து நீரை கலக்கி ஓடுறதால மீன் கருவெல்லாம் கலைஞ்சி மீன் பெருகிற அளவு குறைஞ்சித்து. கல்லடிப்பாலத்த அடுத்துள்ள ஆத்துல இருக்கிற கல்லு இடுக்குகளுலதான் மீன்கள் பெருகி வாறதுகள். இப்ப இந்த பிளேன் வந்ததோட அது நாசமாப் போச்சுது. போதாக்குறைக்கு சட்டவிரோத வலைகளப் பாவிக்கிறதாலயும் மீன் இனமெல்லாம் அழிஞ்சு போச்சு, இதுகளால நம்மட ஆத்துல மீன் குறைஞ்சித்து, நம்மட தொழிலும் அடிபட்டுத்து. அதுக்குப் பிறகுதான் நாம காலங்காலமாகச் செய்த மீன்பிடித் தொழிலக் கை விட்டுத்து இப்படிக் கோவில் திருவிழாக்களில பிட்டு, அப்பம் செய்து விக்கிற தொழிலுக்கு மாற வேண்டி வந்தது. ஒரு மாதிரியாக் காலம் போகுது, மாமாங்கம் முடிய பேச்சியம்மன் சடங்கு

**து.கௌரீஸ்வரன்**

வருகுது அதிலயும் தொழில் செய்யலாம். என்ன செய்யிற? வாழுறதுக்கு உழைக்க வேணுமே...“

மேற்படி மட்டுநகரில் பிறந்து மட்டு வாவியின் வளத்தை நம்பி சுயசார்புடன் வாழ்ந்து வாவியின் வளங்கள் பறிபோனதன் விளைவாக தனது பாரம்பரியத் தொழிலைக் கைவிட்ட மீனவரின் துயரம் மிகுந்த இந்தக் கதை மட்டுநகரின் அபிவிருத்தி தொடர்பாகத் திட்டங்களைத் தீட்டும் போது எவ்வாறு கவனஞ் செலுத்த வேண்டும் எனும் முன்னனுபவத்துடனான முன்னறிவித்தலை நமக்கு உணர்த்தி நிற்கின்றது.

உல்லாசத் தொழிற் துறையின் அபிவிருத்தியை மாத்திரம் கவனத்திற் கொண்டு வாவியைப் பயன்படுத்த முனைந்தமை எவ்வாறு மட்டு வாவியின் மீன் வளத்தையும், இந்த வாவியை நம்பி காலங்காலமாக வாழ்ந்து வரும் மனிதர்களின் சுய சார்பான பொருண்மியத்தையும் பாதிக்கச் செய்துள்ளது என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் இது உள்ளது.

போருக்குப் பின்னரான காலத்தில் நமது பிரதேசங்களில் நுண்கடன் திட்டங்கள் வேகமாகப் பரவலாக்கம் செய்யப்பட்ட போது கிராம மட்டத்திலிருந்து குழு நிலையில் பொருளாதார அபிவிருத்தியை உருவாக்கும் செயற்றிட்டமாகவே பிரச்சாரப்படுத்தப்பட்டது. இன்று அத்திட்டம் கிராம மட்டத்தில் எத்தனை உயிர்களைத் தற்கொலைக்குள் தள்ளி விட்டுள்ளது என்பதை நாம் பார்த்து வருகின்றோம்.

இந்த அனுபவங்களின் பின்புலத்தில் தமிழ்த் தேசிய விடுதலை எனும் பிரக்ஞையுடன் மக்களிடமிருந்து அதிகாரத்தைப் பெற்று காரியமாற்றும் நிலையில், தேசிய விடுதலை என்பது அத்தேசத்தின் வளங்களின் பாதுகாப்பையும், தேசிய வளங்களை நிலைபேறாகப் பராமரிக்கும் வாழ்வியலுடனும் இரண்டறக் கலந்தது என்பதை கவனத்திற் கொண்டு அதற்கேற்ற விதமாக நிலைபேறான விதத்தில் தேசிய வளங்களைக் கையாளும் வகையில்; அபிவிருத்திக்கான திட்டங்களைத் தீட்ட வேண்டியதும் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியதும் காலத்தின் தேவையாகி நிற்கின்றது.

---

தொடர்ச்சி...

## சமுர்த்தி சமூக பாதுபாப்பு நிதியில் 57 இலட்சம் ரூபா மோசடி

நேற்று முந்தினம் புதன்கிழமை தாம் கைது செய்ததுடன் பணமும் மீட்கப்பட்டள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த திணைக்களத்தில் இலங்கை வங்கியில் வைப்பில் இருந்த சமூக பாதுகாப்பு நிதியில் மோசடி இடம்பெற்றுள்ளதாக அங்கு கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் சிவலிங்கம் குகபரன் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் திங்கட்கிழமை முறைப்பாடு செய்ததுள்ளார்.

இதனையடுத்து தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எம்.எம்.டி.தீகாவத்த, உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி. சந்திரபால ஆகியோரின் வழிகாட்டடிலில் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம். என்.பண்டார, சாஜன் கே.சி.எம். முஸ்தப்பா தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கொழும்பில் உள்ள சமுர்த்தி திணைக்களத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை குறித்த அலுவலத்தின் (திணைக்களத்தின் சராசரி நிலுவையை) மீதியை பரிசோதித்து கொழும்புக்கு அறிக்கை சமர்பிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன்போது சமுர்த்தி திணைக்களத்தின் கணக்குக்கான வங்கிப்பணம் பரிசோதிக்கப்பட்டது. இதனால் சமுர்த்தி திணைக்களத்தின் வங்கிக்கணக்கு பரிசோதித்ததில் 57 இலட்சம் ரூபா காணாமற் போயுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்விடயமாக மட்டக்களப்பு தலைமைப் பொலிஸில் செவ்வாய்க்கிழமை (14) கணக்காளரினால் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனை விரிவாக ஆராய்ந்த பெரும்குற்றத் தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி, சமுர்த்தி திணைக்களத்தில் கடமையாற்றிய அபிவிருத்தி உத்தியோகஸ்தர் ஒருவரை கைது செய்துள்ளார்கள். இவருடன் மேலும் எட்டுப்பேரை பணமோசடி குற்றச்சாட்டில் பொலிசார் கைதுசெய்துள்ளார்கள். கைது செய்யப்பட்ட சந்தேக நபரை விசாரணைகளுக்கு உட்படுத்தியதுடன் அவரது சொந்தவூரான வவுணதீவு பொலிஸ் பிரிவில் உள்ள கரவட்டி கிராமத்துக்கு சென்று பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது சந்தேக நபரின் வீட்டில் உள்ள தென்னை மரத்தில் இருந்து 27 இலட்சம் ரூபா மீட்கப்பட்டுள்ளது. இப்பணத்தை குறித்த சந்தேக நபர் உறவினர்கள் நான்குபேரின் கணக்கிலக்கத்திற்கு பரிமாற்றம் செய்து, அதனை மீளப்பெற்று தன்னுடைய வீட்டில் உள்ள தென்னைமரத்தில் ரகசியமாக ஒழித்து வைத்துள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

# நடந்தாய் வாழி களனி கங்கை ..... அங்கம் 14

## சிங்கள சினிமாவை வளர்த்து தேசிய பொருளாதாரத்தையும் ஊக்குவித்த சினிமாஸ் குணரத்தினம்

எமது ஈழத்து இலக்கிய நண்பர் பல்கலைவேந்தன் சில்லையூர் செல்வராசன் சிறந்த குரல்வளம் மிக்கவர். அவர் இலங்கை வானொலியில் வர்த்தக விளம்பரங்களை அறிவிக்கும் பணியிலுமிருந்தவர். போல்பொய்ன்ட் பேனைக்கு அவர் வழங்கிய தமிழ் வடிவம் குமிழ் முனைப்பேனா. ஒரு காலத்தில் எமது தமிழ் மொழி மாத்திரமல்ல ஏனைய பல மொழிகளும் வழக்கொழிந்துபோன பல மொழிகளும் கல்லிலே பொழியப்பட்டன.

கல்வெட்டுகள் அவற்றின் சரித்திரத்தைச் சொல்கின்றன.

காளிதாசர் - வள்ளுவர் - கம்பர் - இளங்கோ - கபிலர் - ஔவையார் - தொல்காப்பியர் - புகழேந்தி - ஒட்டக்கூத்தர் - சீத்தலைச்சாத்தனார் உட்பட பல முன்னோர்கள் பனையோலை ஏட்டிலே எழுதிய காலத்தில் மின்சாரம் இல்லை.

தொட்டெழுதும் பேனை அறிமுகமான காலத்தில் மன்னர் ஆட்சிக்காலம் முடிவுக்கு வந்து காலனி ஆதிக்கம் உருவாகிவிட்டது.

பிற்காலத்தில் தொட்டெழுதும் பேனை



தனது ஆயுளை நிறைவுசெய்தபொழுது மைநிரப்பிய பவுண்டன் பேனைகள் - பாக்கர் பேனைகள் - பைலட் பேனைகள் வரவாகின. காலப்போக்கில் குமிழ்முனைப்பேனை பாவனைக்கு வந்துவிட்டது.

களனி கங்கைக்கும் இந்த போல்ட் பொயின்ட் பேனைக்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்கிறீர்களா? கொழும்பு - கிராண்ட்பாஸ் வீதி சந்திக்கும் ஆமர்வீதியில் ஒரு காலத்தில் கே.ஜீ. இண்டஸ்ரீஸ் என்ற பெரிய நிறுவனம் அமைந்திருந்தது. இங்கிருந்து தயாரிக்கப்பட்ட குமிழ் முனைப்பேனைகளுக்கு அப்பொழுது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பிருந்தது.

பாக்கர் பேனைக்கு மை செலுத்தவேண்டும். ஆனால், குமிழ்முனைப்பேனாவுக்கு அந்தத்தேவை இல்லை. கே.ஜீ. இண்டஸ்ரீஸ் உரிமையாளர் கே. குணரத்தினம் அதற்கு முன்னர் சினிமாஸ் லிமிட்டட் என்ற திரைப்பட இறக்குமதி நிறுவனத்தையும் விஜயா ஸ்ரூடியோ என்ற படத்தயாரிப்பு - படப்பிடிப்பு - ஒலி - ஒளிப்பதிவு நிறுவனத்தை வத்தளை ஹெந்தளையிலும் அமைத்தவர்.

கொழும்பில் ஆமர் வீதிக்கு அருகாமையில் புதுச்செட்டித்தெருவில்தான் சினிமாஸ் லிமிட்டட் கம்பனி இயங்கியது.

கனகசபை குணரத்தினம் என்ற இயற்பெரைக்கொண்டிருந்த இவரை சினிமாஸ் குணரத்தினம் எனவும் கே.ஜீ. எனவும் அழைப்பார்கள். யாழ்ப்பாணம் அரியாலையை பிறப்பிடமாகக்கொண்டிருந்த இவர் 1917 ஆம் ஆண்டு பிறந்து கொழும்பிலேயே நிரந்தரமாக தங்கியிருந்து, இந்தியாவிலிருந்து திரைப்படங்களை இறக்குமதி செய்து இலங்கை எங்கும் திரையிட்டவர்.

கொழும்பில் இவருடை திரையரங்குகளில் குறிப்பிடத்தகுந்தவை: கிங்ஸ்லி, கெப்பிட்டல், வெள்ளவத்தை பிளாஸா, பொரளை லிடோ. மருதானை காமினி. இவை தவிர வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் பல திரையரங்குகளையும் குத்தகை

**ரஸஞானி**

அடிப்படையில் எடுத்து நடத்தினார்.

வத்தளை ஹெந்தளையில் அமையப்பெற்ற விஜயா ஸ்ரூடியோவிலிருந்து பல சிங்களத்திரைப்படங்களை தயாரித்து திரையிட்டார். அதற்கு முன்னர் பல இந்தியத்திரைப்படங்களை சிங்களத்தில் மொழிமாற்றம் செய்து வெளியிட்டுவந்திருக்கும் குணரத்தினம், 1953 ஆம் ஆண்டு இலங்கையிலேயே திரைப்படங்களை தயாரிப்பதற்காக குறிப்பிட்ட விஜயா ஸ்ரூடியோவை உருவாக்கினார். இவர் எடுத்த முதல் சிங்களப்படம் சுஜாதா. அதன் வெற்றியைத்தொடர்ந்து, இருபத்தியைந்திற்கும் மேற்பட்ட சிங்களத்திரைப்படங்களை தயாரித்து வெளியிட்டு சிங்கள ரசிகர்களுக்கு விருந்துபடைத்தார்.

என்னதான் அவர் சிங்களப்படங்கள் எடுத்திருந்தாலும், அவர் சிங்களவர் இல்லையே!? என்பதுதான் 1983 இல் இனவாத சங்காரத்தில் ஈடுபட்ட தீயசக்திகளின் எண்ணமாக இருந்திருக்கிறதுபோலும். அதன்விளைவு குறிப்பிட்ட விஜயா ஸ்ரூடியோ வன்முறை கும்பலினால் தீயிட்டு கொளுத்தப்பட்டது.

இச்சம்பவத்தை கேள்விப்பட்ட நடிகரும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவரும் சந்திரிக்கா பண்டாரநாயக்காவின் காதல் கணவருமான விஜயகுமாரணதுங்கா அணிந்திருந்த சாரத்துடனேயே தனது காரை செலுத்திவந்து விஜயாவிலிருந்த சிங்கள திரைப்படச்சுருள்களை காப்பாற்ற போராடினார்.

இரண்டு வேறு வேறு சந்தர்ப்பங்களில் சினிமாஸ் குணரத்தினமும் விஜயகுமாரணதுங்கவும் இனந்தெரியாத நபர்களினால் தலைநகரத்தில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கே.குணரத்தினம், தமிழ் வர்த்தகப்பிரமுகர். அவர் விரும்பியிருந்தால் தான் பிறந்த வடபுலத்தின் ஊரிலேயே தனது தொழில்துறைகளை தொடங்கி விருத்தி



சினிமாஸ் குணரத்தினம்

செய்து தனது இனத்து மக்களுக்காக மாத்திரம் வாழ்ந்திருக்க முடியும். அவருக்கு இலங்கையின் தேசிய பொருளாதாரத்தை ஊக்குவிக்கவேண்டும் என்ற நல்லெண்ணமும் தீர்க்கதரிசனமும் இருந்தது.

அதனால் உள்நாட்டில் பெரும்பான்மை இனத்தவர்களுக்காக சிங்களப்படங்களை தயாரித்தார். அதன்மூலம் சிங்கள கலைஞர்களுக்கும் சினிமாத்துறை தொழில் நுட்பவியலாளர்களுக்கும் வேலை வாய்ப்பினை வழங்கினார். அவரது திரையரங்குகளில் மூவினத்தவர்களும் பணியாற்றினர்.

இவை தவிர ஆமர்வீதியில் கே.ஜீ. இண்டஸ்ரீஸ் நிறுவனத்தை உருவாக்கி பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கினார். அத்துடன் அஸ்பெஸ்டாஸ் உற்பத்திகள், குமிழ் முனைப்பேனா தயாரிப்பு முதலான தொழில் துறைகளிலும் முதலிட்டு உள்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கடுமையாக உழைத்தார்.

1983 இல் போர்க்கால நெருக்கடி தொடங்கியதும் வடக்கிற்கான ரயில்சேவையும் சீர்குலைந்ததை அறிவீர்கள். மக்களின் வடக்கு - தெற்கிற்கான போக்குவரத்து வசதியை கவனத்தில் கொண்டு கே.ஜீ. பஸ் சேவையையும் ஆரம்பித்து. பல பஸ்வண்டிகளை இறக்குமதி செய்து சேவையில் ஈடுபடுத்தினார்.

அதில் பயணிக்கும் பயணிகளின் வசதி கருதி யாழ்ப்பாணம் சென்று திரும்பும் மார்க்கத்தில் நீர்கொழும்பில் அவரது ராஜ் சினிமா என்ற திரையரங்கின் வளாகத்தில் ஒரு சிற்றுண்டிச்சாலையையும் பயணிகள் ஓய்வெடுக்கும் மண்டபத்தையும் அமைத்தார்.

அத்துடன் ஏ 9 பதையில் முறிகண்டி கோயிலுக்கு அருகிலும் சிற்றுண்டிச்சாலையும் பயணிகள் ஓய்வெடுக்கும் மண்டபத்தையும் அமைத்தார்.

அவருடை நிறுவனங்கள் தனியார் துறை சார்ந்திருப்பினும் அவற்றினால் பயனடைந்தவர்கள் இலங்கையின் மூவின மக்களும்தான். ஆனால், அவருடை அருமை பெருமை தெரியாத தீய சக்திகள் அவருடைய நிறுவனங்களை தீயிட்டுக்கொளுத்தி அழித்து நிர்மூலம் செய்தன. இறுதியில் அவரையும் சுட்டுக்கொன்றன.

இதனால் யாருக்கு நட்டம்?

எல்லோரும் பிறக்கிறார்கள். இறுதியில் மறைகிறார்கள். அவர் என்றாவது



ஒருநாள் இயற்கையின் தீர்ப்பின் பிரகாரம் மறைந்திருப்பார். ஆனால், அந்த இயற்கையை முந்திக்கொண்டு அவருக்கு படுகொலைத்தீர்ப்பு வழங்கியவர்களுக்கு காலம் பதில் சொல்லும். அவரைக்கொன்றவர்கள், எங்கள் தேசத்தின் பொருளாதாரத்தையும் கொன்றவர்கள்தான்.

அவர் தயாரித்து சிங்கள மக்களுக்காக வழங்கிய திரைப்படங்களின் பட்டியலைப்பாருங்கள்:

சுஜாதா ( 1953) - வரத காகெத? -(1954) ரதல பிலிருவ ( 1956) -தொஸ்தர 1956) - துப்பதாகே துக்க (1956) சந்தேசய ( 1960) - வீர விஜயா (1960) அதட்ட வெடிய ஹெட்ட ஹொந்தாய் - (1963) - உடரட்ட மெனிக்கே (1963) - தீவரயோ - ( 1964) சண்டியா - ( 1965) - அல்லப்பு கெதர ( 1965) ஒப துட்டு தா ( 1966) - சூர சௌரயா (1967) - தென் மதக்கத ( 1972)

சினிமாஸ் குணரத்தினம் மிகவும் சிக்கனமான பேர்வழி என்றும் சமூகத்தில் ஒரு பார்வை இருந்தது. அவரது சிக்கனமான வாழ்க்கை முறை எளிமையானது. அவர் தனது தொழில் நிறுவனங்களை விருட்சமாக்கி பலருக்கும் நிழல் பரப்பியவர்.

மாணவர்களுக்கும் அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள் உட்பட அனைத்து தரப்பினருக்காகவும் சகாய விலையில் போல்ட் பொயின்ட் பேனைகளை அறிமுகப்படுத்தியவர்.

அத்தகைய பெருந்தகையை தீயசக்திகள் வாழவிடவில்லை. அவரை இன்று யாராவது நினைத்துப்பார்க்கிறார்களா? என்பதும் தெரியவில்லை.


(தொடரும்)

காணி
விற்பனைக்கு உண்டு

திருப்பெருந்துறை கண்ணகி அம்மன் கோவில் பிரதான வீதியில் காணி விற்பனைக்குண்டு. 36பேச் காணியை மொத்தமாக பெற்றுக்கொள்ள விரும்புவோர் பின் காணும் தொலைபேசி இலக்கத்துடன்

தொடர்பு கொள்ளவும்.
0716165785

# ஜீவத் திமிர்: தொண்ணூறாவது அகவை காணும் 'மல்லிகை'' ஆசிரியர் டொமினிக் ஜீவா



1950களின் பிற்பகுதி கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர் வகுப்பில் பயின்றுகொண்டிருந்தோம். 17 அல்லது 18 வயது திராவிட முன்னேற்றக் கழக எழுத்தாளர்களின் எழுத்துக்களால் கவரப்பட்டிருந்த துடிப்பான வயது. கல்கி, ஆனந்த விகடன், கலைமகள் வாசித்த காலம். பொன்னியின் செல்வன் எம்மைக் கவர்ந்த வயது. ஈழத்தில் கைலாசபதி தினகரன் ஆசிரியராக இருக்கிறார். இளங்கீரனின் நாவல்கள் தினகரனில் வெளிவருகின்றன. முற்போக்கு எழுத்தாளர் என நாம் அன்று அறிந்தது இளன்கீரனை மாத்திரமே. அவர் எமது பாடசாலைக்கு ஒரு நாள் வந்தார். 1960 களில் பேராதனைப்பல்கலைக்கழகம் செல்கிறோம். முற்போக்கு எழுத்தாளர் பற்றிக் கேள்விப்பட்டிருந்தோம். ஆனால் எவரையுமே அறிந்திலோம்.

பல்கலைக்கழகத்தில் செ. யோகநாதன், செங்கை ஆழியான், செம்பிடன்செல்வன், செ. கதிர்காமநாதன், அங்கையன் கைலாசநாதன் ஆகிய எழுத்தாளர்கள் தொடர்பு கிடைக்கிறது. யாழ்ப்பாணத்தில் வெளிவந்த கலைச்செல்வி, மல்லிகை பற்றி அறிகிறோம். டொமினிக் ஜீவா பற்றி எனக்கு செ. யோகநாதன் கூறுகிறார். பேர்





பிடித்துக்கொண்டது "டொமினிக் ஜீவா". அத்தோடு ரகுநாதன் டானியல் என்ற எழுத்தாளர்கள் பற்றியும் கூறுகிறார். அவர்களைக் காண அவாவுறுகிறேன். கைலாசபதி அப்போதுதான் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளராக நியமனம் பெற்று வருகிறார். கைலாசபதி அறை இடைக்கிடை நாம் சென்று சந்திக்கும் இடமாகிறது.

ஜீவாவைப்பற்றிய கதைகள் அங்கு இடம்பெறும். 1960 களின் ஆரம்பப்பகுதியில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் யாழ்ப்பாணச்சுவாமிக்கு விழா எடுக்கிறது. கூடவே முற்போக்கு எழுத்தாளர் சங்க விழாவும். என்னையும் அதில் இணைத்து விடுகிறார் கைலாசபதி. யாழ்ப்பாணச் சாமி பற்றி பருத்தித்துறையில் நடந்த கவி அரங்கில் நானும் கவிதை பாடவேண்டும். நண்பர் செ. யோகநாதனுடன் யாழ்ப்பாணம் செல்கின்றேன்.

விழாவுக்கு முதல் நாளிரவு விழா நடைபெறவிருந்த மாநகரசபை மண்டபத்தை அலங்கரித்தபடி பலர் ஓடி ஓடி வேலை செய்கிறார்கள். என்னை அழைத்துக்கொண்டு பெனடிக்ட் பாலனும் யோகநாதனும் மண்டபம் செல்கிறார்கள். பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் கைலாசபதி ஆகியோர் உரையாடிக்கொண்டிருக்கிறார்கள். வேலை செய்பவர்களுக்கு உதவியும் செய்கிறார்கள். ஒருவர் ஓலை சுமந்து வருகிறார், இவர்தான் டானியல் என்றார் யோகநாதன். ஒருவர் கம்பு நடக் குழி தோண்டிக் கொண்டிருக்கிறார். இவர் ரகுநாதன் என அறிமுகப்படுத்தினார்கள். இளங்கீரன் குருத்தோலை கட்டிக்கொண்டிருந்தார், ஏற்கனவே அவரை நான் அறிவேன். கணேசலிங்கமும் அங்கு ஓடி ஓடி வேலை செய்துகொண்டிருந்தார். நான் அறிந்த பெரும் பெரும் எழுத்தாளர்கள் சாதாரண மனிதர்போல அங்கு செயற்பட்டமை எனக்கு வியப்பளித்தது. ஒருவர் அட்டகாசமாக பேசிக்கொண்டிருக்கிறார், அவரது உரத்த தொனி அனைவரையும் அவர்பால் ஈர்க்கிறது.

இவர்தான் டொமினிக் ஜீவா என்றார்கள். பின்னால் வாரிவிடப்பட்ட தலை,. வெள்ளை வேட்டி, கைமடித்துவிட்ட வெள்ளை வாலாமணி. இப்படித்தான் எனக்கு ஜீவாவின் அறிமுகம் ஆரம்பமானது. மறுநாள் முற்போக்கு எழுத்தாளர் கொள்கை வகுக்கும் கூட்டம் நடைபெற்றதாக ஞாபகம். எனக்கு எல்லாமே புதுசு, அவர்களது பேச்சுக்கள் பல புரியவில்லை. அதில் உரத்த தொனியில் உணர்ச்சிகரமாக உரையாற்றினார் ஜீவா. அமைதியான குரலில் கிண்டல் தொனியில் உரையாற்றினார். டானியல் இருவரும் இருவேறு குணாம்சங்களாக எனக்குத் தோற்றினர். ஜீவாவின் அந்த உணர்ச்சிகரமான தொனி இப்போதும்






காதில் ஒலிக்கிறது. அந்த உணர்ச்சிகரமான உரத்த தொனியை அவர் இன்றுவரை வைத்திருக்கிறார்.

1964 களில் ஜீவா மல்லிகையை அறிமுகம் செய்ய மட்டக்களப்புக்கு வருகிறார், அவருடன் சில இடங்கள் செல்கிறோம். மக்கள் பெரிதாக அக்கறை காட்டவில்லை. சில சந்தாக்கள் எடுத்துக்கொடுத்தோம். 1978 இல் நான் யாழ்ப்பாணவாசியானேன்.

ஜீவாவுடன் நெருங்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. மல்லிகைக்கு கட்டுரை தரும்படி ஜீவா கேட்டார். நான் மல்லிகைக்குக் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தேன். தனி ஒருவனாக நின்று அன்று அச்சுக்கோப்பாளர் சந்திரசேகரத்தின் துணையுடன் மல்லிகை நடத்தி வந்தார் ஜீவா. இடைக்கிடை கஸ்தூரியார் ஒழுங்கை செல்வது, அவருடன் உரையாடுவது என்பன வழக்கமாகின. நான் அப்போது திருநெல்வேலியில் வசித்தேன். பின்னர் கந்தர்மடத்தில் வசித்தேன், அடிக்கடி ஜீவா வீடு வருவார். அவர் மைனா வளர்த்து வந்தார் அதற்குக்கு கொடுக்க வெட்டுக்கிளி அவருக்குத் தேவைப்பட்டது. ஜீவா வெட்டுக்கிளி அடித்துப் பிடிப்பது அன்று எனக்கு ஓர் வினோதமாகப்பட்டது. கைலாசபதி வீடும் திருநெல்வேலியில் இருந்தது; அதுவும் எழுத்தாளர் கூடும் இடமானது. பல எழுத்தாளர்களை அங்கு நான் கண்டுள்ளேன்




1980 களுக்குப் பிறகு யாழ்ப்பாணம் புதிய அனுபவங்களை எதிர்கொண்டது அனைத்திற்கும் தாக்குப் பிடித்தபடி ஜீவா கர்மயோகியாகத் தன் பணியைத் தொடர்ந்தார். இறுதிக்காலத்தில் அவர் கொழும்பு வரவேண்டியதாயிற்று. அங்கு அவர் தன் வேலையைத் தொடர்ந்தார். மல்லிகை செய்த வேலைகளை அனைவரும் அறிவர். பல கட்டுரைகள்; அது பற்றிப்பலர் எழுதியுள்ளனர். காத்திரமான எழுத்தாளர்கள் எனத் தம்மைக் கருதிக்கொள்வோர் சிலர் மல்லிகையில் வரும் படைப்புகளைப் பற்றி அதிகம் பேசுவதில்லை

ஆனால் மல்லிகைக்கு என ஒரு வரலாற்றுக்கடமை இருந்தது. பலரை அது எழுத வைத்தது, அட்டைப்படங்கள் போட்டு அறிமுகம் செய்து கௌரவப்படுத்தியது. சிங்கள எழுத்தாளர்களையும் அறிமுகம் செய்தது. ஜீவாவின் பலம் என்ன என்று நான் நினைப்பதுண்டு. அவரின் பலம் ஒழிவு மறைவின்மைதான். ஒழிவுமறைவின்றி அவர் உண்மைகளைச் சொல்லும்போது சிலருக்கு அது முகத்தில் அறைந்ததுபோல ஆகிவிடும். எனினும் அவர்கள் புன்சிரிப்போடு ஒரு சங்கடத்தோடு ஜீவாவை ஏற்றுக்கொள்வர்.

அவரின் பலத்தையும் பலஹீனத்தையும் அறிந்து ஏற்றுக்கொள்ளும் நண்பர்களைப் பெற்றுக்கொண்டமையே ஜீவாவின் சாதனைபோல எனக்குத் தோன்றுகிறது. அவருக்கு யாழ் பல்கலைக்கழகம் ஒரு கலாநிதிப்பட்டத்தைக் கொடுத்திருக்கலாம். டானியலுக்கும் கலாநிதிப்பட்டம் வழங்க வேண்டுமென்று காலம்சென்ற பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) சிபார்சு செய்ததாக ஒரு கதையுமுண்டு. சோழமன்னன் கம்பனுக்குக் கவிச்சக்கரவர்த்தி பட்டம் வழங்கவில்லை. ஒட்டக்கூத்தருக்கும் ஜயம் கொண்டாருக்கும்தான் வழங்கினான். ஆனால் மக்கள் கம்பனுக்களித்த கவிச்சக்கரவர்த்தி பட்டம்தானே நிலைத்திருக்கிறது. ஜீவா அடிக்கடி சொல்லி மற்றவரை அதிர வைக்கும் ஒரு சொற்றொடர் இது "நான் பாசாணத்தில் புழுத்த புழு யாரும் என்னை அழிக்க முடியாது". இந்தத் திமிர்தான் ஜீவா.

இந்தத்திமிரோடு இந்தக் கலைஞன் இன்னும் பல ஆண்டுகள் வாழ வாழ்த்துவோம்.



# சம்மாந்துறை எதிர் பழுகாமம் எதிர் போரைதீவு - ஒரு முக்கோணச்சமர்

1611 ஆம் ஆண்டு யூன் மாதம். கண்டி மகாராசன் செனரதனின் அரசவை. ஒற்றுச்செய்தி கிடைத்திருந்ததால், வந்து வணங்குபவன் பழுகாம மன்னனின் தூதன் என்பது அரசனுக்குத் தெரிந்திருந்தது. "மன்னா, போரைதீவு அரசனான ஞானசங்கரி, போர்த்துக்கேயருடன் கைகோர்த்திருக்கிறான். தன் ஆளுகைக்குட்பட்ட எல்லாத் துறைமுகங்களையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றான். அவனது படை தங்களுக்கெதிராகக் கிளம்புவதற்கான இரகசியத் திட்டங்கள் தீட்டப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. இதை எங்கள் அரசரின் ஆணைக்கேற்ப தங்களிடம் முறைப்படி அறிவித்து எச்சரிக்கவே வந்தேன்" தூதன் பணிந்தான். "போரைதீவு மன்னன் ஞானசங்கரி, உங்கள் அரசன் செல்லப்பண்டாரத்தின் கூடப்பிறந்த தம்பி அல்லவா?" செனரதனின் புருவங்கள் நெறிந்தன. "ஆம் அரசே. ஆனால் அரசியலில் உறவுகளுக்கு எந்த விதமான அர்த்தமும் இல்லை என்பதே இராஜதந்திரத்தின் முதற்பாடம்." தூதன் பணிவாகத்தான் சொன்னான்.

போர்த்துக்கேயர் ஓரிரு நாட்களுக்கு முன்பு தான் திருகோணமலையில் வெறியாட்டம் ஆடியிருந்தார்கள். கிழக்கில் பலம்வாய்ந்த ஒரு பின்னணி இருக்காமல் இந்த முயற்சியை அவர்கள் எடுத்திருக்கமாட்டார்கள் என்பதை செனரதனும் ஏற்கனவே ஊகித்திருந்தான். செல்லப்பண்டாரத்தின் தூது அவனது ஊகத்தை உறுதி செய்தது. உடனே பல்லைக்கடித்தபடி அமைச்சரை அழைத்தான் "உடனே போரைதீவுக்கு செய்தி செல்லட்டும். செய்தி கிடைத்த அடுத்த நாளே அரசன் ஞானசங்கரி கண்டி அரசவைக்கு சமூகமளித்தாக வேண்டும்."

செனரதன் போரைதீவுக்கு செய்தி அனுப்பிய சில நாட்களிலேயே போரைதீவு தூதன் வந்து அவனைப் பணிந்தான். "நான் போரைதீவு மன்னனையே வருமாறு அழைத்தேன். தூதனை அல்ல" என்று முகம் சுழித்தபடி சொன்னான் செனரதன். "அரசே,

## தங்களுக்குள் மோதி அழிந்த மட்டக்களப்பு அரசுகள்

எங்கள் மன்னர் ஞானசங்கரி தங்களுக்கு வணக்கங்களைச் சொல்கின்றார். எந்தக் காலத்திலும் எங்கள் அரசர் கண்டியரசுக்கு எதிரானவர் அல்ல என்பதை தங்களிடம் எடுத்துக்கூறுவது எனக்கு இடப்பட்ட பணி. தன்னைப் பற்றித் தவறாகத் தூதனுப்பிய செல்லப்பண்டாரம், பதவி வெறியில் தன்னுடன் கூடப்பிறந்த மூத்த அண்ணனையே கொன்றொழித்தவன் என்பதை தங்களுக்கு நினைவூட்டுமாறும் அவர் கோரினார். என் தூதின் நோக்கம் அவ்வளவு தான்."

"அண்ணனும் தம்பியும் உங்கள் சின்னப்பிள்ளைச் சண்டையைக் காட்டுகின்ற இடமா அரசியல்? புதினமான பாரதக்கதை!" செனரதன் பொறுமையிழந்து சொன்னான். "பாரதக்கதை தான் அரசே. ஆனால் தர்மம் வெல்லவேண்டியதே நியதி. எங்கள் அரசர் பக்கமே நீதி உள்ளது. தவிர பழுகாம ஆற்றில் பாதிப்பங்கை உரிமை கோரும் செல்லப்பண்டாரம், சமீபகாலமாக எங்கள் அரசருக்கும் தொல்லை கொடுத்து வருகிறான். முழு பழுகாம ஆற்றுக்கும் தானே சொந்தக்காரன் என்று சொல்லி வருகிறான். அவனால் பழுகாம ஆற்றில் வணிகப் படகுகளில் வரி வசூலிப்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்பது தாங்கள் அறியாத செய்தி அல்ல" என்று சொல்லி தூதன் பணிந்தான். செனரதனுக்குக் குழப்பமாகப் போய் விட்டது. பழுகாம ஆற்றில் இடம்பெறும் வரி வசூலிப்பு மாறாட்டங்கள் தொடர்பான செய்திகளை ஏற்கனவே அவன் அறிந்திருந்தான். "நல்லது. நீ கிளம்பலாம். பழுகாம ஆறு விடயத்தில் போரைதீவு, பழுகாமம் இரண்டினதும் சிக்கலுக்கு நான் கூடிய விரைவில் முடிவெடுப்பேன் என்று உன் மன்னனிடம் சென்று சொல்." வணங்கிவிட்டுக் கிளம்பினான் தூதன்.

கீழைக்கரையின் இந்தச் சிக்கலை இப்படியே விட்டால் நன்றாக இருக்காது என்பதை பலவாறு சிந்தித்த செனரதன் ஒரு முடிவுக்கு வந்திருந்தான். விரைவில் அங்கு தன் ஆதிக்கத்தை உறுதி செய்யவேண்டும். கூடவே போர்த்துக்கேயருக்கெதிரான வலுவான படை ஒன்றை அமைக்கவேண்டும். செனரதனது ஆணை பொறித்த மடல்கள் அவனது ஆட்சிக்குக் கீழ் அமைந்த அனைத்து சிற்றரசுகளுக்கும் பறந்தன. வரலாற்று முக்கியத்துவம் மிக்க அந்தப் பேரவை 1611 யூலை 16 கண்டியில் கூடியது. கொட்டியாரத்து மன்னன் இடலி, பழுகாம அரசன் செல்லப்பண்டாரம், மட்டக்களப்பு மன்னன் குமார பண்டாரம், போரைதீவு அரசன் ஞானசங்கரி, ஊவா இளவரசன் கரவெட்டி ராலேஹாமி, மீகோணை இளவரசன் மார்செலஸ் டி பொஸ்கௌவர், வெல்லசை இளவரசன் மெதிரி ராலேஹாமி, கொத்மலை இளவரசன் மேவாதுரு ராலே, நான்குகோரளை அதிபர் விக் வனசிங்க, உடரட்டை பிரபு கோல ராலே, யாலகொடை இளவரசனின் தமையன் யட்டிநுவர, நானூற்றுப்பற்று ஆளுநர் கேல் ஹெபராட், அஸ்கிரிய ஆளுநர் கொரோப், மாத்தளை ஆளுநர் வனடிகிரி ஆகியோரும் யாழ்ப்பாண அரசின் தூதர் ஒருவரும் இதில் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் 50,000 வீரர்களைக் கொண்ட கண்டி அரசின் வலுவான படையொன்றை போர்த்துக்கேயருக்கு எதிராக அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூடவே மன்னன் அந்த அவையில், "பழுகாம ஆற்றின் எல்லைப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை போரைதீவு மற்றும் பழுகாம அரசர்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும். ஏதாவது நடக்கக்கூடாதது நடந்ததென்று கேள்விப்பட்டால் இருவரையுமே வெட்டிக்கொல்வேன்!" என்ற எச்சரிக்கையும் விடுத்தான்.

1613இல் மன்னன் நோய்ப்படுக்கையில் வீழ்ந்தபோது, அவசரமாக இன்னொரு முறை கண்டி பேரவை கூட்டப்பட்டது. அதில், 1611இல் கலந்துகொண்டோர் தவிர, பாணமை அரசன் சமரவாகுவும் யாழ்ப்பாண அரசின் தூதர் நமச்சிவாயமும் (?!) கூடக் கலந்துகொள்கிறார்கள். தன் ஆட்சிக்கு உட்பட்ட எல்லோரும் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் வாழவேண்டும் என்ற கோரிக்கை மன்னனால் விடுக்கப்படுகிறது.

ஆனால் அடுத்த ஆண்டு இறுதியிலேயே ஓர் அசம்பாவிதம் நிகழ்கிறது. பழுகாம அரசனின் தூதர்களை மட்டக்களப்பு மக்கள் கொன்றுவிடுகிறார்கள். அதனால் பழுகாம அரசும் மட்டக்களப்பு அரசும் யுத்தமொன்றில் இறங்குகின்றன. ஊவா மன்னன் பழுகாமத்தின் துணைக்கு வருவதால், மட்டக்களப்பு மன்னன் துரோகத்தால் கொல்லப்படுகிறான். அவன் படை தோற்றோடுகிறது. மட்டக்களப்பு அரசு செல்லப்பண்டாரத்தின் பழுகாமத்தோடு இணைக்கப்படுகிறது.

கீழைக்கரையின் அண்ணன் தம்பி அரசர்கள் அடிபிடிபட்ட விரிவான கதையை இப்படிச் சொல்பவர், ஒரு ஒல்லாந்து மதபோதகர். பெயர் பிலிப்ஸ் பல்டியஸ் (1632 - 1671). பால்டியசால் எழுதப்பட்ட, இந்திய நாடுகள் தொடர்பான நூல், இலங்கை வரலாற்று நூல்களில் சிறப்பிடம் பெற்ற ஒன்று. அதில் அருமையான பல வரைபடங்களும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களும் கிடைக்கின்றன. அவற்றில் கிழக்கிலங்கை பற்றி அவர் எழுதியிருந்த சம்பவங்களைத் தான் நாம் மேலே பார்த்தோம்.

யாழ்ப்பாணம் போல கிழக்கில் ஏன் ஒரு

**மைங்கணான் மகிழறிவன்**

தனியரசு அமையவில்லை? அதற்கான காரணம் எளிமையானது. இங்கு வன்னியைப் போல சிற்றரசர்கள் தங்களுக்குள் சிறுசிறு நிலப்பகுதிகளைப் பிரித்துக்கொண்டு ஆண்டு வந்திருக்கின்றார்கள். அவர்கள் பெரும்பாலும் சகோதரர்களாக இருந்தார்கள் என்பதை, போரைதீவு மற்றும் பழுகாம அரசர்கள் சகோதரர்கள் என்ற குறிப்பின் மூலம் அறிகின்றோம். இயல்பாகவே அரசியல்வாதிகளுக்கு இருக்கும் மண்ணாசை அவர்களுக்கும் இருந்தது, கூடப்பிறந்தவன் என்றுகூடப் பாராமல், ஒருவன் மூத்த சகோதரனைக் கொன்றிருக்கிறான். அப்படி பரிதாபமாக இறந்த மூத்தவன் யாரென்று தெரியவில்லை.

ஆனால், 1603இல் எழுதப்பட்ட ஒரு ஒல்லாந்தர் குறிப்பில் மட்டக்களப்பை தர்மசங்கரி அல்லது தர்மசிங்கத்துரை (Tamme cangattuarie) எனும் மன்னன் ஆள்வது சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் சிலர் 1603 குறிப்பில் சொல்லப்படும் தர்மசங்கரியும், பல்டியஸ் சொல்லும் ஞானசங்கரியும் (Jane sangatie) ஒருவனே என்கின்றார்கள். இருவரும் வேறு வேறு என்ற நம் ஊகம் சரி என்றால், ஞானசங்கரி 1611இல் குற்றம் சாட்டுவதன் படி, செல்லப்பண்டாரத்தால் கொல்லப்பட்ட மூத்த சகோதரன், தர்மசங்கரியாக இருக்கக்கூடும்.

பழுகாம அரசும் போரைதீவு அரசும் பழுகாம ஆற்றை (இன்றைய மட்டக்களப்பு வாவி) பாகம் பிரித்து வணிகப்படகுகளிடம் வரி வசூலித்து வந்தன என்பதன் மூலம், இன்றைய மட்டக்களப்பு வாவியின் இருபுறமும் இருந்த நிலப்பகுதிகளை பழுகாம அரசும் போரைதீவு அரசும் இரு பாகங்களாக்கி ஆண்டு வந்திருக்கலாம் என்பதை ஊகிக்க முடிகின்றது. ஆனால் மூன்றாவதாக மட்டக்களப்பு மன்னனான குமாரபண்டாரம் பற்றிய குறிப்புகள் வருவதாலும், அவனுக்கும் பழுகாம அரசுக்கும் இடையே நடைபெற்ற சண்டை பற்றிய குறிப்புகள் வருவதாலும், அப்போது மட்டக்களப்பு என்பது பழுகாமமோ போரைதீவோ அல்லாத தனியொரு பகுதி என்பது தெரியவருகிறது. இடச்சு மற்றும் போர்த்துக்கேயக் குறிப்புகளில் மட்டக்களப்பின் தலைநகர் சம்மாந்துறையே என்ற குறிப்பு காணப்படுவதால், குமாரபண்டாரம் ஆண்ட மட்டக்களப்பு, சம்மாந்துறையைச் சுற்றியுள்ள பகுதியே எனலாம்.

மட்டக்களப்பு மக்கள் ஏன் பழுகாமத் தூதர்களைக் கொன்றார்கள், பழுகாம மன்னன் செல்லப்பண்டாரத்துக்கும், அவனால் கொல்லப்பட்ட மட்டக்களப்பு மன்னன் குமாரபண்டாரத்துக்குமான உறவு என்ன, செல்லப்பண்டாரத்துக்கு ஏன் ஊவா மன்னன் துணை நின்றான், பழுகாமம் மற்றும் ஊவா அரசுகளின் இந்த நடவடிக்கைக்கு கண்டி மன்னனின் எதிர்வினை எவ்வாறு இருந்தது என்பன பற்றிய விவரங்களெதுவும் ஐரோப்பியக் குறிப்புகளில் இல்லை. மட்டக்களப்பு மன்னன் துரோகத்தால் கொல்லப்பட்டான் என்று சொல்லப்படுவதால், அவன் செல்லப்பண்டாரத்துக்கு நெருங்கிய உறவினன் என்பது தெரியவருகிறது. அவன் தர்மசங்கரியின் மகனாகவோ அல்லது, செல்லப்பண்டாரத்தின் இன்னொரு தம்பியாகவோ இருக்கக்கூடும். செல்லப்பண்டாரம் ஏற்கனவே போரைதீவு மன்னனோடு முரண்பட்டவன் என்பதைச் சிந்தித்தால், மட்டக்களப்புப் போரும், மண்ணாசையால் இடம்பெற்றது என்ற முடிவுக்கே நாம் வந்து சேர முடியும்.

தொடர்ச்சி... (பக்கம் -23 )



# மலைகளைப் பேசவிடுங்கள்

## நாட்டுரிமைப் போராட்டத்தில் வெற்றிபெற்ற மலையகம்

அந்தோனி அய்யாவின் வருகையின் தொடர்ச்சியாக பாராளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர்கள் தமிழகம் சென்று ஆய்வுகளைச் செய்தனர். இறுதியில், 2008.09.23 அன்றும் 2009.01.08 ஆம் திகதியும் திருத்தங்களுடனான இரண்டு சட்ட மூலங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

'தமிழ் நாட்டில் அகதி முகாம்களில் வாழும் எந்தவொரு நபரும் அவர் இலங்கையில் 1964ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதியில் இருந்து நிரந்தரமாக வசித்த இந்திய வம்சாவளியினராக இருப்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக் கக்கூடியவராக இருப்பின், இச்சட்ட மூலங்களை சபாநாயகர் சான்றுபடுத்திய 2009.02.18 ஆம் திகதியில் இருந்து அவர் இலங்கைப் பிரஜை என்ற அந்தஸ்தை தானாகவே பெற்றுக்கொள்வார்.

“குடியிருப்பாளராக இருந்ததற்கான ஆதாரம்' மிகவும் சாதாரணமான ஒன்றாக இருக்க வேண்டுமெனும் கருத்தினை குழு கொண்டுள்ளது. மேலும் அதற்காக சத்தியக்கடதாசியினை கூட ஏற்றுக்கொள்ள முடியும் என குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் இணங்கியுள்ளனர். இச்சட்டங்கள் இயற்றப்பட்டதை தொடர்ந்து இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை பிரச்சினை இனிமேலும் எழாது' என குழு தனது இடைக்கால அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டது. 2009 ஆம் ஆண்டு இலக்கம் 5, இந்திய வம்சாவளியினருக்கான பிரஜாவுரிமை வழங்கும் திருத்தச் சட்டம்(Grant of Citizenship to Person of Indian origin (amendment) act No.5 of 2009 ) இலங்கைப் பாராளுமன்றில் நிறைவேறியது. இப்போது இந்திய அகதி முகாம்களில் வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழன் நாடற்றவர் இல்லை. அதற்கு அத்திவாரம் இட்டவர் எஸ்.ஆர் அந்தனி.

தனது இலட்சியத்தை நிறைவு செய்துகொண்ட அந்தனி இந்தியா திரும்ப வேண்டும். இலங்கையில் தன் மூத்த மகனோடு தங்கியிருந்த அந்தனி அய்யா எனக்கு நன்றி சொல்ல மீண்டும் வந்தார். 'இலங்கை வரும் ஆர்வத்தில் அவசர அனுமதிப்பத்திரத்தில் (Emergency Pass) வந்துவிட்டேன். இப்போது திரும்பிப்போக வழியில்லை. கடவுச்சீட்டு எடுக்க வேண்டும். அதற்கு பிறப்பு சான்றிதழ் இல்லை. நீங்கள்தான் உதவ வேண்டும்' என வேண்டி நின்றார்.

நாடற்றவர்களாக இருந்த தன் உறவுகள் இருபத்தெட்டாயிரம் பேருக்கு பிரஜாவுரிமை பெற்றுக்கொடுக்க முன்வந்த அந்த பெருமகன் அந்தனி அய்யா, 'இலங்கை பிறப்புசான்றிதழை யுத்தத்தில் தொலைத்துவிட்ட நிலையில் எவ்வாறு இந்தியா திரும்பினார் என்பதை இன்னுமொரு கட்டுரையில் பார்க்கலாம்.

ஆனால், இந்த வரலாற்று சரித்திரத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொண்ட அவரது தோழர் பாலகிருஸ்ணனும், அந்தோனியும் 2015ஆம் ஆண்டு ஆறு மாத கால இடைவெளியில் இறந்துபோனார்கள். அவர்கள் பற்றிய வரலாற்று பதிவாக இந்த கட்டுரைத் தொடர் மாத்திரமே உள்ளது.

(Grant of Citizenship to Person of Indian origin (amendment) act No.5 of 2009 )எனும் சட்டம் எஸ். ஆர். அந்தனி எனும் மலையகம் பெற்ற மைந்தனின் அறுவடை என்பதை நாம் அறிந்துகொள்வோம். அதே நேரம் ஒரு நிமிடம் அந்தனி அய்யாவுக்காய் அஞ்சலி செய்வோம். (11-07-2015) எஸ்.ஆர். அந்தனி சிவகாசி, வேம்பக்கோட்டை அகதி முகாமில் 'நாடற்றவனாக அடைக்கலம் தேடிச் சென்று இலங்கைப் பிரஜையாக வாழ்ந்து தனது எண்பதாவது வயதில் காலமாகியுள்ளார். மலையகம் மறந்துவிடக்கக் கூடாத இலட்சிய மனிதர் எஸ்.ஆர்.அந்தனி.




இலங்கையில் நாட்டுரிமைக்கான போராட்டங்கள் இரண்டு நடந்தன. அது இரண்டு தமிழ் தரப்புகளால் முன்னெடுக்கப்பட்டன. இரண்டும் வெவ்வேறு அரசியல் தளங்களில் வெவ்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் பேராட்டங்கள் ஆனாலும் இரண்டும் நிறைவு பெற்ற ஆண்டு 2009 என்பதுதான் இந்த போராட்டத்தின் மிகமுக்கிய அம்சமாகிறது.

மல்லியப்புசந்தி திலகர்

1817 களில் இலங்கைக்குள் வந்து 1917 ல் நூறாண்டுகள் கழித்து தமது அமைப்பாக்கத்தைப் பெற்று 1931 ஆம் ஆண்டு இலங்கை பிரசைகளாகி, 1948 ஆம் ஆண்டு அதனை இழந்து அன்றிலிருந்து 'எங்களை இலங்கையராக ஏற்றுக்கொள்,

இலங்கையே எங்கள் நாடு' எனும் நாட்டுரிமை கோரிக்கையை முன்வைத்த இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர்கள் தமது நாட்டுரிமை கோரிக்கையில் வெற்றிபெற்றார்கள். அது 2009 ஆம் ஆண்டு பிரசாவுரிமை திருத்தச் சட்டத்தோடு நிறைவேறியது.
அதேநேரம் இலங்கையைப் பூர்விகமாகக் கொண்ட இலங்கைத் தமிழர்கள் இலங்கை சுதந்திரத்துக்கு பின்னர் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள தீர்மானித்து, இலங்கையில் இருந்து பிரிந்து சென்று தனிநாடு ஒன்றை அமைத்துக்கொள்ளும் ஈழப்போராட்டத்தை பல்வேறு வடிவங்களில் ஆரம்பித்தார்கள்.

ஆரம்பத்தில் அகிம்சை வழியில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் (ஈழ) தமிழர்களின் போராட்டம் 70 களின் பிற்கூறுகளில் ஆயுதப் போராட்டமாக உருப்பெற்றது. அது பல்வேறு இழப்புகளையும் அவலங்களையும் ஒட்டு மொத்த இலங்கை மக்களுக்கும் வழங்கியதாக, தமிழர்களின் தனிநாட்டு கோரிக்கையையும் கைவிட்டதாக, 2009 ஆண்டு ஒரு பெரும் யுத்தத்துடன் நிறைவு பெற்றது.

இதுவே இலங்கையில் இடம்பெற்ற நாட்டுரிமைக்கான போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கையில் வாழும் இரண்டு நிலைத் தமிழர்களின் நிலைப்பாடானது. 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை மலையகத் தமிழர்களின் நாட்டுரிமைக்கான போராட்டம் சரியாக 60 ஆண்டுகள் கழித்து தனது வெற்றியை பதிவு செய்துகொண்டுள்ளது.

இப்போது இலங்கையில் எங்கும் நாடற்றவனாக மலையகத் தமிழர் இல்லை. ஆனால், இலங்கை நாட்டுக்குள் வாக்காளனாக மாத்திரம் இன்றி பிரசைக்குரிய அந்தஸ்தையும் பெற்று வாழ்வதற்கான அவர்களது போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

அடிமட்ட அரசியல் அதிகார பகிர்வான பிரதேச சபைகள் (உள்ளூராட்சி) ஊடாக முழுமையாக சேவைகளைப் பெற முடியாத நிலையில் அவர்களை கட்டுப்படுத்தி வைத்திருக்கும் சட்டத்தை திருத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அவர்களுக்கென ஒரு அங்குல நிலம் இல்லாத நிலையில் குறைந்த பட்சம் அவனுக்கான சொந்த வீட்டை அமைத்துக்கொள்ள ஏழு பேர்ச்சஸ் காணியைப் பெற்றுக்கொள்ள அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. தான் வாழும் பெருந்தோட்ட நிர்வாகத்துக்கு கீழாக கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டவன் படிப்படியாக தனது சொந்த கிராமத்தில் வாழும் புதிய சூழல் தோன்றி வருகிறது.

மலையகத்தில் ஆங்காங்கே புதிய கிராமங்கள் உருவாகி வருகின்றன. அதற்கு அவர்தம் மூதாதையர் பெயர்களை சூட்டிக்கொள்ளும் வல்லமை அவர்களுக்கு கிடைத்து வருகிறது. எல்லோருக்கும் கிடைத்த இலவசக் கல்வி வாய்ப்பை நாற்பது வருடங்கள் கழித்தே பெற்றுக்கொண்ட நிலையில் இன்று தேசிய மட்டத்தில் ஏனையோருடன் போட்டியிடும் மட்டத்திற்கு கல்வி வாய்ப்பைப் பெறுகின்றனர்.

தனியார் கம்பனிகள் வசம் பொறுப்பளிக்கப்பட்ட பெருந்தோட்டங்களில் வாழும் ஒரு மில்லியன் மக்களின் சுகாதார துறையை அரசு பொறுப்பேற்க வேண்டும் எனும் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. நிர்வாக அதிகார பிரிவுக்குள் இந்த மக்களை உள்வாங்கும் வகையில் சட்டத்திருத்தங்கள் கொண்டு வரும் ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதுபோல இன்னும் இன்னும் தங்களை இலங்கையில் ஸ்திரப்படுத்திக்கொள்ளும் போராட்டத்தை தமது அரசியல் பலத்தின் ஊடாக அடைந்துகொள்ளும் வல்லமையை இலங்கை மலையகத் தமிழர்கள் அடைந்து வருகிறார்கள். இந்த செல்நெறியைத் தொடரச் செய்வதே இப்போதைய மலையகத்தின் சவாலாக உள்ளது.

(திருநெல்வேலி உரை ஆதாரங்களுடன் கட்டுரை வடிவமாகி இத்துடன் நிறைவு பெறுகிறது. அடுத்த வாரம் முதல் மலையக மக்களின் நாட்டுரிமை போராட்டத்திற்கு தீர்வு பெற்றுக்கொடுத்த பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையை முழுமையாக “மலைகளை பேசவிடுங்கள்“ பகுதியில் வாசிக்கலாம்.)

தொடர்ச்சி...

### 'உன்னிச்சை வரை தற்காலிக ஏற்பாட்டில் விரைவில் குடிநீர்'

பகுதியில் போர் நடந்துகொண்டிருந்ததால், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த படுவான்கரைப் பகுதியில் தம்மால், திட்டத்தை அமல்படுத்த முடியாமல் இருந்ததாக கூறுகிறார். அதற்கு தாம் அங்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர் வருத்தம் தெரிவித்தார்.

இருந்த போதிலும், தற்போது, வவுணதீவு மற்றும் கொக்கட்டிச்சோலை போன்ற இடங்களுக்கு தாம் விநியோக குளாய்களை பொருத்திவிட்டதாகவும், விரைவில் அதாவது இவ்வருட முடிவுக்குள் உன்னிச்சை வரை தாம் விநியோகத்துக்கான தற்காலிக ஏற்பாடுகளை செய்துவிடுவோம் என்றும் அவர் கூறினார். அதேவேளை, இந்திய அரசாங்கத்தின் உதவித்திட்டம் மற்றும் வாழைச்சேனைக்கு நீர் வழங்கும் வகையிலான கரடியனாற்றில் “சுத்திகரிப்பு ஆலை” அமைக்கும் திட்டம் ஆகியவை அமுலுக்கு வந்தால் நிலைமை சீராகிவிடும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையே, ஏனைய பல மாவட்டங்களில் மிக அதிகமான அளவு மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டிருக்கும் சூழ்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 33 வீதமான மக்களுக்கு (அம்பாறை 85 வீதம்) மாத்திரமே குடிநீர் விநியோகம் இதுவரை வழங்கப்பட்டிருப்பது குறித்து கேட்டதற்கு பதிலளித்த பிரகாஷ், போதுமான குளாய் வலையமைப்பு இன்னமும் அமைக்கப்படவில்லை என்றும், புதிய திட்டங்கள் அமுலுக்கு வரும் போது அவை சீர்செய்யப்படலாம் என்று கூறினார். இதற்கிடையே தமது பகுதி புறக்கணிக்கப்படுவதாக படுவான்கரை மக்கள் பலர் கடுமையான விசனம் தெரிவித்துள்ளனர். அரசியல்வாதிகள் சிலர் அவ்வப்போது இந்த நிலைமை குறித்துப் பேசியிருந்தாலும், அது குறித்து தொடர்ச்சியான அழுத்தம் எதனையும் அவர்கள் கொடுக்கவில்லை என்றும் அவர்கள் குறைப்படுகிறார்கள்.

# சூனியத்தில் இருந்து பூஜ்ஜியத்தை நோக்கி...



பூஜ்ஜியத்தின் கண்டுபிடிப்பு கணிதத்துறை வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பை வழங்கியது. நுண்கணிதம், இயற்பியல், பொறியியல் மற்றும் நவீன தொழில்நுட்பத்திற்கும் அடிப்படையானதாக திகழ்கிறது பூஜ்ஜியம் என்னும் சுழியம்.

**பிபிசியின் மெரிலின் வார்ட்**

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலம் குவாலியரில் நடுநாயகமாக அமைந்துள்ள எட்டாம் நூற்றாண்டை சேர்ந்த குவாலியர் கோட்டை, இந்தியாவின் மிகப்பெரிய கோட்டைகளில் ஒன்றாகும். உயரமான விதானங்கள் கொண்ட கோபுரங்கள், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சிற்பங்கள் மற்றும் வண்ணமயமான ஓவியங்கள் கொண்ட ஒன்பதாம் நூற்றாண்டு ஆலயம் ஒன்றையும் இக்கோட்டையில் காணலாம். இந்த ஆலயம் பாறைகளை செதுக்கி உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பூஜ்ஜியத்தின் தளம்

---

சதுர்புஜ் என்று அழைக்கப்படும் இந்த ஆலயம், இந்தியாவின் பிற புராதன ஆலயங்களை போலவே வடிவமைக்கப்பட்டிருந்தாலும் எழுத்து வடிவில் பூஜ்ஜியம் அமைக்கப்பட்டிருக்கும் புராதன தளம் இந்த ஆலயம் என்பது இதற்கு தனிச்சிறப்பு சேர்க்கிறது.

ஆலயச் சுவரில் ஒன்பதாம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட எழுத்துக்களில் “270“. என்ற எண் தெளிவாக தெரிகிறது.

கணிதம் மற்றும் விஞ்ஞானத்தில், பூஜ்ஜியத்தின் கண்டுபிடிப்பு மிகவும் ஆக்கப்பூர்வமானது. இன்றைய உலகில், உலகின் ஒவ்வொரு நகர்வுக்கும் அடிப்படையாக திகழ்வது பூஜ்ஜியம். கணிதம், நுண்கணிதம், இயற்பியல், பொறியியல் மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் தொடக்கமும் பூஜ்யத்திலிருந்தே சாத்தியமானது.

நவீன இந்தியாவிற்கும், நவீன உலகத்திற்கும் அடித்தளமிட்ட மிக முக்கியமான இந்தக் கண்டுபிடிப்பு இந்திய கலாசாரத்தில் எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்தது?

சூனியத்தில் இருந்து பூஜ்ஜியம்

---

ஒரு இந்திய தொன்யியல் வல்லுநர் தேவ்தத் பட்நாயக், ஒருமுறை சொன்ன கதை எனக்கு நினைவிற்கு வருகிறது. பேரரசர் அலெக்சாண்டர் இந்தியாவிற்கு வந்தது தொடர்புடைய கதை அது.

போரில் பல நாடுகளை வென்ற பிறகு இந்தியா வந்தடைந்த அலெக்சாண்டர், நாகா யோகி ஒருவரை சந்திக்கிறார். நிர்வாணமாக பாறையில் அமர்ந்து வானத்தை நோக்கி பார்த்துக் கொண்டிருந்தார் அவர்.

அவரை பார்த்து அலெக்சாண்டர் கேட்டார், "என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"



"ஒன்றுமில்லாததை உணர்ந்துக் கொண்டிருக்கிறேன், நீ என்ன செய்துக் கொண்டிருக்கிறாய்" என்று அந்த ஞானி கேட்டார்.

"நான் உலகத்தை வென்று கொண்டிருக்கிறேன்" என பதிலளித்தார் அலெக்சாண்டர்.

இருவருமே சிரித்தனர்; எதிரில் இருப்பவர் பைத்தியம், நேரத்தை வீணடிப்பதாக இருவரின் மனதிலும் பரஸ்பரம் தோன்றியிருக்கலாம்.

குவாலியர் ஆலயச் சுவரில் பூஜ்ஜியம் என்ற குறியீடு உருவாக்கப்படுவதற்கு பல காலம் முன்னரே இந்த சம்பவம் நடந்தேறியது. ஆனால் அந்த துறவி சூனியத்தை பற்றி சிந்தித்துக் கொண்டிருந்ததற்கும் பூஜ்ஜியத்தின் கண்டுபிடிப்பிற்கும் ஒரு தொடர்பு இருந்திருக்கலாம்.

பிற நாகரீகங்களை விட, இந்திய கலாசாரத்தில் பூஜ்ஜியம் தொடர்பான விரிவான தத்துவங்கள் காணப்படுகின்றன. இந்திய கலாசாரத்தில், தியானம் மற்றும் யோகா போன்ற முறைகள் மூலம் மனதை சூனியமாக அதாவது ஒன்றுமில்லால் வெறுமையாக வைக்கும் முறைகள் தோன்றின.

இந்து மற்றும் பௌத்த சமயங்களில், பூஜ்ஜியம் மற்றும் அதனுடன் தொடர்புடைய கோட்பாடுகள் போதிக்கப்படுகின்றன.

பூஜ்ஜியம் என்ற எண்ணின் பூர்வீகம் அல்லது தோற்றத்தைப் பற்றி ஆராயும் பணியில் ஈடுபட்டுள்ளது நெதர்லாந்து நாட்டை சேர்ந்த ஜீரோ ஆரிக்இந்தியா (ZerOrigIndia) என்ற அமைப்பு.

அதன் செயலாளர் டாக்டர் பீட்டர் கோபட்ஸ் பூஜ்ஜியத்தின் தோற்றத்தைப் பற்றி ஒரு கட்டுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்: "கணிதத்தில் பயன்படுத்தப்படும் பூஜ்யம் என்பது வெறுமை தொடர்பான சமகால தத்துவமான சூனியத்தில் இருந்து உருவாகியிருக்கலாம். சூனியத்தின் தத்துவம் என்பது, ஒருவர் மனதில் இருந்து பதிவுகள் மற்றும் எண்ணங்களை நீக்கி வெறுமையாக்குவது என்ற புத்தமத கோட்பாடு என்பது குறிப்பிடத்தக்கது".

மேலும், பண்டைய காலத்தில் இருந்தே இந்தியாவில் கணிதத்தில் மிகப்பெரிய ஆர்வம் இருந்தது. பண்டைய கிரேக்கர்கள் எண்களை 10,000 என்பது வரை கணக்கிட்ட நிலையில் இந்திய கணிதவியலாளர்கள் டிரில்லியன் போன்ற மிகப்பெரிய எண்களை பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். இன்ஃபினிட்டி என்று அழைக்கப்படும் முடிவிலியின் பல்வேறு வகைகளையும் இந்திய கணிதவியலாளர்கள் பயன்படுத்தினார்கள் என்பது கணிதத்துறையில் இந்தியர்களின் முன்னோடியாக இருந்தார்கள் என்பதை உணர்த்துகிறது.

இந்திய அறிவியல் மற்றும் கணிதவியலாளர்களான ஆர்யபட்டா கி.பி 476 ஆம் ஆண்டிலும், பிரம்மகுப்தா கி.பி 598 ஆம் ஆண்டிலும் பிறந்தனர். இவர்கள் இருவரும் நவீன தசம இட மதிப்பீட்டு முறையை முதன்முறையாக விவரித்த முன்னோடிகள் என்றும் பூஜ்ஜியத்தின் பயன்பாட்டை நிர்வகிக்கும் தற்போதைய விதிகளை வழங்கியவர்களாகவும் அறியப்படுகின்றனர்.

வட்ட வடிவில் பூஜ்ஜியத்தை எழுத்துவடிவில் முதல்முறையாக பதிவு செய்திருப்பது குவாலியர் கோட்டையில் உள்ள ஆலய சுவரில் என்று கூறப்பட்டாலும், மூன்றாம் அல்லது நான்காம் நூற்றாண்டை சேர்ந்த பண்டைய பக்ஷாலி கையெழுத்து பிரதியில் (Bhakshali manuscript) பூஜ்ஜியத்தின் வடிவம் காணப்படுவதாக கூறப்படுகிறது. இருந்தபோதிலும், தட்சசீலத்தில் (தற்போதைய பாகிஸ்தானில் உள்ளது) கிடைத்த பழங்கால இந்திய பாக்ஷாலி கையெழுத்துப் பிரதியில் பூஜ்யம் என்ற எழுத்து காணப்படுகிறது. தற்போது இதுதான் பூஜ்ஜியத்தின் மிகப்பழைய எழுத்து வடிவமாக கருதப்படுகிறது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக கணிதவியல் பேராசிரியர் மார்கஸ் டு சௌடோய், பல்கலைக்கழக இணையதளத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்: "கணித வரலாற்றில் மிகப்பெரும் சாதனையாக கருதப்படும் பூஜ்ஜியம் என்ற எண், பக்ஷாலி கையெழுத்து பிரதியில் புள்ளியைப் போன்று காணப்படும் வடிவத்தில் இருந்து உருவானது. இந்தியாவின் பண்டைய கணிதவியலாளர்கள் வழங்கிய பூஜ்ஜியம் இன்றைய நவீன உலகின் அடித்தளமாகும் வகையில் மூன்றாம் நூற்றாண்டிலேயே விதைக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளாக இந்திய துணை கண்டத்தில் கணிதம் எவ்வாறு துல்லியமானதாக இருந்தது என்றும் கணித பயன்பாடு வளமையுடன் இருந்தது என்பதையும் இந்த கண்டுபிடிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன."

இந்தியாவைத் தவிர பிற நாடுகளில் ஏன் பூஜ்ஜியத்தின் கண்டுபிடிப்பு நடக்கவில்லை? இதற்காக கூறப்படும் சில காரணங்கள் சுவாரசியமானவை.

சில கலாசாரங்களில் சூனியம் என்பது எதிர்மறை எண்ணங்களை தோற்றுவிப்பதாக கருதப்பட்டது. உதாரணமாக, ஐரோப்பாவில் பூஜ்ஜியத்தை பயன்படுத்துவதற்கு கிறித்துவ மதம் ஆரம்ப காலங்களில் தடை விதித்தது. அதற்கு காரணம் என்ன தெரியுமா?

"கடவுளே அனைத்துமாக இருப்பதால்


சூனியம் அதாவது ஒன்றுமே இல்லை என்று சொல்லும் பூஜ்ஜியம் சாத்தானை குறிக்கும் குறியீடு”.

எனவே இதுபோன்ற கருத்துக்களால் சூனியத்தை பற்றிய கண்டுபிடிப்புகள் பிற நாடுகளில் பூஜ்ஜியமாக இருந்ததோ என்னவோ?

ஆனால் ஆன்மீக அறிவு மேம்பட்டிருந்த இந்தியாவில் தியானமும் பூஜ்ஜியமும் கண்டுபிடிக்கப்பட்டன.
பண்டைய இந்தியா, கணிதத்துறைக்கு வழங்கிய மற்றொரு முக்கியமான கண்டுபிடிப்பான பைனரி எண்கள் (இரும எண்கள்) நவீன உலகத்துடன் ஆழமான தொடர்பு கொண்டது. இந்த பைனரி எண்கள் நவீன கணிப்பீடுகள் மற்றும் கணினிகளின் அடிப்படையாகும்.

இந்திய சிலிகான் வேலி பெங்களூரு கெம்பேகௌடா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நகருக்குள் செல்லும் 37 கிலோமீட்டர் இடைவெளியில் உள்ள ஊரகப் பகுதியில் பரந்து விரிந்துள்ள ஐ.டி நிறுவனங்களின் வானாளவிய கட்டடங்கள் அடங்கிய வளாகங்களை பார்க்கலாம்.

இந்தியாவில் டிஜிட்டல் புரட்சியை பறைசாற்றும் விதமாக இண்டெல், கூகுள், ஆப்பிள், அராகல், மைக்ரோசா.ஃ.ப்ட், அடோப், சாம்சங், அமேசான் என பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் மற்றும் இன்.ஃ. போசிஸ் விப்ரோ போன்ற இந்திய நிறுவனங்களும் இந்திய சிலிகான் வேலியில் அமைந்துள்ளன.



ஆடம்பரமான, பல்வேறு நாடுகளை இணைக்கும் விமான சேவைகளை வழங்கும் அழகான விமான நிலையம் மாற்றத்திற்கான முதல் உதாரணமாக திகழ்கிறது. பூங்கா நகரம் என்று அறியப்பட்ட பெங்களூர், ஐ.டி நிறுவனங்கள் வந்த பிறகு பெங்களூருவாகவும், இந்தியாவின் சிலிகான் வேலி என்றும் அறியப்படுகிறது.
எலக்ட்ரானிக் சிட்டி என்ற ஒற்றை தொழிற்துறை வளாகமாக 1970களில் தொடங்கப்பட்ட தொழில்நுட்பத் துறை வளர்ச்சியானது, கர்நாடக மாநிலத்தின் முதுகெலும்பாக பரிணமித்துவிட்டது. தற்போது ஒட்டுமொத்த இந்தியாவின் ஐ.டி தொழிலின் 40% பெங்களூருவை சார்ந்திருக்கிறது.

ஒரு கணக்கீட்டின்படி, இருபது லட்சம் ஐ.டி தொழில் நிபுணர்கள், 60 மில்லியன் ஐ.டி தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய பிற வேலைகள் மற்றும் 80 பில்லியன் டாலர் மதிப்புள்ள ஐ.டி தொழில் ஏற்றுமதி என 2020ஆம் ஆண்டிற்குள் உலகின் மிகப்பெரிய ஐ.டி. மையமாக பெங்களூரு மாறிவிடும்.

இது அனைத்தும் சாத்தியமானது பைனரி எண்களால் தான்!



நவீன டிஜிட்டல் கணினிகள் இரண்டு சாத்தியங்களின் அடிப்படையில் இயங்குகின்றன. “ஆன்“ மற்றும் “ஆ.ஃ.ப்“ ('On' & 'off') 'On' என்பதை “1“ என்றும், 'off' என்பதை “0“ அதாவது பூஜ்ஜியம் என்றும் கொண்டு இவை இயங்குகின்றன.
”கி.மு இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்திய இசை வித்வான் பிங்கலா பைனரி எண்களை பயன்படுத்தியிருக்கிறார்” என்று அமெரிக்காவின் ஓக்லஹோமா பல்கலைக்கழகத்தில் அறிவியல் மற்றும் வானியல் பேராசிரியர் சித்தார்த் கக் கூறுகிறார்.
இவை அனைத்துமே சூனியத்தில் இருந்து பூஜ்ஜியத்தை கண்டறிந்த இந்தியாவில் தோன்றியது.






# மக்களை மறந்துவிட வேண்டாம்!




மாகாணசபைத் தேர்தல்கள் பற்றிய பேச்சு அடிபடத் தொடங்கி விட்டது. எதிர்வரும் ஜனவரி மாதமோ அல்லது அதன் பிறகோ – எப்போது என்று தெரியவில்லை. ஆனால் தேர்தல் நிச்சயம்.

எனவே____

யாருடன் கூட்டு, யாருடன் ஆட்சியைப் பகிர்ந்து கொள்வது, யார் முதல்வர், போன்ற சர்ச்சைகளும் பரவலாக நிகழ்த்தப்படுகின்றன.

மக்கள் கருத்துக் கணிப்புக்களும், பத்திரிகைகளின் ஊகங்களும் மக்களின் ஆவலைக் கிளப்பி விட்டிருக்கின்றன.

நியாயந்தான்.

மாகாணசபை ஆட்சி எப்படி அமைக்கப்பட வேண்டும் என்று கட்சிகளும், கட்சித் தலைவர்களும் திட்டம் இடுகின்றார்களோ அப்படி அமைத்து விட்டுப் போகட்டும்.

ஆனால்___

மக்களை மறந்து விடாமல் இவை செயற்படட்டும். மக்களின் நன்மை கருதி திட்டங்கள் தீட்டட்டும். யாழ்/ வட மாகாணசபைக்கு யார் முதல்வர் என்று கரிசனை காட்டுகின்ற தமிழ்ச் சமூகம் மட்/ கிழக்கு மாகாண சபைக்குரிய முதல்வரில் கவனம் செலுத்தாதது ஏன்? என்று புரியவில்லை.

கிழக்கு மாகாணசபைக்கு இம்முறை வேட்பாளர்கள் தெரிவில் சகல கட்சிகளும் பாராளுமன்ற தேர்தல் என்றாலும் அல்லது மாகாணசபைத் தேர்தல் என்றாலும் சரி குறிப்பிட்ட சிலரையே தெரிவு செய்து போட்டிக்கு நிறுத்தி மக்களை தெரிவு செய்யச் சொல்லும் வழமையான பழக்கத்தை இம்முறை மாற்றிட வேண்டும். புதிய முகங்களை கட்சிக்குள் உள்ளிழுத்து சபைக்கு அனுப்பி வைக்க புத்திசாலித்தனமான முடிவுகளை எடுக்க வேண்டும். குறிப்பாக நம்மோடு வாழ்கின்ற நம் இளைஞர்களுக்கு வழி காட்டுகின்ற ஜனரஞ்சமான எத்தனையோ அறிஞர்கள் இருக்கின்றார்கள்.

இவர்களில் உங்களின் பார்வையை செலுத்தி அவர்களில் ஒருவரை முதல்வராக்க முயற்சி செய்யுங்கள்.

முன்பு தமிழரசுக் கட்சிக்காகவும் அதன் போராட்டங்களிலும் பங்குபற்றி விழுப்புண் பெற்ற அறிஞர்கள் இருக்கிறார். இவர்களையும் கவனத்தில் கொள்வது நல்லது என்று என் “தொலைநோக்கி“ யில் தெரிகிறது.

“சொல்லிறத சொல்லிப்புட்டேன் செய்யிறத செஞ்சிக்குங்க

நல்லதெண்டா கேட்டுக்குங்க கெட்டதென்டா விட்டிருங்க“

## கவிதை

### தங்கப் புரவி பறக்கிறது

இனித்தாங்கவே முடியாது
யார் நிற்கிறார்கள்
என்னைத் தாங்கிக் கொள்ள?

ஒரு திருவிழாவாக மாறிக்
கொண்டிருக்கும் குழந்தைகளை
அழைத்துச் செல்ல வேணும்
எங்காவது.

நீங்கள் இன்னும் வந்து சேரவில்லை
குழந்தைகள் உங்களுக்காகவா
எனக்காகவா
காத்திருக்கின்றன என்று தெரியவில்லை.

நாட்டின் தலைவரை அழைத்தேன்
அவருடைய மனைவியே தொலை
பேசுகிறாள்
தலைவரைப் பற்றி ஒரே புகார்
அவளிடம் எனனுடைய புகாரை எப்படிச்
சொல்ல முடியும்?

மஞ்சலோடையில்
பழைய கதைகளைப் படித்துச்
சிலிர்க்கிறார்கள்
பழைய கதைகளில் எவ்வளவு
பொய்களையும் கலக்கலாம்
உண்மையும் பொய்யும் கலந்ததுதானே
சரித்திரம்
புதிய கதைகளில் அந்தளவுக்கு சிறகு
விரிக்கும் கற்பனை.

எல்லாம் மாறி
இடம் வலம் என்றில்லாமல் அழிகிறது
திசைகளும்தான்.
சூரியனும் சந்திரனும் கூட.
எல்லாம் எதற்காக?

இதோ ஏறிச் செல்கிறேன் தங்கப்
புரவியில்
நீங்கள் நம்பவில்லையா

இதோ பறந்து கொண்டிருக்கிறேன்
வந்து பாருங்கள்
வானத்தில் எவ்வளவு அழகானகாட்சி
என்று

கண்ணீருக்குள்ளும் வசவுக்குள்ளும்
நாறிப் புழுத்த ரத்தத்துக்குள்ளும்
எத்தனை காலத்துக்குத்தான் வாழ்ந்து
கொண்டிருப்பது?
என்று சலித்துப் போனவர்கள் வெளியேறி
வந்து கொண்டிருக்கிறார்கள் என்னோடு

எது பறக்கும் கணம் என்று தெரிந்து
கொண்டால்
அந்தப் பாதையில் உங்களுக்கான
சிறகுகள் முளைத்த தோட்டமிருக்கும்

கைகளை விடுங்கள்
அவரவராகவே சென்று விடலாம்

யார் தாங்குவது
யாரை என்று தெரியவில்லை

தங்கப் புரவி பறந்து கொண்டிருக்கிறது.

--- கருணாகரன் ---

## மட்டு. மாநகரில் பதினொரு வருடங்கள் (1942-1953) - 01

நான் பிறந்த ஊர் மட்டக்களப்பு மாநகரில் உள்ள புளியந்தீவுப் பகுதியில் முன்னர் சிங்களவாடி என்றழைக்கப்பட்ட பகுதியில் காணப்படும் ஏரிக்கரை 01 வீதியில் அமைந்து இருக்கும் “திருப்பதி“ என்ற இல்லத்தில் ஆகும்.

வீட்டு இலக்கம் முன்னர் ஒன்பதாக இருந்து பின்னர் பத்தொன்பதாக மாறியுள்ளது. நான் பிறந்த ஆண்டும் திகதியும் : 1936 ஒக்ட்டோபர் மாதம் முதலாந்திகதி வியாழக் கிழமை மாலை 5.00 மணிக்குப் பிறந்தேனாம்.

எனது தந்தையார் திருகோணமலையையும், தாயார் மட்டக்களப்பையும் தமது தாயகமாகக் கொண்டிருந்தனர். அவர்கள் மூதாதையர் வட மாகாணத்தை சேர்ந்தவர்களாக இருந்திருப்பர்.

எங்கள் குடும்பத்தில், ஐந்து ஆண்கள் பிள்ளைகளாகப் பிறந்தும், மூத்தவனான என்னைத் தவிர அனைத்துத் தம்பி மாரும் இறைவனடி சேர்த்துள்ளனர். எனக்கு நினைவு வந்த காலத்தில் நான் பெற்றோருடன் வவுனியாவில் இருந்தேன்.

**கே.எஸ். சிவகுமரன்**

1942இல் மட்டக்களப்பிலுள்ள எமது சொந்த வீட்டில் குடியேறினோம். 1942-1953 காலப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களில் என் நினைவில் இருப்பதை மாத்திரம் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்த, அடுத்த வாரங்களில் இந்த எனது சரிதையை தொடர, நண்பர் சீவகனுக்கு நன்றி. வாழ்க அனைவரும்.

Please give me your e-mail address so that I can send future copies to you directly. You phone number too.


Please send Arangam to my home
Address: 21 Murugan Place, Colomo 06.
Thanks dear.
My phone number 011 2587617

## கடுகுக் கதை

### கிளியாரின் ஆலோசனை

**கலாபூசணம் இரா.தவராஜா**

தர்மதாச தன் தோட்டத்தில் சணல் வளர்ப்பதற்கான விதைகளை விதைத்துக் கொண்டிருந்தார். அலியார் வளர்க்கும் பலவர்ணப் பறவைகள் தோட்டத்து வேலியில் அமர்ந்து தர்மதாச விதைப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன.



பக்கத்து வயல்கார வல்லிபுரத்தாரின் கிளி அவ்வழியே வந்தது. தர்மதாச சணலுக்குரிய விதைகள் விதைப்பதையும் அலியாரின் பறவைகள் வேடிக்கை பார்ப்பதையும் கண்டு தன் கிள்ளை மொழியில் உரத்துச் சொன்னது.

“அந்த மனிதரிடம் நீங்கள் கவனமாக இருக்கவேண்டும்“

அலியார் நானாவின் பறவைகள் ஏளனமாகக் கேட்டன.

“அவனைப் பார்த்து நாங்கள் ஏன்? பயப்பட வேண்டும்“

கிளியார் மேலும் சொன்னது.

“அவன் விதைக்கின்ற ஒவ்வொரு விதையையும் நீங்கள் பொறுக்கி எடுத்துவிட வேண்டும். இல்லாவிடில் எதிர்காலத்தில் நீங்கள்




வருத்தப்படவேண்டியிருக்கும்“

பறவைகள் கிளி சொன்ன ஆலோசனையை கேட்கவில்லை. கிளியாரை கிண்டல் அடித்து கேலி செய்தன.



மழை பெய்து தர்மதாசவின் தோட்டத்தில் சணல் பயிர் மிகச் செழிப்பாக வளர்ந்தது. சணலை வைத்து வலைகள் பின்னப்பட்டன.

கிளியாரின் ஆலோசனையை அலட்சியப்படுத்திய அலியாரின் பறவைகள் அந்த வலையில் அகப்பட்டுக் கொண்டன.



கிளியின் புத்திமதியை மதிக்காது போனது எவ்வளவு பெரிய முட்டாள் தனமென அவ் வேளை அப் பறவைகள்



வருந்திக்கொண்டன.

**“கிளியாரின் உரையோ**
**எதிர்கால நோக்கு**

**அலியாரின் பறவைகளோ**
**அசமந்தப் போக்கு**

**அதனால் வந்தது சங்கடம்**

**இதனால் மீழ்வது எங்ஙனம்“**



# பட்டறிவு

## சிங்கள சமூக அமைப்பில் கன்னிப் பரிசோதனைச் சடங்கு (பகுதி -1)

தென்னாசியாவில் கன்னித்தன்மையை பரிசோதிக்கும் ஒரே நாடாக இலங்கை திகழ்கிறது. இந்த விபரங்களை பல தடவைகள் டொக்டர் சிரியாணி பஸ்நாயக்க போன்றோர் பகிரங்கமாக வெளியிட்டு வந்திருக்கிறார்கள். அவர் பத்து வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இன்னமும் சிங்கள சமூகத்தில் தொடரும் கன்னிப் பரிசோதனை பற்றிய உண்மைகளை தனது ஆய்வுக் கட்டுரையொன்றின் (Basnayake,Sriani. "Virginity – The Facts: The Hymen & Virginity" Lankalibrary Forum. 2007) மூலம் வெளிக்கொணர்ந்தார். அதற்கு சில வருடங்களுக்கு முன்னரே "தி ஐலண்ட்" பத்திரிகையில் "கன்னிப் பரிசோதனை – ஒரு இளம் பெண்ணின் கொடுங்கனவு" (Virginity test — The young woman|s nightmare) என்கிற கட்டுரையொன்றின் மூலம் இதே விடயத்தைப் பற்றி அவர் எழுதிய போது, சிங்கள சூழலில் பெரும் விவாதமே ஏற்பட்டது. அப்போது அது பற்றிய பல விவாதங்கள் பத்திரிகைகளிலும் வெளியானது. அக்கட்டுரை பின்னர் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டு "பெண் உடல் ஐதீகங்களிலிருந்து உண்மைக்கு வெளியே" எனும் நூலில் சேர்க்கப்பட்டிருந்தது.

சிரியாணி பஸ்நாயக்க பெண்களின் பால்நிலை, சுகாதாரம், ஆரோக்கியம், பாலியல் விடயம் என்பவை தொடர்பில் பல ஆய்வுகளை செய்து நிபுணத்துவம் பெற்றவர். ஒரு பெண்ணியவாதியாகவும் அறியப்படுபவர். இலங்கை குடும்பத் திட்ட சங்கத்தின் (The Family Planning Association of Sri Lanka (FPA Sri Lanka) பிரதித் தலைவராகவும் இயங்கி வருகிறார். கன்னித்தன்மையை பரிசோதிப்பது சிங்கள சமூகத்தில் இன்னமும் நிலவுகிறது என்று அவரது கட்டுரையில் குறிப்பிட்டு இப்படி விளக்குகிறார்.

வியப்பூட்டும் தகவல்

"தென்னாசியாவிலேயே இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு, பூட்டான் எங்குமே இல்லாத கன்னித்தன்மையைப் பரிசோதிக்கும்



முறை இலங்கையில் மாத்திரம் தான் நிலவுகிறது. ஆய்வொன்றின்படி ஒரு



பெண் முதலாவது தடவையாக பாலுறவு புரியும் போதுதான் பெண்ணுறுப்பு வழியாக இரத்தம் வெளியேறுவதாக இலங்கையில் 85 சதவீதமானவர்கள் நம்புவதாக தெரிவிக்கின்றது. ஆனால் 20-25 சதவீதமான பெண்களுக்கு முதலாவது தடவையாக பாலுறவுபுரியும் போது இரத்தம் வெளியேறுவதில்லை என்பது விஞ்ஞான ரீதியாக உறுதிசெய்யப்பட்ட ஒன்று."

டொக்டர் சிரியாணி பஸ்நாயக்க குறிப்பிடுகையில் தம்மிடம் வரும் பெண்களில் கணிசமானவர்கள், தான் கன்னித்தன்மையை இழக்கவில்லை என்று உறுதிச்சான்றிதழ் தரும்படி வேண்டி வருகின்றனர், பெரும்பாலும் கொழும்பின் இருதயமாக இருக்கிற பகுதியிலிருந்து கூட இந்த உறுதிச்சான்றிதழ் கோரி அதிகளவினர் வருவதாகவும் குறிப்பிடுகிறார், மேலும் அவர் இப்படிக் குறிப்பிடுகிறார்.

"சமீபத்தில் தாயொருவர் தனது 3 வயதேயுடைய சிறிய குழந்தையை கன்னித்தன்மைக்கான சான்றிதழ் தரும்படி அழைத்து வந்தார். அக்குழந்தைக்கு பாலுறுப்பில் ஏற்பட்ட காயமொன்றின் காரணமாக எதிர்காலத்தில் கன்னித்தன்மையை சந்தேகிக்கும் ஒன்றாக மாறிவிடக்கூடாது என்பதற்காக அது காயப்பட்டதனால் ஏற்பட்டது என்று சான்றிதழ் தரும்படி கோரி அந்தத் தாய் வந்திருந்தார். மிகவும் படித்த விடயமறிந்தவர்கள் கூட இப்படி செய்வது ஆச்சரியத்தைத் தருகிறது. சமீபத்தில் ஒரு பேராசிரியர் ஒருவர் கூட தனது மகளுக்கு கன்னித்தன்மையை உறுதி செய்யும் சான்றிதழ் வேண்டி வந்திருந்தார்." என்கிறார் அவர்.

பெண்களின் மறு உற்பத்தி சுகாதாரம் பற்றிய தமது ஆய்வின்போது 32மூ வீதமானோர் கற்பு என்பது பற்றிய சரியான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. நகர்ப்புற இளைஞர்களில் 44.2மூ



வீதத்தினரும் கிராமப்புற இளைஞர்களில் 47.4% வீதமானோரும் "கன்னி கழியாதவர்களுக்கு" முதல் பாலுறவின் போது இரத்தம் வெளியேறும் என்று நம்பிக்கொண்டிருகின்றனர். என்கிறார் சிரியாணி.

முதல் பாலுறவின் போது கன்னித்திரை கிழிந்து இரத்தம் கசிந்தாகவேண்டும் என்கிற ஐதீகம் குறிப்பாக பல ஆண்களிடம் நிலவவே செய்கிறது. பெண்ணுக்கான கற்பின் அடையாளமாக கன்னித்திரை கிழிதலை கருதிவருவது குறித்து சிறியாணி குறிப்பிடுகையில் மருத்துவ விளக்கங்களின் படி கன்னித்திரை கிழியாமலும் கூட ஒரு பெண் கர்பந்தரிக்க முடியும் என்கிறார்.

சிரியாணி பஸ்நாயக்கவின் கருத்து ஐலண்ட் பத்திரிகையில் வெளிவந்ததைத் தொடர்ந்து சில ஆங்கிலம் படித்த சிங்கள ஆண்கள் பதிலளிக்கத் தொடங்கினார்கள். இவர்களின் வாதத்தின் சாராம்சத்தைப் பார்த்தால், இவர்கள் இப்போதும் நிலவும் கன்னித்தன்மை பரிசோதனை முறை பற்றிய தகவல்களை மறுக்கவில்லை. ஆனால் இது சிங்கள சமூகத்தில் ஆரம்பத்திலிருந்து இருக்கவில்லை என்றும் இது ஐரோப்பியரிடம்

என்.சரவணன்

குறிப்பாக யூத பாரம்பரியத்தில் இருந்ததென்றும், காலனித்துவ காலத்தில் கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கோடு இதுவும் கூடவே இலங்கை சிங்கள மக்களிடம் ஊன்றிவிட்டதென்றும் வாதம் வைக்கின்றனர்.

யூத மரபில் இருந்ததற்கு ஆதாரமாக பி.ஏ.ஆரியதிலக்க என்பவர் பைபிள் வாசகங்களையும் ஆதாரம் காட்டுகிறார். 17ஆம் நூற்றாண்டில் ரொபர்ட் நொக்ஸ் எழுதிய குறிப்புகளை ஆதாரம் காட்டி சேர்ந்து வாழ்தல் (Living together), ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களுடன் ஒரே நேரத்தில் வாழ்தல் போன்ற விடயங்கள் சிங்களவர்களிடம் இருந்திருக்கிறது. அப்படிப் பார்க்கும் போது ஐரோப்பிய நாடுகளில் இப்போது தான் இத்தகைய நடைமுறைகள் வழக்கிலிருக்கின்றன, நாங்கள் எப்போதோ முன்னோடிகளாக இருந்திருக்கிறோம் என்பன போன்ற வாதங்களையும் அவர் காட்டத் தவறவில்லை.

சாராம்சத்தில் இவ்வாதங்கள் சிங்கள இனத்தின் பெருமிதத்தை வலியுறுத்துவதாகவும், அது கறைபடியாத அப்பழுக்கில்லாத "புனிதமான" மரபைக் கொண்டதென்கிற வாதத்தை அடிப்படையாக மட்டுமே இருந்தது.

இது எந்த இனக்குழுமத்திடமிருந்து தொற்றிக்கொண்டதாக இருந்த போதும், இன்றும் சமூக வழக்கிலிருக்கும் ஒரு பாரதூரமான கொடுமை என்பது பற்றியும், இன்று கற்பொழுக்கம் பற்றிய புனைவுகள், ஐதீகங்கள் என்பவற்றை விளங்கிக்கொள்வது, அதனை நீக்குவது என்பனவற்றை இலக்காகக் கொண்ட ஆரோக்கியமாக உரையாடலை மேற்கொள்வது என்பது இன்னமும் வரட்சி நிலையில் தான் இருக்கிறது.

கற்பொழுக்க சோதனை

சொத்துடமை சித்தாந்தம் சொத்தை ஒன்றுகுவித்து மையப்படுத்துவதற்காகவும், ஏலவே இருக்கும் சொத்து துண்டாடப்படாமல் இருப்பதற்காகவும், ஏற்படுத்தப்பட்ட குடும்ப அலகும், அதனை சுற்றி கட்டப்பட்ட புனிதத்துவமும், கூட்டுக்குழுமங்களாக ஆக்குவதற்காக உருவாக்கப்பட்ட சித்தாந்தங்களும் இவ்வகைப்பட்ட விடயங்களில் செல்வாக்கு செலுத்துகின்றன. ஆணாதிக்க சமூக அமைப்பைப் பொருத்தவரை பெண்ணை உடமையாக வைத்திருப்பதற்கும் குடும்ப அலகை கவனமாகப் பேணவுமாக இந்த கற்பொழுக்கங்கள் என்பனவற்றை கவனமாக கைகொண்டன. ஆனால் இன்றைய நடைமுறையில் இந்த தோற்றங்கள் மேற்தோற்றத்தில் தெரியாவிட்டாலும், குழந்தை, குடும்பம், ஒழுக்க மரபுகள், கற்பு, தூய்மை, புனிதம், கௌரவம், அந்தஸ்து என கற்பிக்கப்பட்டிருப்பதை நாம் வெளிப்படையாகக் காண்போம்.

இந்த வகையில் தான் கற்பொழுக்கம் பற்றிய மதவழி புனைவுகள், இலக்கியங்கள், அரச யந்திரம் கொண்டிருக்கிற சட்டங்கள், பிரச்சார சாதனங்கள், கல்வி என்பவற்றுகூடாக மிகக் கவனமாக நம்பச்செய்யப்பட்டிருக்கின்றன. ஆதிக்க அதிகார அமைப்புகளின் இருப்பு இவ்வாறான புனைவுகளை நம்பவைத்தலில் தான் தங்கியிருப்பதை நாம் அறிவோம்.

கற்பொழுக்கம் பற்றி தமிழ் மரபில் இருக்கின்ற இலக்கியங்கள், இதிகாச, புராணங்கள், மரபொழுக்கங்கள் என்பனவற்றைப் பற்றி புதிதாகக் கூறத்தேவையில்லை. இந்த கற்பொழுக்கம் பற்றிய எதிர்பார்ப்பு என்பது சர்வவியாபகமான ஒட்டுமொத்த ஆணாதிக்க கட்டமைப்பும் வேண்டிநிற்கும் ஒன்று. எனவே தான் ஆண்கள் கையிலிருந்த கடந்த அதிகார அமைப்புகள் எல்லாமே இலகுவாக கற்பொழுக்கத்தை வலியுறுத்தும் சித்தாந்தங்களை உற்பத்தி செய்து வடிவமைத்து பரப்ப முடிந்தது.

அந்த வகையில் கன்னித்தன்மை பரிசோதனை முறையென்பது பல நாடுகளில் பண்பாட்டு அம்சங்களோடு இணைக்கப்பட்டும், பல நாடுகளில் வெளித்தெரியாத மரபுகளாகவும் வழக்கிலிருந்து வருகின்றன. சமீபத்தில் துருக்கி செய்திப் பத்திரிகையொன்றில் வெளியான செய்தி இதனை உறுதி செய்தது.

இலங்கையை ஒத்த வகையிலான முதலிரவின் பின் வெள்ளைத்துணி "இரத்த" பரிசோதனை சீனாவிலும் சில குழுமங்களில் மத்தியில் இருந்திருப்பதை சில நூல்கள் விபரிக்கின்றன. அந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் விதத்தைப் பற்றி சீன தொலைக்காட்சி நாடகங்களும் பதிவு செய்துள்ளன. லின் ஜியாங் (Lin Jiang) என்கிற சீன எழுத்தாளர் இது பற்றி எழுதிய குறிப்பொன்றில் இரண்டு வினோதமான நம்பிக்கைகள் அவர்களிடத்தில் காணப்படுவதாக குறிப்பிடுகிறார்.

பெண்கள் தமது "கற்பை" திருமண நாளில் தான் இழக்க வேண்டும் என்கிற பாரம்பரிய எதிர்ப்பார்ப்பு
பெண்கள் எப்போது "கற்பை" இழக்கிறார்களோ அப்போது இரத்தம் சிந்தப்படும்

சிங்கள சமூக அமைப்பில் நிலவிவரும் கன்னித்தன்மை பரிசோதனை முறையை இந்த பின்புலம்கொண்டே ஆராய வேண்டியுள்ளது.

அடுத்தவாரம் கன்னித்தன்மை பரிசோதிக்கும் சிங்கள பாரம்பரிய சடங்கு பற்றி பார்ப்போம்.

# தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

# திருக்குறள் இன்பம் - 4

*(உலகப் பொதுமறையாக விளங்குகின்ற ஒப்பற்ற அறிவு நூலும், தனித்துவம்மிக்க காதல் இலக்கியமுமான திருக்குறள் இலக்கணமிட்டுள்ள காமத்துப்பாலின் இனிய காட்சிகளின் இன்பத்தைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத்தொடர்.)*

அமிழ்தில் செய்த தோள்களா?

தலைவன் மிகவும் கடுமையான உழைப்பாளி. அண்மையில்தான் அவனுக்குத் திருமணம் நடந்தது. அவனது மனைவி மிகவும் அழகானவள். காதல் வயப்பட்டுக் கரம்பிடித்த அவர்கள் இருவரும் ஓருயிரும் ஈருடலுமாக இல்லறத்தில் மகிழ்ந்திருந்தார்கள். அவன் செய்யும் தொழில் மிகவும் சிரமமானது. அதிகாலையில் எழுந்து வேலைக்குச் செல்லவேண்டும். பகல் நீங்கி, இரவின் வரவு தெரியும் நேரத்தில்தான் வேலை முடிந்து, அவன் வீட்டுக்கு வருவான். தினமும் இதுவே அவனுக்கு வாடிக்கை. இதில் வேடிக்கை, விளையாட்டுக்கள் எதற்கும் அவனுக்கு நேரம் கிடைப்பதில்லை. காலையில் வேலைக்கு அவனை வழியனுப்பிவிட்டு, மாலை வரை அவனது வரவுக்காக ஆவலுடன் காத்திருப்பது அவளுக்கு வழக்கமாகிப் போய்விட்டது. வேலை முடிந்து வீடு திரும்பும்போது அவன் மிகவும் களைத்திருப்பான். தசைநார்கள் விண்ணென்று வலிக்கும். உடல் எங்கும் புண்ணாக நோகும். உயிரே வாடி வதங்கிவிட்டதைப்போல அவன் உணர்வான். ஆவலோடு வாசலில் காத்துக்கொண்டு நிற்கும் அன்பு மனைவியைக் கண்டதும் அதுவரை உடல்மட்டும் வியர்த்திருந்த அவனுக்கு, உள்ளமும் வியர்க்கும். அவ்வாறே, அன்றும் அவளை அணைத்துக்கொண்டே உள்ளே செல்லும்போது அவனது உடலில் புத்துணர்ச்சி உண்டாகின்றது. உறங்குவதற்கு முன்னர் அவளைத் தழுவிக்கொண்டதும், வாடிக் கிடந்த உயிர் திளைத்து எழுகின்றது. களைப்பு மறைகின்றது. உள்ளத்தில் புதியதோர் எண்ணம் எழுகின்றது. "இறப்பு என்பதை இல்லாமல் செய்யும் வல்லமை கொண்டது அமிழ்தம் என்னும் சுவையான உணவு

அல்லவா? இவளது அணைப்பு, எனது உயிரின் களைப்பை நீக்கிமீண்டும்

திளைத்து எழவைக்கிறதே! அப்படியானால், நான் தழுவிய இவளின் தோள்களும் அமிழ்தத்தினால்தான் ஆக்கப்பட்டிருக்க வேண்டும்." என்று நினைக்கிறான்.

"உறுதோறு உயிர் தளிப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள் (1106)"

களைத்து வாடிக்கிடக்கும் என் உயிர் அவளைத் தழுவியதும் திளைத்து எழுகின்றமையால், அவளது இரு தோள்களும் அமிர்தத்தினால் ஆக்கப்பட்டவையாக இருக்கவேண்டும், என்பது இந்தக் குறளின் நேரடிக்கருத்து.

----- ----- -----

காற்றும் நுழையாது, காதலுக்கு விலை ஏது?

கணவன் வெளியூர் செல்கின்றான். கனநாட்கள் மனைவியைப் பிரிந்திருக்க நேரிடுகின்றது. தொலைத் தொடர்பு வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில் என்றாலும் சரி, கண்டம் விட்டுக் கண்டம் சென்றாலும்



முகம்பார்த்தே பேசக்கூடிய வசதிகள் உள்ள இந்தக்காலத்தில் என்றாலும் சரி பிரிவு பிரிவுதான்! அருகருகே இருவரும் இல்லாத நிலையில் உள்ளமும், உடலும் உருகி வாடுவதைத் தவிர்க்க முடியாது. அவ்வாறு பிரிந்திருந்து மீண்டும் இருவரும் சந்திக்கும்போது சூழலையும் மறந்து இருவரும் இறுக அணைத்துக்கொள்வதும், அதுவரை தேக்கி வைத்திருந்த ஆசையெல்லாம் ஆனந்தக்கண்ணீராய் வெளிப்படுவதும் எல்லாக் காதலர்களின் வாழ்விலும் இயல்பானது.

அந்த நேரத்தில், இடம் பொருள், ஏவல் எதையும் மனம் பார்ப்பதில்லை. இதனைத்தான் கண்ணதாசன் ஒரு பாடலில்,

"முதல்நாள் காணும் புதுமணப் பெண்போல்
முகத்தை மறைத்தல் வேண்டுமா?
முறையுடன் மணந்த கணவன் முன்னாலே
பரம்பரை நாணம்தோன்றுமா?" என்று கூறியுள்ளார். அச்சம், மடம், நாணம் எல்லாவற்றுக்கும் விடை கொடுத்துத், தன் இச்சைக்குரிய கணவனை இறுகத் தழுவிக்கொள்ளும் அந்த நிலை காதலர்களுக்கு மிகவும் இனிமையானது என்று உள்ளத்து உணர்வுகளை வள்ளுவப் பெருந்தகை இந்தக் குறளில் படம்போல வரைந்து தந்திருக்கின்றார். காதலர்கள் பிரிந்திருந்து மீண்டும் சேர்கின்ற சந்தர்ப்பங்களில் மட்டுமல்ல, பொதுவாகவே அன்பினால் இணைந்த காதலர்கள் தனிமையில் ஒருவரை ஒருவர் தழுவிக்கொள்ளும்போதும் இறுக அணைத்துக்கொள்வதுதான் இனிமை தரும். அந்த அணைப்பு எப்படிப்பட்டது? இருவருக்கும் இடையில் காற்றுக்கூடப் புகுந்துகொள்ள முடியாதவாறு இருக்குமாம்.

"வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப்படா அமுயக்கு (1108)"


இருவருக்கும் இடையே காற்றுக்கூட நுழைய முடியாத அளவுக்கு இடைவெளியில்லாமல் இருவரும் விரும்பி அணைத்துக் கொள்வதே காதலர்களுக்கு இனிமை தரும், என்பது இந்தக் குறளின் நேரடிக் கருத்து.

------- ------- -------

இன்பமும், பேரின்பமும்!

ஊடல் என்பது பொய்க் கோபத்தினால் காதலர்களில் ஒருவர் மற்றவருடன் போலியாகச் சண்டை பிடித்தல். பொய்க்கோபம் கொண்டு ஒருவருடன் மற்றவர் பேசாமல் இருப்பதும் ஊடலே. அவ்வாறு ஊடல் கொண்டவர், தான் என்ன காரணத்திற்காக எதற்காக ஊடல் கொண்டாரோ அந்தக் காரணம் தவறு என்று தானாகவோ அல்லது மற்றவர் அன்போடு தெளிவுபடுத்தியதனாலோ அதனை ஏற்றுக்கொள்ளுதலையே திருவள்ளுவர் உணர்தல் என்று சொல்லியிருக்கிறார். ஊடலுக்குப் பின்னர் உணர்தல் நடந்துவிட்டால், அன்பு மனங்கள் இரண்டும் ஆனந்தக்கூத்தாடும் அல்லவா? அதன் விளைவு இயல்பாக நடக்கும். இருவரும் சேர்ந்து கொள்வார்கள். இவைதான், காதலில் மிகவும் சிறந்து வாழ்கின்ற காதலர்கள் பெறுகின்ற உண்மையான பயன்களாகும். காதல் வாழ்வில் உச்சம் அதுதான்.

பண்டைக்காலத்தில் பரத்தையரிடம் சென்றுவரும் கணவனிடம் ஊடல்கொள்வதும், அவன் ஏதோவெல்லாம் சொல்லி, எப்படியெல்லாமோ முயன்று, இறுதியில் மனைவியின் தோழிகள் மூலம் தூதுவிட்டு, மனைவியை உணரச் செய்வதும், அதன்பின்னர் ஊடல் முடிந்து, கூடல் நடந்து இருவரும் ஒன்றாகச் சேர்வதும் மிகவும் சாதாரணமான நிகழ்வுகளாக இருந்திருக்கின்றன. இந்தக் காலத்தில் அவ்வாறு கணவன் ஒருவன் நடப்பானென்றால், அது மண முறிவில் போய் முடியும். இது இரு பாலாருக்கும் பொருந்தும். ஆயினும், ஒழுக்கம் தவறிய வாழ்க்கைத் துணையுடன் தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களுக்காகச் சமரசம் செய்துகொண்டு அல்லது கண்டும் காணாமல் இருந்துகொண்டு இல்வாழ்க்கையினைத் தொடர்கின்ற வாழ்க்கைத் துணைவர்களும் ஆயிரத்தில் ஒருவராக, அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கத்தான் செய்கின்றார்கள். அவர்கள் வள்ளுவர் காட்டும் இன்பவாழ்வைக் கண்டிருக்க மாட்டார்கள். ஆனால் அதேவேளை, சின்னச் சின்ன விடயங்களுக்காக சில்லறைச் சண்டை போடுவதும், சிறிது நேரத்தில், சண்டையை மறந்து இருவரும் சிரித்துக்கொள்வதும், இறுதியில் இருவரும் விரும்பிச் சேர்ந்து மகிழ்ச்சிக்கடலில் நீந்துவதும் வீட்டுக்கு வீடு நடக்கின்ற இல்லற விளையாட்டுக்கள்தானே! இதனைத்தான் வள்ளுவப் பெருந்தகை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே வாழ்க்கை நெறியை வகுக்கும் இலக்கியமாகப் படைத்திருக்கிறார்.



"ஊடல் உணர்தல் புணர்தல் இவை காமம்
கூடியார் பெற்ற பயன் (1109)"

ஒருவரோடொருவர் பொய்ச் சண்டை போடுதல், பின்னர் உண்மையைப் புரிந்துகொள்ளுதல், அதன்பின்னர் இருவரும் சேர்தல் என்பனவே இன்பவாழ்வில் இணைந்துள்ளவர்கள் பெறுகின்ற பயனாகும்.

இதனை இன்னும் ஒரு வகையாக திருக்குறளின் இறுதிக்குறள் இப்படிக்கூறுகிறது.

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம்
கூடி முயங்கப் பெறின் (1330)"

ஆம், காதல் வாழ்வில் ஊடுதல்தான், பொய்ச் சண்டையிடல்தான், இன்பமானது. ஆனால் ஊடல் தணிந்தபின்னர் கூடுவது அதனைவிட இன்பம்தருவது. அது பேரின்பமாகும்.

----- ----- -----

அடடா, இதுவரை தெரியவில்லையே!

உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. உலக மக்களின் வாழ்க்கைமுறைகளும் மாறிக்கொண்டிருக்கின்றன. அறிவியல் மேலும் மேலும் விரிந்து, பூவுலகிலிருந்து உயர்ந்து புதிய உலகங்களை நோக்கிப் பரந்துகொண்டிருக்கிறது. நேற்று நல்லதாக இருந்ததைவிட இன்று வேறொன்று மிகவும் நல்லதாக இருக்கின்றது. நேற்று நாம் அனுபவித்த விடயங்கள் தந்த மகிழ்ச்சியைவிட, இன்று மிகப்பெரிய மகிழ்ச்சியை அதே விடயங்கள் தருகின்றன.

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

அட, நேற்று நமக்கு இது தெரியாமல் போயிற்றே, தெரிந்திருந்தால் இன்னும் மகிழ்ச்சியடைந்திருக்கலாமே என்ற எண்ணங்கள் பற்பல சந்தர்ப்பங்களில், பற்பல நிகழ்வுகளில் ஏற்படுகின்றன. புதியதை அறிந்துகொள்ளும்போதுதான், தனது அறியாமை ஒவ்வொருவருக்கும் தெரிய வருகின்றது. இது காதலுக்கும் பொருந்தும்.

கருத்தொருமித்த காதலர்கள், ஒவ்வொரு முறையும் சேர்ந்து இன்பத்தில் மகிழ்கின்றபோது அது புதிது புதிதாக, அதுவரை அனுபவித்தறியாத மகிழ்ச்சியைக் கொடுக்கும். அப்போது முன்னர் அடைந்ததெல்லாம் இன்பமேயல்ல என்று மனம் கூறும். இதுதான் உண்மைக் காதலின் வெளிப்பாடு என்பது பொய்யாமொழிப் புலவரின் வாக்கு. ஒரு ஆண் பெண்ணிடம் பெறுகின்ற இன்பம் என்பதாக வள்ளுவர் இந்தக் குறளில் சொல்லியிருந்தாலும், இருபாலாருக்குமே இது பொருந்துவதாகத்தான் இருக்கும்.

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்

தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.

# பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு!





கல்முனையில் நடுத்தெருவில் அநாதரவாக 90வயது தாயை தவிக்கவிட்டுச்சென்ற மூன்று பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி ஊடகங்கள் கடந்த வாரத்தில் செய்திகளை வெளியிட்டிருந்தன. ஆனால் இந்தச் சம்பவத்தின் பின்னால் நடந்த நெகிழ்ச்சியான நிகழ்வை இங்கு பதிவிட விரும்புகின்றேன்.

அன்று(9.8.2018) வழமைபோல கல்முனை நீதவான் நீதிமன்றம் கூடுகின்றது. நீதிவான் ஐ.என்.றிஸ்வான் வந்தமர்கிறார்; வழக்கறிஞர்களும் வருகிறார்கள்; மக்களும் வருகிறார்கள். நீதிமன்ற செயற்பாடு ஆரம்பமாகிறது.

அன்றுதான் அந்த 90வயது தாயின் வழக்கும் எடுபடுகின்றது. அதற்காக அவரை



கல்முனை இளைஞர்சேனா அமைப்பினர் ஆஸ்பத்திரியிலிருந்து காரில் கொண்டுவந்து சேர்த்தனர். அவரது பிள்ளைகள் மூவரும் மல்வத்தையிலிருந்து நீதிவானின் அழைப்பாணையின்பேரில் வந்திருந்தனர்.

வழக்கு அழைக்கப்படுகின்றது. வழக்காளி சார்பில் சட்டத்தரணிகளளான ஆர்த்திகா றியாஸ் ஆகியோர் வாதாடுகின்றனர். சமர்ப்பணத்தை ஏற்றுக்கொண்ட நீதிவான் பிள்ளைகள் மூவரையும் தலா 50ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்லவும் தாயின் பராமரிப்பிற்காக மாதமொன்றிற்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் செலுத்தவேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

வழக்கு மீண்டும் செப். 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக நீதிவான்கூற குறித்த தாய் வெளியே வந்தார்.

அவ்வளவு நேரமும் அன்னம் தண்ணீர் இல்லாமல் 90வயது தாய் இருந்தாரே என கவலைப்பட்டு கல்முனை இளைஞர்கள் அவருக்கு பிஸ்கட்டும் தண்ணியும் வழங்க அவர் கூறிய வார்த்தைகள் அனைவரையும் ஒரு கணம் மெய்சிலிர்க்க வைத்தன.

“முதலில் எனது பிள்ளைகளை வெளியில் எடுத்துவிடுங்கள். அவர்கள் கூட்டுக்குள் இருக்கும்போது எனக்கு பிஸ்கட்டும் வேண்டாம் தண்ணியும் வேண்டாம். முதலில் அவர்களை வெளியில் விடுங்கள். அவர்களது காசு வேண்டாம். நான் பிச்சை எடுத்தாவது பிழைப்பேன். அவர்களை கஸ்ட்டப்படுத்த வேண்டாம். அவர்கள் எனது பிள்ளைகள் நான் பெத்த புள்ளைகள். அவர்கள் நல்லாயிருக்கவேண்டும்,’ என்றார் இந்த 90வயது மூதாட்டி.

இளைஞர்கள் ஒரு கணம் அதிர்ந்தனர்.

---

பத்துமாசம் பெற்றுவளர்த்து ஆளாக்கிய பிள்ளைகள் தன்னை நொடிப்பொழுதில் நடுத்தெருவில் ஈவிரக்கமில்லாமல் இறக்கிவிட்டுச்சென்றதை மறந்த அந்தத்தாய் தனக்கேயுரித்தான தாய்ப்பாசத்தில் தன்பிள்ளைகளை கஸ்டப்படுத்தவேண்டாம் என்று கூறிய அந்ததாய்ப்பாசம் எங்கே? பெற்றதாயை நடுத்தெருவில் அம்போ என தவிக்கவிட்ட பிள்ளைகள் எங்கே? இதனைத்தான் பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு என்று சொல்வதா? என எண்ணத்தோன்றுகின்றது.

இச்சம்பவம் மன்றுக்கு வந்த காரணத்தினால் செய்தி வெளியே வந்தது. இவ்வாறு எத்தனையோ சம்பவங்கள் உலகில் நடைபெற்றுத்தான் வருகின்றது.

இவ்வாறான கல்மனம் படைத்த பிள்ளைகள் பலர் உள்ளனர். அவர்கள் தம் மனைவியின் கதையைக்கேட்டு மீறமுடியாமல் பெற்றதாயை வீட்டைவிட்டு துரத்திய சம்பவங்கள் நிறைய உள்ளன. இதை விட பெற்று வளர்த்து ஆளாக்கிய தாயை மறந்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மணந்த மனைவி பிள்ளைகளுடன் வாழ்வதையும் சமகாலத்தில் காணலாம்.

தாய் தகப்பன் உயிரோடு இருக்கும்போது பார்த்து பராமரிக்காத பிள்ளைகள் அவர்கள் இறந்தபின் பிதிர்க்கடன் செலுத்துவதிலோ அந்தியேட்டி நடாத்துவதிலோ ஆலயத்திற்குச்செல்வதிலோ அர்த்தமில்லை.

பெற்றதாயை பார்க்காத பிள்ளை பெற்றதாயை பராமரிக்காத பிள்ளை பத்துமாதம் சுமந்து பெற்ற தாய்க்கு தகப்பனுக்கு ஒருசதமும் ஈயாத பிள்ளை உலகில் இருந்துபயன் என்ன ?

இவர்கள் கல்விகற்று பயன் என்ன? இவர்கள் தாய்ப்பால் குடிக்கவில்லையா? இவர்களுக்கும் நாளை அவர்களது பிள்ளைகளால் இதுதான் நடக்கப்போகின்றது என்பதை இவர்கள் அறியும்நாள் வெகுதூ ரத்தில் இல்லை.

**வி.ரி.சகாதேவராஜா காரைதீவு குறூப் நிருபர்**

தாயின் பாதத்தில் சுவர்க்கம் இருக்கிறது என்பார்கள்.தாயிற்சிறந்த கோவில் இல்லை என்பார்கள். இந்த ஈனப்பிறவிகைளப்பொறுத்தவரை இவையெல்லாம் செவிடர் காதில் ஊதிய சங்காகத்தான் இருக்குமோ?



## கவிதை

### ஆறாவது நிலம்

உன்னை நான் உழைத்துச் சம்பாதித்துப்
பெறவில்லை
நான் நினையாத விதமாக ஒருநாள்
வானம் இருட்டி மழை பெய்ததைப்போல்
நான் கூப்பிடாமலே துளியாக
உதிர்ந்தாய் தொலைபேசிக்குள்ளால்
எனக்குள் நுழைந்தாய்

நான் நிலம்போல உன்னை உறுஞ்சி
ஈரமாகினேன் மழையே என் புழுதி
மணத்தை நீ ரசித்தாய்

அடிக்கடி உன்குரல் கேட்கத்
தொடங்கிற்று மரத்தில் குயில் வந்து
கூவுவதைப்போல மேசையில் இருக்கும்
தொலைபேசியூடாக மழையே உன் சுக
துக்கங்களைச் சொல்வாய்

காற்று உன்னைப் பெய்ய விடாமல்
அடித்துக் கலைப்பதையிட்டும்
கவலைப்படுவாய்

என் நல்ல சுகம் அறிந்து
வெள்ளமாகி ஓடி வழிவாய் என்
காதுகளால்

நான் மழையின் கூட்டாளி
என் கூட்டாளி மழை ஆச்சரியமானது

எனக்குக் குடை பிடித்து நான்
நனையாமல் தான் பெய்யும்

நான் கொஞ்சம் நனைந்தாலும் அது தன்
குரலால்
விரல் செய்து என் தலை துடைக்கும்

ஆறுதலாக இருக்கிறது எனக்கு ஒரு
மழை
உறவாக இருப்பது
இப்படி ஒவ்வொரு பயிருக்கும் ஒரு மழை
உறவாக இருந்தால்
கோடை எங்கே தாக்கப்போகிறது
அதன் வாள் உதிர்ந்துவிடும்
அதைப் பொறுக்கி கொல்லன் கத்தி
செய்வான்

எனக்கு இன்னும் நேரில் தெரியாது என்
மழையை
ஒருநாள் உன் வீட்டுக்கு வருவேன்
உன்னைப் பார்க்க
என்கிறது
முகத்திற்கு முகம் பார்த்துப் பேசத்தான்
மழையார்கள் விரும்புவர்

வா மழையே இந்த நிலத்தைக் காண
குளிர் காற்றில் ஏறி வா
உன் குதிரை அது
நான் ஆறாவது நிலம்
கவிதையும் கவிதைசார் சூழலுமாக
சீவித்துக் கிடக்கின்ற பூமி

தென்னைமரத்தின் ஓலைக்குள் காற்று
சிக்கித் தலையெடுக்கத் துடிக்கின்ற
நேரம்போல்
அவதியான நேரம் வராமல்
காற்று பூ முகர்ந்து என் கண் ஒற்றும்
மாலைக்குள்
நிலவுபோல நீ வந்து உதி
நான் குழந்தைப் பிள்ளையின் வாய்க்குள்
கிள்ளிவைக்கும்
குட்டானைப்போல இழகிப்போய்
இருப்பேன்

--சோலைக்கிளி--

### மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

# புறக்கணிப்புகளை பொருட்படுத்தாமல் தொடர்ந்து எழுதிவந்திருக்கும் மண்டூர் அசோக்கா

மண்டு மரங்கள் பார்த்திருக்கிறீர்களா? அத்தகைய மரங்கள் செழித்த பிரதேசத்திற்கு காலப்போக்கில் மண்டூர் என்ற காரணப்பெயர் தோன்றியிருப்பதாக கிழக்கிலங்கை முன்னோர்கள் சொல்கிறார்கள்.

கிழக்கிலங்கையில் மட்டுநகரிலிருந்து தென்திசையில் சுமார் ஐம்பது கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் இந்தக்கிராமத்தின் பெயரையும் இணைத்துக்கொண்டு ஈழத்து இலக்கிய உலகில் பிரபல்யம் பெற்றிருப்பவர்தான் அசோகாம்பிகை.

நால்வகைத்திணைகளையும் கொண்ட இந்த அழகிய கிராமத்தில் இளையதம்பி - கனகம்மா தம்பதியரின் புதல்வியாகப் பிறந்திருக்கும் அசோகாம்பிகை தனது ஆரம்பக்கல்வியை மண்டூர் அரசினர் தமிழ்ப் பெண்கள் பாடசாலையிலும் உயர்தரக் கல்வியை பட்டிருப்பு மகா வித்தியாலயத்திலும் தொடர்ந்து, அதன் பின்னர் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையிலிருந்து பயிற்றப்பட்ட ஆசிரியையாக கிழக்கிலங்கையில் பல பாடசாலைகளில் பணியாற்றினார்.

இறுதியாக சுவாமி விபுலானந்தர் தோற்றுவித்த கல்லடி சிவானந்தா கல்லூரியில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

இவரும் ஈழத்தில் பல எழுத்தாளர்கள் இலக்கியப்பிரவேசம் செய்த 1970 காலப்பகுதியிலேயே இலக்கியப்பிரதிகளை எழுதத்தொடங்கினார்.

அதற்கு தூண்டுகோலாகவிருந்தது இளைமைக்காலத்தில் இவரிடமிருந்து வாசிப்பு ஆர்வம். பொதுவாக தமிழ்ச்சமூகத்தில் மாணவப்பராயத்திலிருக்கும் பிள்ளைகள் கதைப்புத்தகம் படித்தால் கெட்டுப்போவார்கள் என்ற மூடநம்பிக்கை ஆழமாக வேரூன்றியிருந்தது. ஆனால், தமது பிள்ளைகள் தன்னம்பிக்கையுடன் வளரவேண்டும் என விரும்பும் பெற்றோர்கள், தமது மாணவர்கள் சுயவிருத்தி ஆற்றலுடன் முன்னேறவேண்டும் என விரும்பும் ஆசிரியர்களைப்பெற்றவர்கள் உண்மையிலேயே பாக்கியசாலிகள்தான்.

மண்டூர் அசோக்கா அத்தகைய பாக்கியம் செய்தவர். அவருடைய முதல் கதைத்தொகுதி கொன்றைப்பூக்கள் கொழும்பில் அச்சிடப்பட்டவேளையில் அதன் முதல் பிரதியை எனக்கும் இலக்கிய நண்பர் மல்லிகை ஆசிரியர் டொமினிக்ஜீவாவுக்கும் காண்பித்தவர் கலை, இலக்கிய ஆர்வலர் வேலணை வீரசிங்கம். இவர் பிரவுண்சன் கோப்பி என்ற வர்த்தக ஸ்தாபனத்தை நடத்திக்கொண்டிருந்த காலம். பல கலை இலக்கிய நிகழ்வுகளுக்கும் இலக்கிய நூல்களின் வெளியீடுகளுக்கும் அனுசரணையாக திகழ்ந்த பிரமுகர்.

இவர்தான் வரணியூரான் எஸ்.எஸ். கணேசபிள்ளையின் புளுகர் பொன்னையா என்ற புகழ்பெற்ற நாடகத்தை இலங்கை எங்கும் அரங்காற்றுகை செய்வதற்கும் ஊக்கியாக இயங்கியவர்.



மண்டூர் அசோக்கா

ஒருநாள் அவரை அவரது கொழும்பு அலுவலகத்தில் நாம் சந்தித்தவேளையில் அவர் மண்டூர் அசோக்காவின் கொன்றைப்பூக்கள் தொகுதியை காண்பித்தார். ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவரும் சக எழுத்தாளர்களை தனது உற்சாகமூட்டும் வார்த்தைகளினால் வாழ்த்துபவருமான டொமினிக்ஜீவா அந்த நூலை கையில் எடுத்து, " பாரும் நண்பரே, கிழக்கிலங்கையில் வாழும் ஒரு பெண் எழுத்தாளரின் நூலை வட இலங்கையைச்சேர்ந்த இலக்கிய ஆர்வலர் கொழும்பில் வெளியிட்டு வைக்கிறார். இலக்கியம் பிரதேசங்களை இவ்வாறும் இணைக்கும் பண்பினைக்கொண்டது" என்று நூலாசிரியருக்கும் வெளியீட்டாளருக்கும் புகழாரம் சூட்டினார். 1976 ஆம் ஆண்டில் இச்சம்பவம் நடந்தது.

எனினும் மண்டூர் அசோக்காவின் கதைகளை பத்திரிகை, இதழ்களில் படித்திருந்தாலும் அவர் எழுதிய மெல்லிசைப்பாடல்களை வானொலியில் கேட்டிருந்தாலும், சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. இலங்கையில் நான் இருந்த காலப்பகுதியில் அதற்கான சந்திப்பு கிட்டவேயில்லை.

காலம் கடந்து 2010 ஆம் ஆண்டு இலங்கை சென்றிருந்தவேளையில் மட்டக்களப்பில் நடைபெற்ற ஒரு இலக்கியச் சந்திப்பில் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு அவர்கள், மண்டூர் அசோக்காவை எனக்கு அறிமுகப்படுத்தினார்.

ஏறக்குறைய மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் நான் பார்த்த கொன்றைப்பூக்கள் நூலை எழுதியிருந்த படைப்பாளியை அன்று முதல் முதலில் சந்தித்தவுடன், " கொன்றைப்பூக்கள் மண்டூர் அசோக்காதானே!" எனச் சொல்லியவாறு பரவசத்துடன் அவரைப்பார்த்தேன்.

பெண்கள், கலை - இலக்கியத்துறையில் ஈடுபடும்போது பல்வேறு சவால்களையும் சந்திக்கநேர்வது எமது தமிழ்சமூகத்தின் விதியாகியிருக்கிறது.

ஒரு காலத்தில் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று முன்னோர்

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

சமுதாயம் அவர்களை சமையலறையில் தள்ளிவைத்திருந்தது. ஒரு காலகட்டத்தில் பெண்களுக்கு தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையும் சில நாடுகளில் பறிக்கப்பட்டிருந்தது.

காலம் மாறியிருந்தாலும், கலை, இலக்கியம், அரசியல், சமூகப்பணிகளில் பெண்கள் ஈடுபடும்போது ஆணாதிக்க சக்திகள் அவர்கள் மீது விமர்சனங்களை முன்வைத்துவருவதையும் அவதானிக்கின்றோம்.

மண்டூர் அசோக்கா எழுதிக்கொண்டிருந்த காலத்தில், அதனால் அவர் புகழ்பெற்றுவிடுவார் என்பதனால் " எழுதி என்னத்தை கிழிக்கப்போகிறாய்?" என்றும் எள்ளி நகையாடியிருப்பதாக அறியக்கிடைக்கிறது.

எழுத்து ஒரு தவம். அது புகழுக்கானது அல்ல! சமூகத்திற்காக எழுதுவதும் சமூகத்தை பேசவைப்பதுமே எழுத்துத்துறையில் ஈடுபடும் படைப்பாளிகளின் பணி. அதனையே எமது இலங்கையில் பல பெண் படைப்பாளிகள் மேற்கொண்டு வந்தனர்.
அந்த வரிசையில் மண்டூர் அசோக்காவும் இலங்கையில் குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய பத்திரிகைகள் மற்றும் இலக்கிய இதழ்களில் எழுதியவர். இலங்கை வானொலிக்கும் தனது படைப்புகளை அனுப்பியவர். அதனால், இவரது எழுத்துக்களை படிப்பதற்கும் கேட்பதற்கும் வாசகர்களும் நேயர்களும் இருந்தனர்.

இதுவரையில், கொன்றைப்பூக்கள், சிறகொடிந்த பறவைகள், உறவைத்தேடி,



ஆகிய சிறுகதைத்தொகுதிகளையும் "பாதை மாறிய பயணங்கள்" என்ற நாவலையும் வெளியிட்டிருக்கும் மண்டூர் அசோக்கா, தான் பிறந்து வாழ்ந்த மண்டூர் பிரதேசத்தின் வெகுஜன அமைப்புகளின் பாராட்டுதல்களைப் பெற்றவர். அந்த அமைப்புகள் அவரை அழைத்து கௌரவம் வழங்கி பெருமை பெற்றுள்ளதாகவும் அறிகின்றோம்.

2001 ஆம் ஆண்டு தமிழகத்தில் தஞ்சாவூரில் நடந்த உதயகீதம் இலக்கிய விழாவில் "தமிழருவி" பட்டத்திற்காக பரிந்துரைக்கப்பட்டவர்.

இலங்கை மத்திய மாகாணத்தில் கண்டியிலிருந்து இலக்கியப்பணியாற்றிக்கொண்டிருந்து மறைந்துவிட்ட மற்றும் ஒரு பெண் எழுத்தாளரான ரூபராணி ஜோசப் அவர்களின் நினைவாக கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் சார்பாகவும் மண்டூர் அசோக்கா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இச்செய்தி எனக்கு கிடைத்தவேளையில், 1976 ஆம் ஆண்டில் அவருடைய முதல் வெளியீடு கொன்றைப்பூக்கள் நூல் நினைவுக்கு வந்தது.

கிழக்கில் மண்டூர் கிராமத்திலிருந்து ஊருக்கும் பெருமை சேர்த்துக்கொண்டு எழுதிவந்த இவருக்கு அன்று தலைநகரில் பெருமை கிடைத்தது. பல வருடங்களின் பின்னர் மீண்டும் இலங்கையின் மத்திய பிரதேசத்தில் இவருடைய நீண்டகால கலை, இலக்கியப்பணியை பாராட்டி விருது வழங்கப்பட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் இவரது எழுத்துப்பணிகள் குறித்து, "எழுதி என்னத்தை கிழிக்கப்போகிறாய்" எனச் சொன்னவர்களை இவர் கவனத்தில் எடுத்திருந்தால், ஈழத்து இலக்கிய உலகில் மண்டூர் அசோக்கா காணாமல்தான் போயிருப்பார்.

இவருடைய பெற்றோர், ஆசான்கள், வாழ்க்கைத்துணைவர் யோகராஜா மற்றும் அருமைச்செல்வங்களின் ஆதரவும் பக்கத்துணையும் இருந்தமையால், இன்று இவரைப்பற்றி நாமும் எழுதுகின்றோம்.

அசோகாம்பிகை யோகராஜா என்ற மண்டூர் அசோக்கா அவர்கள் தொடர்ந்தும் கலை, இலக்கியத்தில் செழுமை சேர்க்கவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

( தொடரும்)



# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 25

“மனிசற்ற உடம்பு பஞ்சபூதங்களால ஆனதெண்டு சொல்லுகினம் ஆனா அதின்ர தேவையளப்பாத்தா அப்பிடியில்ல.



கண்ணுக்க எப்பவும் அழகான காட்சியள்தான் ஒணும் காதுக்கு நல்ல இசையோணும் மூக்கிலயும் எப்பாத்தாலும் நாத்தமில்லாம நல்தா பூமணம் வேணும் இல்ல சோக்கான சாப்பாட்டு வாசம் பிடிக்க ஆச. பொண்டுகளுக்கு நல்ல வகவகயா சமைச்சு வெக்க விருப்பமிண்டா, அத வாய்க்கு ருசிபாத்து சாப்பிட நல்ல மாப்பிள ஒணும்.“

இதெல்லாம் எங்கட செல்லமக்கா சொல்லிற வாத்தை. அவாக்கென்ன அவகட ஊருக்கு கொள வேல செய்யப்போன ஓவசியர தன்ர கைக்குள போட்டு சமைச்சுக்குடுத்தே பொண்டாட்டியான பெருமை. சும்மா சொல்லக்கூடாது., “ஏன் பெரியாத்தை. நீ எப்பிடி வசியம் போட்டு இந்த மாப்பிளய எடுத்தா,“ எண்டு ஆரும் கேட்டா .... கொடுப்புக்க ஒரு நமட்டுச்சிரிப்போட அவா சொல்லுறதுதான்மேல சொன்ன கத.

ஒழுங்கா தலைவாரிக்கட்டத் தெரியாது எப்பவும் கோலி முடிஞ்ச கொண்டை தான். சீலக்கட்டும் தாறுமாறாத்தான் ஆனா ஆள் மட்டும் புது சுத்தம். காலம ஒழும்பின

**தமிழ்க்கவி**

உடன குளிச்சிடுவா அதுக்குப்பிறகு பட்டிக்குப்போய் பால் கறந்து பக்குவமா காச்சி ஒரு தேத்தண்ணி போட்டுக்கொண்டே ஓவசியர எழுப்புவா. அப்பதான் எங்கட ஊரு பள்ளிவாசல்ல ஓதுறது கேக்கும். இவ்வளவு வெள்ளெண ஏன் எழும்பிறாவிண்டா... அவா குளிக்கிறநேரம் ஆரும் பாக்காம இருக்கத்தான். இதே மாதிரி பொழுது பட்டபிறகும் ஒரு குளிப்பிருக்கு.

செல்லமக்கா நல்லா சமைப்பா என்ன கறிவகையிண்டாலும் எங்கட வன்னி யாழ்ப்பாணத்துப் பற்றனில இருக்காது. சுண்டங்காய் வத்தக்குழம்பில ஒரு இத்தினி மாசிக்கருவாட்ட பவுடரா இடிச்சுத் தூவி இறக்கினா காடு மணக்கும். வன்னி காட்டிறைச்சி வெகுத்த இடம் பண்டிக்கருக்கலாகட்டும் மான் மரை வத்தலாகட்டும் அவாட சேமிப்பில ஒரு குட்டிச்சாக்கில போட்டு அடுப்புக்கு நேர கட்டித் தொங்கவிட்டிருப்பா.. திடீரெண்டுதான் ஒரு விருந்தாளி வந்திட்டாலும் சட்டெண்டு ரெண்டு துண்டு கருவாட்டு வத்தல ஊறப்போட்டு சின்னவெங்காயத்தக் கொள்ளையா உரிச்சு வெட்டி அதப் பசு நெய்யில வதக்கி கானக் கொச்சிக்காய இடிச்சுக்கலந்து இந்தக்கருவாட்டையும் சேத்து பக்குவமான ஒரு வறை வறுப்பா ஸ்ஸ்ஸப்பா...இப்பவும் வாயூறுது.

இந்தக்காலத்தில அந்த கருவாடுகளையும் காயிதத்தில எழுதி வச்சுத்தான் பாக்கோணும். கண்ணப்படைச்சும் காணேலாது. சேல்லம்மாக்காட புருசன் முதல் ஒரு கலியாணஞ் செய்தவராம் அந்தப் பொம்பிளை எங்கயோ யாழ்ப்பாணத்துக்க இருக்காம். மாப்பிள மார் இலங்கைமுழுக்க உத்தியோகத்தில சம்பாரிச்சாலும் அந்தக்காலத்தில் யாழ்ப்பாணப் பொண்டுகள் படிதாண்டாப்பத்தினியள்ததான். இனி வாரம் ஒருக்கா வந்து மனிசியோட கிடந்திட்டுப்போறதுதான் மாப்பிளமாற்ற விதி.

அப்பிடியான காலத்திலதான் கொஞ்சம் சம்பளத்தோட கிம்பளமும் சம்பாதிக்கிறவை, இப்பிடி போற இடங்கள்ளையும் ஒவொண்ட வெச்சிருக்கிறது. இதில பாசம் பற்று இருக்கிறதில்லத்தான் ஆனா செல்லமக்காட மாப்பிள செல்லமக்காட சமயல்ல விழுந்து கிடந்தார்; இத அவரே கனதரஞ் சொல்லிக் கேட்டிருக்கிறன். செல்லமக்காவுக்கும் முதல் புரியன்ர வாழ்க்கையில ரெண்டு பெடியள் இருந்தாங்கள். அவயள தேப்பன்காரன் இவாவோட அனுப்ப மாட்டனெண்டு போட்டான். இவாவுக்கு இருந்த நேச்சரில அதுகள விட்டிட்டு வாறதுதான் சரியெண்டு பட்டிருக்கும். ஆனா அதுகள் வளந்தாப்பிறகு தேப்பனத்தட்டிவிட்டிட்டு தாயத்தேடி வந்து போனதுகள்தான்; ஓவசியர் அதுக்கு எந்த மறுப்பும் சொல்லேல்ல சொல்லவும் ஏலாது இப்பதான் அவரும் தளந்திட்டாரே.

ஆனா பிரச்சனை வேற வழியால வந்துது. என்ன சம்பாதிக்கிற காலத்தில ஓவசியர் கொஞ்ச நிலபுலன்கள வாங்கிப்போட்டார். அதிலயெல்லாம் செல்லம்மாக்காதான் வருமானம் பாத்தா. யாழ்ப்பாணக்காறிக்கு வெள்ளாமை வெட்டுக்காலத்தில வந்து நிண்டு அவர் நெல்லு வித்த காசை பறிச்சுக் கொண்டு போறதோட சரி. அவா வந்து வயல்ல நிக்கிறநேரமெல்லாம் ஓவசியர் சாப்பாடு மூண்டு வேளையும் கடையிலதான் கட்டிக்கொண்டுவந்து குடுப்பார். பாறியக்கை சொல்லுவா வவனியாக்கடையள்ள நல்ல சாப்பாடெண்டு அவாக்கு தெரியுமோ இது அவாவின்ர சக்களத்திதான் சமைச்சு அனுப்பினதெண்டு. கடைசியா செல்லமக்கா முன்னமா செத்துப்போனா பிள்ளையள் வந்து சவத்தைக் கொண்டு போக நிண்டினம் ஆனா நாங்கள் ஊருச்சனம் விடுவமோ செல்லமக்கா ஊருக்கு அவ்வளவு நன்மை செய்த மனிசி நாங்கதான் செய்வமெண்டு பிடியாளாக்கதற பிள்ளையள் விட்டு குடுத்தினம். ஆனா அந்தக்கவலையில ஓவசியரும் கெதியா அவாவிட்டப்போயிட்டார்.

## கவிதை

### உங்கள் சிலுவையில் என் உடல்

பொத்துக் கொண்டு வரும்
தூக்கத்தை எப்படித்
திசைமாற்றுவதென்று தெரியவில்லை
கண்கள் சொருகித் தலை கவிழ்கிறது
அடுத்த வரி நினைவிலிருந்து சறுகி
எங்கோ தொலைகிறது.
யாருடன் பேசிக் கொண்டிருக்கிறேன்
என்றே தெரியவில்லை

எதுவோ நடந்து கொண்டிருக்கிறது
நாளென்றால் அப்படித்தானே
ஏதாவது நடந்து கொண்டு தானிருக்கும்

சற்று முன் என்ன நினைத்தேன்?
என்ன செய்து கொண்டிருந்தேன்?

அடுத்தது என்ன?
எதைச் செய்யப்போகிறேன்?

யாரோ என்னை மறப்பதற்கும்
நினைப்பதற்குமாக
முயன்று கொண்டிருக்கிறார்கள்
போலுள்ளது.

எதையோ நினைப்பதற்கும்
மறப்பதற்குமாக
நானும் முயற்சிக்கிறேன்


அவர்களிடமிருந்து விடுபடுவதே
இபபோதைகது நல்ல செயல்
சென்று வருகிறேன் என்று
விடைபெற்றாலும்
ஓரடி நகர முடியவில்லை

அறையப்பட்டிருக்கிறது இந்த உடல்
உங்களுடைய சிலுவையில்

--- கருணாகரன் ---

## குறுக்கெழுத்துப்போட்டி இல:-09

**அரங்கம் இரா. தவராஜா.**



### இடமிருந்து வலம்:

01. குற்றாலத்துக்கு பெருமை தேடிக் கொடுப்பது.
04. குமரனின் அழகான திருநாமம்.
06. எதையும் ஈடுபாட்டுடன் அனுப்புதல்.
08. தலை போச்சு என்று எழுதச் சொன்னால் இடையில் (வ) போட்டு விட்டான் ஒரு பிரஹஸ்பதி.
09. இந்தக் “களை“ ஏற்பட்டால் மக்களுக்குப் பயந்தான். அது என்ன களை?
10. இதுவும் ஒரு வாகனந்தான்.
11. மென்மையான கலைகளுக்கு அடை மொழி.
12. கூர் வாய் கொண்ட பறவை.
13. தாமரை.
14. பெண்களை இப்படியும் சொல்வர்.

### மேலிருந்து கீழ்:

01. சித்தாத்தர் (புத்தர்) உதறித்தள்ளியது.
02. சுவை.
03. வித்தையில் சிறந்தவன்.
04. பாரி மன்னனுக்கு புகழ் தேடிக் கொடுத்த கொடி.
05. பாம்பாட்டிகளை இப்படியும் அழைப்பர்.
07. நீர் நிலைகளில் சத்தம் போடும் தாவிச் செல்லும் பிராணி.
09. ஞாயிறு ஒளிக் கோள்.
10. அகத்தியரின் வைத்திய மாணவன் பதார்த்தகுண சிந்தாமணியின் ஆசிரியர்.
11. விரைவில் அகலா அழுக்கு.
12. “ர்“ சேர்த்தால் பெண்.
13. அரங்கம்.

இதற்குரிய சரியான விடையை அரங்கம் செய்திக் கூப்பனில் நிரப்பி அஞ்சல் அட்டையில் ஒட்டி 28.06.2018க்கு முன்னர் அரங்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.
அரங்கம் நிறுவனம்:
227 பார் வீதி, மட்டக்களப்பு.

சரியான விடையை எழுதி அனுப்புவர்களில் அதிஸ்டசாலிகள் மூவருக்கு தலா 100 ரூபாய் பரிசளிக்கப்படும்.

# உறவுச் சிக்கல் :
# வாழ்வின் நோக்கத்தை தரம் தாழ்த்தாதீர்கள்

கணவன் இரண்டு ஆண்டுகளாக மனைவியைத் தொட்டுத் தழுவ வில்லை, இரவு போசனம் முடிந்ததும் முதுகு தெரிய சுருண்டு படுத்துவிடுகிறான்.

இது வீட்டுக்கு வீடு வாசப்படி. இப்படியொரு பிரச்சினை பெரும்பாலான வீடுகளில் இருந்தாலும் காரணங்கள் பலவாக, மாறுபட்டதாக இருக்கும்.

இரண்டாண்டுகள் என்பது நீண்டகாலம். பெரு வெடிப்பு.

ஆனால் இந்தப் பெருங் காயத்தைச் சுகப்படுத்த மனைவி எடுத்து வைக்கும் அடிகள் இடைவெளியை அதிகப்படுத்தும்படியாக இருந்துவிட்டால், அல்லது பெருங்காயத்தைக் குணப்படுத்தவே முடியாதபடியாக்கிவிட்டால் சேதம் முழுக் குடும்பத்திற்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தில் இப்படியொரு விவகாரம் பூதாகரப் பிரச்சினையாக இருக்கிறது.

**குற்றங்களைக் குறைகளை மட்டுமே தேடும் அதிரடிப் பொலிஸ் உத்தியோகம் பார்ப்பவர் யாரும் நிம்மதியாக வாழவே முடியாது**

அவர்களிடம் ஏற்கனவே ஒரு காரணமும் உள்ளது. அது, சம்பந்தப்பட்ட அந்தக் கணவன் வேறொரு இடத்தில் திருப்திப்பட்டுக் கொள்கிறான் என்பதே.

அது மட்டும்தான் காரணம் என்பதற்கான பல்வேறு துணைக் காரணங்களும் அந்தக் குடும்பத்திடமுள்ளன. அவற்றில் சில உண்மைகளும் பெரும்பகுதி ஊகங்களும், ஒரு தொகை சந்தேகங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

ஒரு கணவன் ஒரு நாள், ஒரு மாதமென்றில்லை; இரு ஆண்டுகளாக மனைவியை நெருங்கவில்லை. ஒரே வீட்டில் ஒன்றாக வாழ்கிறான். அவள் சமைத்துப் பரிமாறும் உணவை உண்கிறான். அவள் துவைத்துத் தரும் உடையையே அணிகிறான். ஆனால் நெருங்கவில்லை.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வை எட்ட முதலில் அவனது வயதைப் பார்க்கவேண்டும். அவனது வாழ்க்கை முறையை, சூழலைச் சிக்கல்களைப் புரிந்து கொள்ளவேண்டும்.

அவனது உடலில் இருக்கத்தக்க கோளாறுகளைப் பலவீனங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். வாழ்க்கை முறையில், தொழிலில், வருமானத்தில் உருவாகியுள்ள சிக்கல்களைக் கணக்கில் கொள்ளவேண்டும். அவன் கூடுதல் சமூகப் பொறுப்புமிக்கவனாக கருதுபவன் எனில் அவனைப் பாதிக்க கூடிய சமகால சமூக, கலாசார, மத, அரசியல், பண்பாட்டு நிலைகளை விளங்கவேண்டும். அவனது புதிய ஈடுபாடுகளைக் கண்டறியவேண்டும். மதம், ஆன்மீக நிலைகளில் அவனது நிலைகளைப் பார்க்கவேண்டும்.

ஒரு "பாலுறவு" நடக்காததிற்குப் பின்னால் இவ்வளவு தாக்கங்கள் இருக்கமுடியுமா? பாலியல் வல்லுறவுக் குற்றவாளியவே, அவனது குற்றச் செயலை நியாயப்படுத்தும் பின்னணிகளைத் தேடும் இந்த உலகில்தானே



நாம் வாழ்கிறோம். அதில் ஈடுபாடற்று, அதுவும் சட்டப்படி உரித்துடைய மனைவியவே ஒருவன் நெருங்காமல் இருப்பதற்கு ஏன் காரணங்கள் இருக்கமுடியாது?

இவையெல்லாம் சரிகாணவேண்டும், நியாயப்படுத்த வேண்டும் என்று கூறவில்லை. காரணங்களை அறியாமல் பிரச்சினையை அறிய முடியாது. பிரச்சினையை அறியாமல் அதற்குத் தீர்வை எட்டமுடியாது. காரணங்கள் மிகத்துல்லியமாக இருந்தால் மட்டும்தான் நியாயமான, நேர்மறையான விளைவை அடையமுடியும்.

ஆணுக்குப் பதில் இந்த நிலையில் பெண் இருந்தாலும் இதையேதான் முயற்சிக்கவேண்டும். பாதிப்புக்குக்கு காரணமான நபரை விடவும் பாதிக்கப்பட்டவர் அல்லது பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பவரின் பொறுப்பு கணவன் மனைவி உறவென்றில்லை, எல்லா உறவிலும் இருமடங்கு.

தாமாகவே ஒரு காரணத்தை உருவகித்துக் கொண்டு, உருவகித்துக் கொண்ட காரணத்திற்கு வலுச் சேர்க்கும்படியான ஆதாரங்களை சேகரிக்க முயற்சிக்கும்போது, சில விபரீதங்கள் நேர முடியும். தகவல் அறியும் ஆர்வத்தை தெரிந்து கொண்ட நபர்கள் தலை, வால் வைத்துத் தகவல்களைக் கூற முற்படுவார்கள். நடக்காததைக்கூட நடந்தது போலவே விபரிப்பார்கள். சூழ்நிலை, மன ஏக்கம், இயலாமை அனைத்தையும் நம்பச் செய்யும். சந்தேகங்களை வலுப்படுத்தும் பொய்கள் முரண்பாடுகளைச் சர்ச்சையாக மாற்றும். தொடர் சர்ச்சைகள், தொடர் விசாரணைகள் நிம்மதியை இழக்கச் செய்து குடும்ப அமைதி கெடும்.

**'பேபி பனடோல் சிரப்' தந்து சுகமான காய்ச்சல் 14 வயதிற்குப் பிறகு சரிவராது**

தாம்பத்திய வாழ்வைத் தொடர விரும்புபவர் யாராயினும் நிதானமாகவே இந்த விவகாரத்தைக் கையாளவேண்டும். அதோடு குறையோ குற்றமோ ஒரு பக்கம்தான் இருக்கவேண்டும் என்றுமில்லை. இருபக்கமும் இருக்கமுடியும். சுயபரிசோதனை ரொம்ப முக்கியம். உறவுகளில் விரிசலோ சிக்கலோ உருவாகிவிட்ட பிறகு கடந்த காலக் காதல் வாழ்க்கை, அர்ப்பணிப்புகள், தியாகங்களைப் பட்டியலிட்டுப் பழைய பஞ்சாங்கம் பாடிக் கொண்டிருப்பதால் பலனொன்றுமில்லை.

ஷர்மிளா சையத்

குழந்தையாக இருந்தபோது "பேபி பனடோல் சிரப்" தந்து சுகமான காய்ச்சல் 14 வயதிற்குப் பிறகு சரிவராது.

கடந்தகால அனுபவ பெருமைகள் எக்காலத்திற்கும் தீர்வாகும் என்பது அறியாமை. காலத்திற்குத் தக்க தீர்மானங்களுக்குத் தயாராகமுடியாத பக்குவமற்ற வயதேற்றம் இன்னொரு நோய்மை. இரண்டாண்டுகள் நெருங்காத துணையை மற்றவர் எப்படியாக கையாண்டார் அல்லது அதொரு புறக்கணிப்பு நிலை என்பதை உணர என்னவெல்லாம் முயன்றார் என்பதும் முக்கியம்.

இந்த முயற்சிகளைப் பக்குவமாக பரிசோதித்தும் இணைவு சாத்தியப்படாதபோது பிரிந்து போகலாம். அவசரமான தீர்வை விரும்புகிறவர் எனில் எந்த முயற்சியும் செய்யாமலும் பிரியலாம். இவற்றுக்கெல்லாம் முன்பாக சம்பந்தப்பட்ட கணவன் மனைவி நேருக்கு நேராக மனந்திறந்து உரையாடவேண்டும். சந்தேகங்களைக் கூறவேண்டும். நியாயங்களை செவிமடுக்கவேண்டும்.

இப்படிப் பல சாத்தியங்கள் உள்ள இந்த பூமியில் யாரும் அழுது புலம்பி தானும் மகிழ்ச்சியாக வாழாது மற்றவர்களையும் வாழ அனுமதியாத பாவச் செயலை ஆணோ பெண்ணோ செய்து வாழ்வின் நோக்கத்தை தரம் தாழ்த்தாதீர்கள். அதன் அழகை, எளிமையைக் கொண்டாடுங்கள். குற்றங்களைக் குறைகளை மட்டுமே தேடும் அதிரடிப் பொலிஸ் உத்தியோகம் பார்ப்பவர் யாரும் நிம்மதியாக வாழவே முடியாது.

## கவிதை

### உன்றமிழி லெனையிழுந்தேன்!

இயற்றமிழின் வித்தகன்நீ இயற்றிய
நற்றமிழ்தான்
இதயத்தொடு ஒட்டியேயுளது இத்தரைத்
தமிழுளத்து
செயற்கரியன செய்து சாதித்தாய்
நற்றமிழிற்பல
சொல்வதுநான் எங்ஙனந்தான்
செவியேற்க நீயிலையே!

நெஞ்சிற்கு(ள்) நீதியும் தென்பாண்டி(ச்)
சிங்கமும்
நலமான குறளுக்காய் நீள்பனுவல்
குறளோவியமும்
விஞ்சுபுகழ் நீட்டிநீதான் விந்தையாய்
சங்கத்தமிழும்
விதவிதமாய் உனக்கான வித்துவத்தில்
தந்தாய்பல!

பாயும்புலி பண்டாரவன்னியன் படைத்தாய்
உளத்து
பாயும்தமிழில் தென்பாண்டிச்
சிங்கமுந்தான் தந்தாய்
நீயுந்தான் பால்யவயதில் காலூன்றித்
தமிழுக்குள்
நலமாகப் பொன்னர் சங்கர்
கொணர்ந்தாய் - நற்றமிழா!

உரோமாபுரிப் பாண்டியனை இயற்றி
பண்டைய
உயிரோட்ட வரலாற்றை நம்முன்
கொணர்ந்தாய்
வீறுடைய நற்றமிழன் புகழ்பாட
தொல்காப்பியமதை
விரும்பிட உளங்கள் பூங்காவாய்
எம்முன்தந்தாய்!

பொன்னான விரலிடுக்கில் பேனாவேந்தி
பாவேந்து
பைந்தமிழில் அள்ளியே தந்தாய்
தமிழணங்கிற்கு
வென்றே நின்றாய் கலையுளங்களை
எப்பொழுதும்நீ
வென்றே நின்றதென்னுளம்
உன்பனுவல்கள் நுகரத்தான்!

வசனநடை கைவந்த வல்லவன்
நீயுந்தான் - கலைஞா
வண்ணத்தமிழில் வடித்திட்ட
வனப்பேஎலாம் வாழும்
நீசர்கள் என்னத்தான் உன்னைத்தான்
சொன்னாலும்
நீள்புவியில் நின்றுபிடிக்கும் படைப்பினால்
நீயுந்தான்!

வள்ளுவன்கு சிலைவைத்தாய் வடிவாக
மரீனாவில்
வள்ளுவ அளவடியில் நீயுந்தான்
நிலத்தணைந்தாய்
சொல்லுகிறேன் நானுந்தான்
உன்றமிழ்போல் நற்றமிழ்
சொலவல்லார் இங்குவந்தார்
உன்னாற்றான் மு.க.வே!

முகவரியெழுதி முகநகநீதான்
சென்றிட்டாய் காற்றோடு
மணப்பாய்நீ யுன்றமிழால் நற்றமிழ்க்குள்
நுழைந்ததனால்
வேகமாய் எழுதினேன் உனைத்தான்
இக்கவியில்நான்
வித்துவமே உன்றமிழினிலு
மெனையிழந்தேன் நான்!

--- கலைமகன் பைரூஸ் ---
(மதுராப்புர)



# கட்டிளமைப் பருவ உளநலம்

## கட்டிளமைப்பருவ போசணை

உணவு எமது அடிப்படைத் தேவையாகும். உணவின்றி நாம் உயிர் வாழ முடியாது. எனினும் பாடசாலைச் சிறுவர்கள், கட்டிளமைப்பருவத்தினரிடையே உள்ள உணவுப்பழக்கங்கள் காரணமாக பல்வேறு சுகாதாரப் பிரச்சனைகள் எழுந்துள்ளமை உங்களுக்குத் தெரியுமா? ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலம் மேற்படி தீய விளைவுகளிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளலாம். எனவே நாம் எவற்றை, எவ்வாறு உண்ணுகின்றோம் என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளல் வேண்டும். ஆரோக்கியமான உணவுப்பழக்கம் என்பது "பல்வேறு வகையான உணவுகளை, தேவையான அளவுகளில், பரிந்துரைக்கப்பட்ட அளவில் உண்ணுதல்" ஆகும். ஆரோக்கியமான உணவுப் பழக்கம் ஆரோக்கியமான வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் முக்கிய பங்காற்றுகின்றது. நீண்டகாலத் தொற்றா நோய்கள் ஏற்படாமல் எதிர்காலத்தில் உங்களை பாதுகாக்கின்றது.

"ஒருவேளை" உணவைத் திட்டமிடல்:

--------------------------------------------------------------------------



நாம் நாளாந்தம் மூன்று பிரதான வேளைகளில் உணவை உட்கொள்கின்றோம். இப்பிரதான வேளை உணவுகளைத் தவிர்க்கலாகாது. எமது பிரதானவேளை உணவானது பின்வரும் உணவுப் பதார்த்தங்களைக் கொண்டிருக்க வேண்டும். தானியங்கள் மற்றும் கிழங்கு வகைகள் (உணவுத் தட்டின் ஏறத்தாழ அரைப்பங்காக அமைய வேண்டும்).மரக்கறி வகைகள் (மிகுதி பாதி உணவுத் தட்டின் 2/3 பங்காக அமைய வேண்டும்) மீன், அவரை வகைகள், முட்டை மற்றும் இறைச்சி (பாதி உணவுத் தட்டின் 1/3 பங்காக அமைய வேண்டும்) கொழுப்பு/ எண்ணெய்/ எண்ணெய் விதைகள் ஓரளவு சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

தினசரி உணவிற்கு சேர்த்துக் கொள்ள வேண்டிய பல்வேறு உணவுகளைத் தெரிவு செய்வது

--------------------------------------------------------------------------

குறிப்பிட்ட ஒன்று அல்லது இரண்டு வகையான உணவு வகைகளில் அதிகளவை உண்பதை விட, ஆறு வகையான உணவு வகைகள் எல்லாவற்றிலும் சிறிதளவு உண்பதே சிறந்தது. ஒவ்வொரு உணவு வகையிலும் வெவ்வேறு போஷணைப் பொருட்கள் உண்டு. ஒவ்வொரு உணவு வகையிலும் அடங்கும் வெவ்வேறு உணவுப் பதார்த்தங்கள் எவை என்பதை அறிந்து வைப்போமாயின் எமது உணவைத் திட்டமிடுதல் சுலபமாகும்.

தானியங்கள், கிழங்கு வகைகள்

--------------------------------------------------------------------------

அரிசி இலங்கையில் அதிகளவில் நுகரப்படும் தானியமாகும். குரக்கன், சோளம், கோதுமை அரிசி, குரக்கன் மற்றும் கோதுமை மாக்களிலிருந்து இடியப்பம், அப்பம், பிட்டு, பாண், ரொட்டி, தோசை, போன்ற உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. மாச்சத்துக் கொண்ட பழங்கள் - பலா, ஈரப்பலா கிழங்கு வகைகள் - மரவள்ளி, உருளைக்கிழங்கு, வற்றாளைக்கிழங்கு, சிறு கிழங்கு, சேமக்கிழங்கு தூயதாக்கப்பட்ட கோதுமைமாவை(வெள்ளை) உண்ணுதல் உங்கள் உடல் நலனுக்கு நன்றல்ல. எனவே இயன்றளவு அதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

மரக்கறிகள்

--------------------------------------------------------------------------

கனியுப்புக்கள், விற்றமின்கள், நார் சத்துக்கள், "ஒட்சி" எதிர்ப்புப் பொருட்கள் (அன்றிஒக்சிடன்ற்கள்) போன்றவையை வழங்கும் பிரதான உணவு மரக்கறி வகைகள் ஆகும். "அன்றிஒக்சிடன்ற்" இயல்பினாலும் அதிக நார்ச்சத்தைக் கொண்டிருப்பதாலும் மரக்கறி வகைகள் புற்றுநோய், நீரிழிவு மற்றும் இருதய நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கின்றன. இலங்கையில் நூற்றுக் கணக்கான, வேறுபட்ட மரக்கறி வகைகள் எமது தெரிவுக்காக உள்ளன. எனவே நாம் இயன்றவரை உள்நாட்டில் பெற்றுக்கொள்ளக் கூடியதும், பருவ காலங்களிற்களுக்கு ஏற்ப கிடைக்கும் மரக்கறி வகைகளையும் தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும். மரக்கறி வகையிலிருந்து உச்ச பயனைப் பெற புதியதும், பருவ காலங்களில் கிடைக்கின்றதுமான மரக்கறிகளை தெரிந்தெடுத்துக் கொள்ளுங்கள். கழுவிய பின்பே அவற்றை சமைப்பதற்காக வெட்டவும். வெட்டிய பின்னர் உடனடியாக சமைத்துக்கொள்ளவும். சமைக்கும் காலத்தை குறைத்துக்கொள்ளவும்.

மீன், அவரை வகைகள், முட்டை மற்றும் இறைச்சி வகைகள்

--------------------------------------------------------------------------

விலங்கு உணவுகளான மீன், முட்டை, இறைச்சி போன்றவை உயர்தர புரதச்சத்தைக் கொண்டு விளங்குகின்றன. நாம் பல்வேறு வகையான மீன் வகைகளை உண்ணலாம் (நன்னீர் மீன், கடல் மீன், நெத்தலி, உலர்த்திய மீன், இறால், கணவாய் போன்றவை). சிறு மீன்களை உணவில் சேர்த்துக் கொள்ளுதல் ஆரோக்கியத்திற்கு அதிக நன்மையைக் கொடுக்கும். அவரை வகைகளும் புரதச்சத்தைக் கொண்டுள்ளன. நாம் பல்வேறு வகையான அவரை வகைகளை உட்கொள்ளலாம் - கடலை, கௌபி, பாசிப்பயறு, சோயா அவரை, உளுந்து, பருப்பு போன்றவை.

கொழுப்பு, எண்ணெய் வகைகள்

--------------------------------------------------------------------------

இவை எமது உடல் வளர்ச்சிக்கும் தொழிற்பாட்டிற்கும் அவசியமானதாகும். எனினும் இவற்றின் மேலதிக பாவனையானது தொற்றா நோய்களை ஏற்படுத்தலாம். நாம் சமைப்பதற்காக பாவிக்கும் தேங்காய், தேங்காய்ப்பால், தேங்காய் எண்ணெய் என்பன கொழுப்புச் சத்தைக் கொண்டுள்ளன. எண்ணெயில் (கூடியளவு நேரம்) பொரித்தல், இயன்றளவு தவிர்க்கப்பட வேண்டும். பல தலைமுறைகளாக நாம் பயன்படுத்தும் தேங்காய் எண்ணெய் பொரிப்பதற்கு மிகவும் பொருத்தமானதாகும். ஏனெனில் அவை வெப்ப உறுதி கொண்டவையாகும்; பாம் எண்ணெய், மரக்கறி எண்ணெய், மாஜரின் போன்றவை ஆழப் பொரித்தலுக்கோ, மீள் பொரித்தலுக்கோ உகந்தவையல்ல. எண்ணெய் நிறைந்த மீன் வகைகள் ஆரோக்கியமான எண்ணெய் மூலமாகும். (மக்கரல், கீரி, சல்மன், கும்பிளா, சூரை) எண்ணெய்த் தன்மையான விதைகள் - இவற்றில் ஆரோக்கியமான கொழுப்புக்கள், நார்ச்சத்து, விற்றமின் E, கனியுப்புக்கள் முதலியவை அடங்கியுள்ளன. நமது இதயத்தின் ஆரோக்கியத்திற்கு இவை நன்மையளிக்கின்றன. இவற்றில் நல்ல கொலஸ்திரோல் அடங்கியுள்ளது. கச்சான், கொட்டங்காய், கஜு, பூசணி விதை, எள்ளு, பாதாம் பருப்பு போன்றன இவற்றிற்கு உதாரணங்களாகும். ஆரோக்கியமற்ற கொழுப்பு – பேக்கரி உணவு வகைகள், பொரித்த உணவு வகைகள், பேஸ்ரி வகைகள், பிஸ்கட், கேக் என்பவை ஆரோக்கியமற்ற கேடு விளைவிக்கக் கூடிய ரான்ஸ் கொழுப்பைக் கொண்டுள்ளன. இவற்றைத் தவிர்ப்பது நல்லது.

பழங்கள்

--------------------------------------------------------------------------

நலமான வாழ்வுக்கு நாம் தினமும் பழவகைகளை உட்கொள்ள வேண்டும். பழங்கள் விற்றமின்களையும், கனியுப்புக்களையும், நார்ச்சத்துக்களையும், "அன்றிஒக்சிடன்களையும்" வழங்கும் நல்ல உணவுகளாகும்.ஒரு நாளைக்கு இரு தடவை அல்லது அதனை விடக் கூடுதலான தடவைகள் பழங்களை உண்ணுதல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கிரமமாக பழங்களை உண்ணும் போது குடல் நோய்களிலிருந்தும், மலச்சிக்கலிலிருந்தும், புற்றுநோய்களிலிருந்தும் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். உள்நாட்டில் பெற்றுக்கொள்ளக் கூடியதும், பருவகாலங்களுக்கு ஏற்பக் கிடைக்கும் புதிய பழங்களை உண்ணுதல் ஆரோக்கியத்துக்கு அதிக நன்மை பயக்கும். நீண்ட காலம் பாதுகாக்கப்படுவதற்காக இரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பழவகைகளை நாம் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். பழங்களை உணவுக்காக வெட்டுவதற்கு முன்னரேயே கழுவிக் கொள்ளுதல் அவற்றிலுள்ள ஊட்டச்சத்துக்கள் விரயமாவதைத் தடுக்கும். மரக்கறி வகைகளைப் போலவே எமது நாட்டில் பல்வேறு வகையான பழ வகைகளும் உள்ளன (வாழைப்பழம், பப்பாசி, கொய்யா, நெல்லி, வெள்ளரிப் பழம், விளாம் பழம், மாதுளை, அன்னாசி, ஆனைக்கொய்யா, ஜம்பு, புளியம்பழம், வெரலு, அன்னமின்னா.

பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்கள்

--------------------------------------------------------------------------



எமது உணவில் பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்கள் பிரதான பங்கினை வகிக்கின்றன. அவை காபோவைதரேற்றுக்கள், புரதங்கள், கொழுப்பு, கனியுப்புக்கள், மற்றும் விற்றமின்களைக் கொண்டுள்ளன. பால், தயிர், யோகட், சீஸ் மற்றும் பட்டர் என்பவை நாம் உண்ணக் கூடிய சில பாலுற்பத்திப் பொருட்களாகும். பால்மாவை விட உடன் பாலே சிறந்தது. ஒருநாளைக்கு ½ - 1 குவளை பால் அல்லது 1 கப் யோகட் அல்லது தயிர் வளரும் குழந்தைகளுக்கும், கட்டிளமைப்பருவத்தினருக்கும் சிபார்சு செய்யப்படுகின்றது. மேலதிக இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் மேலதிக சீனியைக் கொண்டு பதப்படுத்தப்பட்ட பாலை அருந்துவதைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்**
**உளநல மருத்துவர்**
**வாழைச்சேனை மருத்துவமனை**

நறுமணப் பொருட்கள் / வாசனைத் திரவியங்கள்

--------------------------------------------------------------------------

பண்டைக் காலத்திலிருந்தே உணவின் சுவையையும் நறுமணத்தையும் அதிகரிக்கவும், இயற்கையாக உணவை பதனிட்டு பாதுகாப்பதற்கும் நறுமணப் பொருட்கள்/வாசனைத் திரவியங்கள் பாவனையிலிருந்து வந்துள்ளன. இவை நன்மைகளை விளைவிக்கக் கூடியனவையாகும்.

எமது நாட்டின் வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்களுக்குரிய நன்கு அறியப்பட்ட காரணங்களில் ஒன்று வாசனைத் திரவியங்கள் ஆகும். உங்கள் உணவுகளுக்கும் இவற்றைச் சேர்த்துக் கொள்ளுங்கள். உ-ம் மஞ்சள், இஞ்சி, கறுவா, மிளகு, உள்ளி, மிளகாய், கராம்பு, ஏலம், சீரகம் மற்றும் வெந்தயம் போன்றவை.

# மூணாம் வகுப்பு கேள்வி : இதுவும் ஒரு துஸ்பிரயோகந்தான்

காரின் பின்புறத்தில் இருபுறமும் இருக்கும் மூன்று விதமான வர்ண சமிக்கை விளக்குகள் குறிப்பிடுவது யாது?





இது பற்றி பார்க்கும் முன் காரோட்ட கற்றுக் கொள்ளவதற்காக முதன் முறையாக நான் ஸ்டீயரிங்கை தொட்ட வரலாற்று நிகழ்வை பதிய வேண்டும்.

களனியில் உள்ள ஒரு வீதியில் மொறிஸ் மைனரொன்றில் ட்ரைவிங் லெசன் நடந்தது. எனது நண்பனொருவனுக்கு தெரிந்த டாக்ஸி சாரதியே எமது ட்ரெயினர். கிளச், கியர் ஆக்ஸிலேட்டர் மற்றும் பிரேக் குறித்த மாமூலான அறிமுகப்படுத்தலுடன் ஸ்டீயரிங் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

கிளச்சை மிதித்து கியரை நியூற்றலில் இருந்து மாற்றி ஆக்ஸிலேற்றை தடாலடியாக உதைக்க, சீறிப் பாய்ந்த கார் ஒரு சுற்று சுற்றி பாதையைவிட்டு விலகி அங்கிருந்த பெரு விருட்சத்தை நோக்கி ஆவேசமாக சென்றபோது.... என்னிடம் இருந்து ஸ்டீயரிங்கை பிடுங்கிய ட்ரெயினர் லாவகமாக கையாண்டு காரை திருப்பி ... " மரத்துடன் மோதி கார் விபத்து: மூவர் பலி" என மறுநாள் தினசரிகளில் கொட்டை எழுத்துக்களில் தலைப்பிட்டு அச்சாகவிருந்த முன் பக்க செய்தியை இல்லாமலாக்கினான். ஒரு முற்றுப்புள்ளியை கமாவாக்கி கிடைக்கவிருந்த பப்ளிசிட்டியையும் தடுத்து விட்டான்.

" இன்னைக்கு இது போதும் தொரை. வேறொரு நாளைக்குப் பார்ப்போம்" என்று கம்பி நீட்டியவனைப் பற்றி, இரு வாரங்களின் பின்னர் விசாரிக்க "மச்சான் அவனுக்கு டுபாயில ட்ரைவர் வேலை கிடைச்சு போய்ட்டான் என்றான் நண்பன்.

அவன் டாக்ஸி ஸ்டீயரிங்கை நாம தொட்ட யோகமா இல்லை நமக்கு ட்ரைவிங் கற்றுக்கொடுப்பதில் உள்ள ஆபத்துக்கு பயந்தா அவன் டுபாய் போனான் என சரியாக தெரியாது.

எனது முதலும் இறுதியுமான அந்த ட்ரைவிங் லெசன் முடிந்து முப்பதாண்டுகள் கடந்து விட்டது.

இந்தப் பின்னணியில் தான் மேலே உள்ள கேள்வி என்னிடம் கேட்கப்பட்டது. புதிதாக ட்ரைவிங் கற்கும் எவனாவது, ட்ரைவிங் லைசன்ஸ் இல்லாத என்னிடம் இதை கேட்டிருந்தால் கடுப்பாகி இருப்பேன்.

கேட்டது மூன்றாம் ஆண்டில் படிக்கும் என் பேத்தி. "இதெல்லாம் ஏம்மா உங்களுக்கு?" என்ற என்னிடம் பயிற்சி புத்தகத்தை நீட்டினாள் பேத்தி.

அது, தனியாரால் வெளியிடப்படும் சுற்றாடல் பயிற்சி நூல். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ரேஸில் ஓடும் பிள்ளைகளின் கெட்டித்தனத்தை கூட்ட இப்போதிருந்தே பயிற்சி.

பேத்தி காட்டிய பக்கத்தில் சாரதி அனுமதி பத்திர பரீட்சைக்கு தோற்றுபவர்கள் கற்க வேண்டிய வீதி சமிக்கைகள் உள்ளிட்ட சகலமும் அதிலிருந்தது. ஒரு வளர்ந்த பாதசாரிக்கு கூட அவசியப்படாத இந்த விடயம் ஒரு சிறுமிக்கு எதுக்கு?

இதுமட்டுமல்ல தாவரங்களின் வகைகள், அவற்றின் இலைகள், அதன் அளவு, இந்தப் பூவுக்கு எத்தனை இதழ்கள், அந்த மரத்துக்கு எத்தனை கிளைகள்... இப்படி ஏகப்பட்ட தகவல்கள்.

இந்த கேள்வியை பாருங்கள்:
புளியமர இலையை ஒத்த இயல்புடைய தாவரம் எது?
1) குன்றி மணி
2) தொட்டாவாடி
3) அகத்தி
4) ஈரப்பலா

புளியமரத்தையே பார்த்திராத கொழும்பில் பிறந்து வளர்ந்த பிள்ளை எப்படி இதற்கு பதில் தரும்?
(நானும் கொழும்பில் பிறந்து வளர்ந்த பிள்ளை என்பதை நினைவிற் கொள்க)

இதிலுள்ள பல வினாக்கள் கற்றது கை மண்ணளவு என்ற தத்துவத்தை எமக்கு உணர்த்தும். பல கேள்விகளுக்கு தாவரவியல் கற்கும் மாணவனின் உதவியையே நாட வேண்டி இருக்கும்.

வட்டக்கண்ணி இலையை நீங்கள் அறிவீர்களா? இலையின் படத்தைப் பார்த்து வட்டக்கண்ணியா அல்லது மந்தாரையா என உங்களில் எத்தனை பேர் அடையாளம் காண்பீர்கள்?

இந்த வகையான புத்தகங்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள் எழுதியவரின் மேதாவிலாசத்தை காட்டுவதாகவே இருக்கின்றன. இதன் மூலம் புத்தக விற்பனையை பெருக்குவதே அவர்களது நோக்கம்.

தமக்கே பதிலளிக்க முடியாத வினாக்கள் புத்தகத்தில் இருந்தாலே அது நல்ல பயிற்சி நூலாக பெற்றோர்களால் கருதப்படுகிறது.

ஒரு பிள்ளையின் வயதுக்கும் மனவளர்ச்சிக்கும் உரிய அளவிலேயே அப்பிள்ளையின் கற்றலுக்கான விடயங்கள் தீர்மானிக்கப்பட வேண்டும். வரையறை எதுவுமின்றி பிள்ளைகளின் சிறிய மூளையில் நாம் விரும்பும் சகலதையும் திணிக்க முயல்வது அநியாயம். இதுவும் ஒருவகை துஷ்பிரயோகமே.

வியாபார நோக்கிலான இத்தகைய புத்தகங்களின் ஆபத்தை பெற்றோர் உணர வேண்டும்.


-நஸீம் ஹிக்மத்

# யார்(ர்) கவனிப்பார்(ர்)

இன்றும் கூட இரண்டு வகையான (ர்) இர்ரனாக்கள் பயன்பாட்டில் உள்ளன. இதில் எது சரியானது என்பதில் கவனம் செலுத்தாமல் அப்படியும் எழுதலாம், இப்படியும் எழுதலாம் எனும் நிலைப்பாட்டிலேயே உள்ளார்கள். எப்படியாகினும் சரியான ஓர் எழுத்தை தெளிவாக்க வேண்டுமல்லவா?

ஆரம்ப காலத்தில் ர் ரகம் மயக்க நிலையை தோற்றுவித்திருக்கலாம், அது கண்களுக்கு புலப்படாமல் போயிருக்கலாம். அது போனால் அச்சேறுங்காலத்தில் தவறுகள் நடந்திருக்கலாம் என்ற ஐயப்பாடும் உள்ளன.

ஒவ்வொரு உயிர் மெய் எழுத்துக்கள் அனைத்தும் அதன் மெய் எழுத்திலிருந்து உயிர்மெய் எழுத்தானதையே நாம் காண்கின்றோம். க்க, ஙங, ச்ச, ஞ்ஞ, ட்ட, ண்ண, த்த, ந்ந, ப்ப, ம்ம, ய்ய, ர்ர, ல்ல, வ்வ, ழ்ழ, ள்ள, ற்ற, ன்ன, இத்தனை எழுத்துகளுக்குள்ளும் ர் எழுத்திலேயே பிரச்சனை உருவாகிறது. ர் இல் குற்றை நீக்கினால் "ர" அரவுதான் வரும். அப்படி அல்லாது போனால் ர தான் சரியெனப் பார்த்தால் மெய்யெழுத்து (ர்) ரவின் மேல் குற்று வைத்த எழுத்தாகவே அமைய வேண்டும். அத்தொடரை முழுமையாகப் பார்க்கையில்.....



ர்(ர்), ர, ரா, ரி(ரி), ரீ(ரீ), ரு, ரூ, ரெ, ரே, ரொ, ரோ, ரௌ

இதில் இரண்டு வகையான ர்ர், ரிரி, ரீரீ எழுத்துக்கள் பாவனையில் உள்ளன. இதுவரையில் இவ்வெழுத்துக்களால் பிரச்சனைகள் எமக்கௌவிட்டாலும் சீர் செய்து கொடுப்பது கற்றோரின் கடமையல்லவா!

--- "மன்னுயில்" பெ.செல்வம்
சின்ன ஊறணி

# மட்டக்களப்பில் கென்ரிச் பினென்ஸ் குடிநீர் திட்டத்தின் மூன்றாம் கட்டம்

KANRICH FINANCE
Relationships without borders

கென்ரிச் பினென்ஸ் நிறுவனம் தமது சமூகப் பொறுப்பினை உணர்ந்து இன,மத மற்றும் சாதி பேதமின்றி, பல ஆண்டுகளாக பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் திரு சிரான் வீரசிங்க உள்ளிட்ட முகாமைத்துவத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் திட்டமும் அவ்வாறானதொரு சமூகப் பணியாகும். அதன் பிரகாரம் குடிப்பதற்கு உகந்த தண்ணீர் கிடைக்காத பிரதேச பாடசாலைகளை இலக்காக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள இத் திட்டத்தின் மூன்றாம் கட்டமாக, மட்டக்களப்பு மாவட்டத்தின் வசதியற்ற மாணவர்கள் பயிலும் பாடசாலைகளில் ஒன்றான ஆயித்தமலை தமிழ் வித்தியாலயத்துக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.



இப்பிரதேசத்தின் தண்ணீர் குடிப்பதற்கு உகந்த மட்டத்தில் இல்லாத நிலையில் அதற்கு தீர்வாக கென்ரிச் பினென்ஸ் நிறுவனம் நீர் சுத்திகரிப்பு சாதனமொன்றை இப் பாடசாலைக்கு வழங்கியுள்ளது. ஆயித்தமலை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்தது. இதன் மூலம் உள்ளூர்வாசிகளுக்கும் 24 மணித்தியாலமும் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இக்குடிநீர் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கென்ரிச் பினென்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் சிரான் வீரசிங்க, பொது முகாமையாளர் எரந்த அமல் கொடகே, பிரதிப் பொது முகாமையாளர் பிரதீப் பஸ்நாயக்க, நிறுவனத்தின் சமூகப் பொறுப்புகள் பிரிவின் பிரதானி மனோஜ் வாரியகொட, பிராந்திய தலைமை நிருவாகி ஜகத் கமமே, பொது சுகாதார பரிசோதகர், ஆயித்தமலை தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் பீ.பி பிரின்ஸ்லி ஆகியோருடன் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கென்ரிச் நிறுவன ஊழியர்களும் கலந்து கொண்டார்கள். சுமார் 45 ஆண்டுகளாக இலங்கை மக்களின் நம்பிக்கையை வென்றுள்ள கென்ரிச் பினென்ஸ் நிறுவனம் தமது சேவைகளை மேலும் விரிவுபடுத்தி மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்து விளங்குகிறது. மத்திய வங்கியின் உரிமம் பெற்ற நிதி நிறுவனமான வரையறுக்கப்பட்ட கென்ரிச் பினென்ஸ் நிறுவனம் இலங்கையின் நிதி நிறுவனங்கள் மத்தியில் என்றும் மிளிர்கின்ற நிறுவனமாக தனித்துவத்துடன் செயற்பட்டு வருகிறது.

தொடர்ச்சி...

## 'மாநகர அபிவிருத்திக்காகவே நாமும் வந்திருக்கிறோம்'

வேற்றுக் கண்ணோடு பார்க்க வேண்டாம் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மாநகரசபை உறுப்பினர் கு.காந்தராஜா தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை பகல் இடம்பெற்ற மட்டக்களப்பு மாநகரசபையின் 08வது அமர்வில் தனிநபர் உரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

'எமது கட்சி இந்த மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எவ்வித கூட்டும் இல்லாமல் போட்டியிட்டு மக்களின் கணிசமான வாக்குகளைப் பெற்றது. இந்த மாநகர சபையிலும் இரண்டாம் இடத்தைப் பெற்றது. இந்த மாவட்டத்தில் அனைத்து பிரதேச சபைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தயாராக இருக்கின்றது. எந்தப் பேரினவாதக் கட்சியுடனும் நாங்கள் சேர்ந்து ஆட்சி அமைக்கத் தேவையில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கு எமது கட்சி கடிதம் மூலம் தெரிவித்திருந்தது. அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்து எவ்வித நல்ல பதிலும் கிடைக்கவில்லை. இறுதியில் பத்திரிகைகளில் தான் பார்த்தோம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடன் எந்த விதத்திலும் இணைவதில்லை என்ற கருத்துக்கள் இடம்பெற்றிருந்தது.

இது இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் முடிந்து விடக் கூடிய விடயம் அல்ல. எதிர்வருகின்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலும் இதே விடயத்தைத் தான் செய்யப் போகின்றது. இச்சூழல் கிழக்கு மாகாணசபையில் இருக்காது. அது நிச்சயமாக ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும். எனவே தமிழ்த் தலைமைகள், தமிழ் கட்சிகள் எதிர்வருகின்ற தேர்தலை மிகவும் விழிப்பாக உற்று நோக்க வேண்டும்.

எமது கட்சியின் தலைவர் சந்திரகாந்தன் அவர்கள் இந்த மாவட்டத்தில் அபிவிருத்திப் பணியில் பாரிய பங்கினை வகித்தவர் என்பது யாரும் மறுக்க முடியாது. அந்த வகையில் அவரின் அபிவிருத்திப் பாதையைப் பலர் பின்பற்றி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நேரத்தில் எமது சபைக்குள்ளும், சபைக்கு வெளியிலும் எமது கட்சித் தலைவரை விமர்சிப்பதை சில உறுப்பினர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அவர்களுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுக்க நேரிடும்.

எமது மாநகரசபையில் ஒத்துழைப்புடன் சமஅளவான அபிவிருத்திப் பாதையை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதற்காகவே நாங்கள் இந்த சபைக்கு வந்திருக்கின்றோம். எனவே எங்களை வேற்றுக் கண்ணோடு பார்க்க வேண்டாம். நாங்கள் எமது மாநகரத்தின் அபிவிருத்திக்கு எமது பங்களிப்பு நூறு வீதம் இருக்கும் என்று தெரிவித்தார்.

## புதிய இடத்தில் கென்ரிச் பினென்ஸ் மட்டக்களப்பு கிளை



45 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பெருமை மிக்க வரலாற்றினைக் கொண்டுள்ள, வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான வரையறுக்கப்பட்ட கென்ரிச் பினென்ஸ் நிறுவனம் தமது மட்டக்களப்பு கிளை அலுவலகத்தினை வாடிக்கையாளர்களின் வசதி கருதி நவீன, கண்கவர் பல்வேறு சேவைகளையும் வசதிகளையும் கொண்டதாக புதுப் பொலிவுடன் இல 439/441, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு எனும் விலாசத்தில் அண்மையில் திறந்து வைத்துள்ளது. வரையறுக்கப்பட்ட கென்ரிச் பினென்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் திரு சிரான் வீரசிங்கவின் தலைமையில் அதன் பொது முகாமையாளர் எரந்த அமல் கொடகே, பிரதிப் பொது முகாமையாளர் பிரதீப் பஸ்நாயக்க, பிராந்திய தலைமை நிருவாகி ஜகத் கமகே ஆகியோரின் பங்கேற்புடன் மேற்படி கிளை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

வரையறுக்கப்பட்ட கென்ரிச் பினென்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் திரு சிரான் வீரசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய மேற்படி புத்தாக்க மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதோடு தலைநகருக்கு வெளியே நாடெங்கிலும் பரந்து காணப்படும் கிளை அலுவலக வலையமைப்புடன் கூடிய வரையறுக்கப்பட்ட கென்ரிச் பினென்ஸ் நிறுவனமானது, தமது அனைத்து கிளைகளையும் ஒற்றைப்படுத்தி ஒரே தோற்றத்துடன் அனுகூலங்கள் நிறைந்த, தரமான, நம்பிக்கை மிக்க, சிநேகபூர்வமான பல்வேறு சேவைகளை வழங்குகின்ற கருத்திட்டத்தின் 20 ஆவது கிளை அலுவலகம் என்ற வகையில் மட்டக்களப்பு கிளை முக்கியத்துவம் பெறுகிறது. உற்சாகமிக்க பணியாள் தொகுதியை கொண்டுள்ள இக் கிளை அலுவலகத்தின் பணிகளை புதிய பலத்துடன் முன்னெடுத்துச் செல்வதற்கு அனைத்தும் தயாராக இருப்பதாக மேற்படி கிளையின் முகாமையாளர் திரு சுதத் சேனாநாயக்க தெரிவித்தார்.

இங்கு, வாகன கனவை நனவாக்க வல்ல லீசிங், சிறு கைத்தொழில் உரிமையாளர்களுக்கு நிவாரணமளிக்கும் நுண் கடன் திட்டங்கள், வர்த்தகர்களை ஊக்குவிக்கும் வர்த்தக அனுகூலங்கள், ஆதன வர்த்தகம் போன்ற பல்வேறு சேவைகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. தமது வாடிக்கையாளர்களுடன் கொண்டுள்ள நம்பிக்கை மிக்க சிநேகபூர்வ உறவினை மேம்படுத்தும் வகையில் இக் கிளையின் ஊடாக குறைந்த வட்டி வீதத்தில் பொற் கடன் மற்றும் அடகுச் சேவையினையும் பெற முடியும்

தொடர்ச்சி...

## அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 14

அனைத்து தமிழ் கட்சிகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சியில் இப் பந்தி எழுத்தாளர் ஈடுபட்டார். முதற்படியாக ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஸ் பிரேமச்சந்திரனுடனும் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களான காலஞ்சென்ற மு.சிவசிதம்பரம் மற்றும் அ.தங்கத்துரை அவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தார். அப்போது தமிழர் விடுதலைக்கூட்டணியினரின் கொழும்பு அலுவலகம் கொழும்பு 05, ஹவலக் வீதியில் அமைந்திருந்தது. அந்த அலுவலக வீட்டில்தான் அவர்கள் தங்கியும் இருந்தனர். இந்த ஐக்கிப்படுத்தும் முயற்சிக்கு அப்போது பாராளுமன்ற உறுப்பினராக அல்லாத இரா.சம்மந்தன் அவர்களும் பச்சை விளக்குச் சமிஞ்ஞை காட்டியிருந்தார் என்பதையும் அதேவேளை இம்முயற்சிக்கு மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற ஜோசப் பரராசசிங்கம் எதிராக செயற்பட்டார் என்பதையும் இங்கு பதிவு செய்ய வேண்டியுள்ளது. (1989 ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி பட்டியலில் ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு தெரிவான காலம் சென்ற சாம் தம்பிமுத்து அவர்கள் 1990ல் கொழும்பில் வைத்து கொல்லப்பட்டதால் அந்த வெற்றிடத்துக்கு ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் தேர்தல் விதிகளின் படி தேர்தல் ஆணையாளரினால் நியமிக்கப்பெற்றிருந்தார்). -

-தொடரும்-

தொடர்ச்சி...

## சம்மாந்துறை எதிர் பழுகாமம் எதிர் போரைதீவு - ஒரு முக்கோணச்சமர்

மட்டக்களப்பு வாவி முன்பு பழுகாம ஆறு என்று அழைக்கப்பட்டதும், பழுகாம அரசு, மட்டக்களப்புப் பகுதியில் வலிமை வாய்ந்ததாக இருந்தது என்பதும் அவ்வரசின் ஆதிக்கத்துக்கு சான்று கூறுகின்றன. அதேவேளை, பண்டுதொட்டே தமிழரிடம் நிலவிவரும் சகோதரச்சண்டைகளுக்கும் நம்பிக்கைத் துரோகங்களுக்கும் நீண்ட கால வரலாறுண்டு என்பதையும் பால்டியசின் இந்தக் குறிப்புகள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. வரலாறு நம்மைப் பார்த்து மீண்டும் மீண்டும் கேட்பது ஒன்றே. எப்போது திருந்தப்போகிறீர்கள்?

தொடர்ச்சி...

## திருக்குறள் இன்பம் - 4

"செறிதோறும் சேயிழை மாட்டு (1110)"

ஒவ்வொரு தடவையும் புதிதாக ஒன்றைப்பற்றி அறிந்துகொள்ளும்போது, அதுவரை அதனைப்பற்றி நமக்கிருந்த அறியாமை தெரியவருவதைப்போல, ஒரு பெண்ணைச் சேர்கின்ற ஒவ்வொரு தடவையும் புதிது புதிதான இன்பத்தை உணர்வதால், அதுவரை அவளோடு அடைந்ததெல்லாம் இன்பமல்ல என்றே தோன்றும், என்பது குறளின் கருத்து.

## கவிதை

### கடல் வீடு

கடலே கடலே
அடிக்கடி
உன் கரையில் இருந்து
உன் முகம் பார்த்து
மகிழ்கிறேன்
எனக்கு நீ ஒரு
உதவிசெய்
என் பெயரால் சில அலைகளை எழுப்பி
தூண்களாக்கி அவைகளை எனக்கொரு
வீடு கட்டு
நான் உன்னோடு வாழ
விரும்புகிறேன்

கடலே கடலே
நுரை
அள்ளி எறியும்
அழகுப் பூந்தோட்டமே
உன்னில் நானொரு வண்ணத்துப்
பூச்சியாய்
பறக்க
பூந்தோட்டத்தில்
பயிர்களுக்குப் பசளையாய்
போடுகின்ற சாணியாக
இருப்பதும் ஒரு சுகம்

பெரிய வீடென்று
எனக்கொன்றும் தேவையில்லை
நான் உறங்க ஒரு தரை
காகிதத்தை வைத்து எழுத
ஒரு மேசை
இதற்கு சிறு இடம்
எனது நண்பர்கள் வருவார்கள்
அவர்கள் இருக்க
உடும்புபோல் ஓர் ஓடை
என்றாலும் போதும்

விளக்கிற்கு நிலா காணும்

நாலு அலை எழுப்பி
தூண்களாக்கி
ஒரு சின்ன வீடு கட்டு
நான் வாழ்ந்து
கவிதை கவிதையாய் வடிப்பேன்
உனக்கும் படித்துக் காட்டுவேன்

செவி உள்ள கடலே
கண் உள்ள கடலே
மனம் உள்ள கடலே
ஆயிரம் கை நீட்டி
என் கவிதை வாங்கி
மகிழ்வாய்
தரமாட்டேன் என்று சொல்லி
மடித்து எடுத்துக்கொண்டு
ஓடுவாய்

நீ கட்டும் வீட்டுக்கும்
உன் கரைக்கும் இடையில்
ஒரு சின்னப் பாதை வேண்டும்
இடையில் நான்
ஊருக்கு வந்து
தின்ற வீட்டுக்குத் துரோகம் செய்கின்ற
என் குணத்தைக் கொட்டிவிட்டு
ஊரே நீ ஊராக இரு
நான் புது வீட்டுக்குப் போகிறேன்
என்று பெருமையாக வந்து வந்து போக

--சோலைக்கிளி--




அரங்கம் செய்திகள்
விளப்பரங்களுக்கு
தொடர்பு : 071 399 909 1
arangamnews@gmail.com

இல.16, மத்திய வீதி, மட்டக்களப்பு.
TP: 0652222722,
Hot line: 0772072722
e-Mail: tiptopph@gmail.com

FCC SUPER MALL
4 Wings for Uplift Your life

உங்களின் வாழ்வை மேம்படுத்த நான்கு இறக்கைகள்...

PHARMACY — TIP TOP +HEALTH CARE+
SUPER MARKET — CITY CENTRE
BUDGET SHOP — CASH & CARRY — Young Forever
CAFETERIA — FCC Cafe

ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியாவசிய பொருட் தேவையை பூர்த்தி செய்ய அன்புடன் வரவேற்கின்றோம்.





Printed and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa